www.tamilarangam.net

# தாய்மொழியில் படிக்க வைப்போம்



முனைவர் க. முத்தையா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# தாய்மொழியில் படிக்க வைப்போம்

SEELAN BOOKS
NORWAY
SIGNATURE

முனைவர் க. முத்தையா

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை - 600 098.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**THAAIMOZHIYIL PADIKKA VAIPPOM**
**by**
***Dr.K. MUTHAIAH***

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு

முதல் பதிப்பு : செப்டம்பர், 2000

© புதிப்பகத்தாருக்கு

**Code No : A1091**
**ISBN : 81-234 - 0678 - 9**

**விலை : ரூ.40.00**

ஒளி அச்சு : ஹைடெக் கிராபிக்ஸ், சென்னை-12

அச்சிட்டோர் : அய்யனார் ஆஃப்செட்
18வது தெரு,
என்.எஸ்.கே. நகர்,
சென்னை-600 106.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பதிப்புரை

மாணவர்களின் தாய்மொழிதான் கற்பதற்கும் புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்துவதற்கும் அறிவு வளர்ச்சிக்கும் சிறந்தது என்று "யுனெஸ்கோ நிறுவனம்" சொல்கிறது. ஆங்கிலம் பேசும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஆங்கிலம் பேசாத மக்களுக்கு அவரவர் தாய்மொழியில் கல்வி புகட்ட 1976-ல் சட்டம் இயற்றப்பட்டது. தாய்மொழியில் கற்கின்றவர்கள் விரைந்து கற்கின்றனர் என்றும், அறிவுத் தெளிவு பெறுகிறார்கள் என்றும் உறுதிப்படுத்தப்படுகிறது.

முன்னேறிய நாடுகளாகக் கருதப்படும் பல நாடுகளின் உற்பத்தி முன்னேற்றத்திற்கு அங்கு நிலவும் தாய்மொழிக்கல்வியே முக்கியக் காரணமாகும். தாய்மொழி பெறாத அறிவு நிலையைத் தனிமனிதர் சிலர் பெறலாம். ஆனால், ஒரு சமுதாயம் பெற இயலாது. மூளையில் தோன்றும் சிந்தனை முதலில் தாய்மொழிச் சொற்களாகவே வடிவம் பெறுகின்றன.. அந்நிய மொழியோடு மண்டையைக் குழப்பிக் கொள்ள வேண்டியுள்ளதால் பாடத்திலுள்ள அடிப்படைக் கருத்துகள் மாணவர்கள் மனத்தில் பதிய முடியாமல் போகிறது.

மனிதனை அச்சமில்லாதவனாக உருவாக்குவது தாய்மொழி வழிக் கல்விதான். வேற்று மொழிவழியாகக் கல்வி அளிப்பதன் மூலம் தாய்மொழியின் பயன்பாடு குறைகிறது. தன்னறிவு தாய்மொழி மூலமே வளம் பெறும் என்பது உளவியல் அறிஞர்களின் ஆய்வு முடிவாகும். குழந்தையின் உடல் வளர்ச்சிக்குத் தாய்ப்பால் எப்படியோ அப்படியே மனிதனின் மன வளர்ச்சிக்குத் தாய்மொழியே இயற்கையானது என்பது விளங்கும். ஆங்கிலேயரின் ஆட்சியை அகற்றியதுபோல் ஆங்கில மொழியையும் அகற்ற வேண்டும் என்கிறார் காந்தியடிகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாய்மொழிகள் அனைத்தையும் உயர்கல்விக்குரிய மொழிகளாக்கிவிட்டால் ஆங்கிலம்தானே அகன்றுவிடும். தாய்மொழிகள் பயிற்று மொழியாவதனால் மொழிவெறி தூண்டப்படுகிறது என்ற கருத்து உள்ளது. தமிழ்மொழிக் கல்வியை வெற்றி பெறச் செய்ய வேண்டுமானால் தமிழகத்தில் தமிழ் வழிப்பயின்றோருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கவேண்டும்.


தனியார் துறைகளில் பெரிய நிறுவனங்கள் அனைத்தும் ஆங்கிலத்தில்தான் அலுவல்களை நடத்துகின்றன. மைய அரசின் அலுவலகங்கள் ஆங்கிலம் அல்லது இந்தியில் தமது அலுவல்களை நடத்துகின்றன. தற்பொழுது இருக்கும் சூழலில் இளைஞர்களின் விருப்பத்திற்கு விட்டுவிட்டால் ஆங்கிலம் வழியாகப் பயில்வதே எளிது என்பார்கள். ஏனென்றால் நாம் பல தலைமுறைகளாக அவ்வாறு வளர்க்கப்பட்டுவிட்டோம் என்று காந்தியடிகள் சொல்லியுள்ளார். தாய்மொழிக் கல்வியைக் கட்டாயப் படுத்தவேண்டும் என்று காமராஜர் சொல்கிறார். தாய் மொழியே பயிற்று மொழி என்று வந்துவிட்டால் தேவையான புத்தகங்களை வெளியீட்டாளர்கள் வெளியிடுவார்கள்.

மேற்கண்ட முத்திரை வாக்கியங்களை உள்ளடக்கியது தாய்மொழியில் படிக்க வைப்போம் என்ற இந்நூல். இந்நூலை **முனைவர் க. முத்தையா** அவர்கள் திறம்பட எழுதியுள்ளார்கள். ஆசிரியரின் ஆய்வு மிகவும் தெளிவாக உள்ளது. இன்றைய சூழலில் **"தாய்மொழியில் படிக்க வைப்போம்"** என்ற கருத்து மிகவும் சர்ச்சைக்குரியதாக உள்ளது. இக்கருத்துக் குறித்து இந்நூல் கூறுவனவற்றை வாசகர்கள் அறிந்திருக்க வேண்டும். இன்றைய தேவை கருதி எமது நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் இந்நூலை வெளியிடுகிறது.

- ***பதிப்பகத்தார்.***

www.tamilarangam.net

**படையல்...**



தேமதுரத் தமிழோசை உலகெலாம் ஒலிக்க
ஒய்வு உறக்கமின்றி உழைத்து வரும்
தமிழன்னையின் தவப் புதல்வராம்
**மாண்புமிகு மு. தமிழ்க்குடிமகனார்** அவர்களின்
ஒப்பிலாத் தமிழ்ப்பணிக்கு இந்நூல் காணிக்கை.

முனைவர் க. முத்தையா
நூலாசிரியன்.

SEELAN BOOKS NORWAY SIGNATURE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆசிரியர் முன்னுரை

"நீந்தக் கற்றுக் கொண்டபிறகுதான் நீரில் இறங்குவோம்" என்று கரையிலிருந்தபடியே அடம்பிடிக்கும் ஆங்கிலச் சார்பாளர்களுக்கு எழுத்து வழிப் பதில் சொல்வதற்காகத்தான் **"தாய்மொழியில் படிக்க வைப்போம்"** என்னும் இந்நூல் எழுதப்பட்டது.

கொள்கையளவில் அன்னவராலும் ஒப்புக்கொள்ளப்படும் "தாய்மொழிவழிக்கல்வி" எனும் கல்வித் தத்துவம் நடைமுறையில் பேரளவில் புறக்கணிக்கப்படுகிறது. தமிழ் எதிர்ப்பாளர்கள் பலவிதம்; இல்லாத தடைகளை இவர்களாக எண்ணிக்கொண்டு எதிர்ப்பவர் சிலர்; இருக்கின்ற தடைகளை நீக்கவிடாமல் தடுப்பவர் சிலர்; வணிக நோக்கில் தங்கள் வாழ்க்கை பாழ்பட்டுவிடுமே என்று வழக்குத் தொடுப்பவர் சிலர்; உண்மை நிலை தெரியாது சாய்ந்தால் சாய்கிற பக்கம் சாயும் மந்தைகளைப் போல் அறியாமையில் ஆங்கில விரும்பிகளாய் ஆனோர் சிலர். இப்படி ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகமும் ஆங்கிலத்தின் பிடியில் சிக்கியுள்ள இன்றைய சூழலில் இதுபோன்ற ஒருநூல் வெளிவருவது அவசியமெனப் பட்டது.

தமிழகத்தில் பிறந்து தமிழராய் வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவருக்கும் - குறிப்பாகப் பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் மீண்டும் தமிழின் தேவையை வலியுறுத்துவதில் இந்நூல் கணிசமான பங்களிப்பைச் செய்யும் என்று நம்புகின்றேன்.

நான் ஆராய்ச்சியாளனாகப் பாண்டிச்சேரிப் பல்கலைக் கழகத்தில் இருந்தபோது, என்னுள் தமிழார்வத்தையும், தமிழ்ப் பண்பாட்டையும் ஊட்டி வளர்த்து - என்னை வளர்த்த இரண்டாம் அன்னையாக இருந்துவரும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் **டாக்டர் க.ப. அறவாணன்** அவர்களுக்கும், **பேராசிரியர் அறிவுநம்பி** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் வளர்ச்சி இயக்குநர் **முனைவர் ம. இராசேந்திரன்** அவர்கள் இந்நூல் உருவாக்கத்தில் என்னை ஊக்கப்படுத்தியதோடு அல்லாமல் நூல் வெளியிட அனுமதியும் வழங்கினார். அவருக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள். இந்நூலையும் என்னையும் அறிமுகப்படுத்திய தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.கா. பாலச்சந்திரன் இ.ஆ.ப.** அவர்களுக்கு என் நன்றி!

இந்நூலை அழகுற வெளியிட முன்வந்த, **நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்** நிர்வாக இயக்குநருக்கும், செயலாளருக்கும் உடன் ஒத்துழைப்பு நல்கிய நிறுவனத்தின் ஏனைய நண்பர் களுக்கும் அன்பும் நன்றியும் உரியதாகுக!

தமிழ்கூறு நல்லுலகம் **''தமிழர் சமுதாயம்''** என்ற எனது முந்தைய நூலை ஏற்றதுபோல், என்.சி.பி.எச்.இன் இந்த நூலினையும் ஏற்று என் தமிழ்க்கடமைக்குத் துணைநிற்கும் என்று நம்புகின்றேன்.

அனைவருக்கும் மீண்டும் நன்றிகள்!

தருமபுரி
8.5.2000

**முனைவர் க. முத்தையா**
உதவி இயக்குநர்
தமிழ் வளர்ச்சித்துறை
தருமபுரி மாவட்டம்.

www.tamilarangam.net

# பொருளடக்கம்

1. தாய்மொழியில் ஏன் படிக்க வேண்டும்? ..... 1

2. உளவியல் நோக்கில் தாய்மொழி வழிக்கல்வியின் முக்கியத்துவம் ..... 14

3. தமிழகமும் - தமிழ்வழிக் கல்வியும் ..... 24

4. தாய்மொழி வழிக்கல்விச் சிக்கல்களும் தீர்வுகளும் ..... 89

5. தமிழ் வழிக் கல்வி சிறக்க சில பரிந்துரைகள் ..... 142

6. துணை நூற் பட்டியல் ..... 147



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 1. தாய்மொழியில் ஏன் படிக்க வேண்டும்?

கல்வித்துறையில் பாடங்களைக் கற்பதற்கும் கற்பிப்பதற்கும் எந்தமொழி ஊடகமாக இருந்து பயன்படுகிறதோ அந்த மொழியே பயிற்றுமொழியாகும். வகுப்பறையில் கற்றுக் கொடுப்பதற்குரிய மொழியாக எந்த மொழி அமையலாம் என்ற வினாவிற்கு "யுனெஸ்கோ" போன்ற உலகளாவிய கல்வி நிறுவனங்கள் படிக்கும் மாணவனின் தாய்மொழியே அமையவேண்டும் என்பதைப் பல்வேறு ஆய்வுகளின் வழி உறுதிப்படுத்தியுள்ளன.

கற்பதைச் சரியாகப் புரிந்துகொண்டு கற்பதற்கும், புதிய கண்டுபிடிப்புக்களை நிகழ்த்துவதற்கான படைப்பாற்றலைப் பெறுவதற்கும், கல்விக்கும் சமூகத்திற்குமான ஒன்றிணைப்பை ஏற்படுத்துவதற்கும், கற்பதை இயற்கையாக, எளிதாக, விரைவாக, முழுமையாகக் கற்பதற்கும், பிறமொழி வழியாகக் கற்பதில் காலத்தை வீணடிக்காமல் முழு நேரத்தையும் அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதற்கும் கற்கும் மாணவனின் தாய்மொழியே உகந்த பயிற்று மொழியாக அமையும் என்பதை, கல்வியியல், உளவியல், சமூகவியல் ஆகிய துறைகளின் வல்லுநர்கள் முரண்பாடு எதுவுமின்றி ஒருமித்த கருத்தாக முன் வைக்கின்றனர்.

இவ்வாறு, பொதுநிலையில் பல்வேறு நன்மைகள் கருதி வலியுறுத்தப்படும் தாய்மொழிவழிக் கல்வித்தத்துவத்திற்கான தேவையைச் சிறப்பு நிலையில் சமூகவியல், கல்வியியல், உளவியல் ஆகிய துறைகளோடு தொடர்புபடுத்திக் காணலாம்.

## தாய்மொழி வழிக்கல்விக்கான சமூகவியல் காரணங்கள்

கல்வியைச் சமூகமயமாக்க வேண்டுமென்றால் அந்தச் சமூகத்தினரின் மொழியிலேயே கல்வி வழங்கப்பட வேண்டும்.

www.tamilarangam.net



கற்றோருக்கும் சமூகத்தின் மற்ற பிரிவினருக்கும் இடையே இடைவெளி இருக்கக்கூடாது. அப்படியிருந்தால் கற்றோரால் அச்சமூகத்திற்குப் பயன் இல்லை என்று பொருள்படும். கல்வியும் வாழ்வும் இணைந்து இருத்தல் வேண்டும். கற்கும் கல்வியும், கல்வியைப் பெறுவோரும் அவர்கள் வாழும் சமுதாயத்திற்கு ஒத்ததாகவும் ஒத்துடையவர்களாகவும் இருக்க வேண்டுமென்றால், அவர்களின் தாய்மொழியில் கல்வி வழங்கப்படவேண்டும். ஏனென்றால், கல்வியைச் சமூகமயமாக்குவதில் அச்சமூகத்தின் மொழி முக்கியப் பங்காற்றுகிறது.

சான்றுக்காகச் சொல்ல வேண்டுமென்றால், ஆங்கிலேயர்கள் பெரும்பான்மையினராக வாழும், அவர்களே ஆட்சி நடத்தும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஆங்கிலம் பேசாத மக்களுக்கு அவர்களின் தாய்மொழியிலேயே கல்வி புகட்டவேண்டும் என்று 1976-இல் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் வந்தபின்பு கல்வி கற்பவரின் தரத்தை ஆராய்ந்தவர்கள், "தாய்மொழியில் கற்பவர்கள் விரைந்து கற்கின்றனர் என்பதையும், அவர்தம் அறிவு தெளிவு பெற்றதாக உள்ளது என்பதையும் முடிவாகச் சொன்னார்கள்." கற்பிக்கப்படும் கல்விக்கும் கற்கும் சமுதாயத்திற்கும் தொடர்பு இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காக ஆங்கிலேயர் பெரும்பான்மையினராக இருந்தும் ஆட்சியாளர்களாக இருந்தும் அவர்தம் நாட்டில் ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு அவரவர்களின் தாய்மொழியில் கல்வி அளிக்கப் பெறுகிறது.

கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் பின்வரும் காரணத்திற்காகக் காந்தியடிகளுக்கு வணக்கம் செலுத்துகிறேன் என்று சொன்னாராம்.

> **"நீங்கள் அரசியலுக்கு வருவதற்கு முன்னால் பல பெரியவர்கள் சுதந்திரத்தைப்பற்றிப் பேசினார்கள். அங்குக் கூடியிருக்கும் கூட்டமோ மிகப் பெரியது. அவர்கள் பேசியதோ கோடிக்கணக்கான மக்களின் உரிமையைப் பற்றி; ஆனால் அவர்கள் பேசியதோ மக்களுக்குப் புரியாத மொழியில்; அதனால் பலன்**

www.tamilarangam.net



**இருக்குமோ? ஆனால், நீங்கள் வந்தவுடன் மக்களுடைய மொழியிலேயே மக்களோடு உறவாடிப் பேசினீர்கள். அவர்களும் புரிந்து கொண்டு சுதந்திரப் போரில் பங்கு கொண்டார்கள். அதனால் தான் வணக்கம் செலுத்துகிறேன்" என்றார்.**

இம்மேற்கோள், கல்வித் தத்துவத்திற்கு மட்டுமின்றி எவ்விதத் தத்துவமாக இருந்தாலும் புரிதலுக்கும், கருத்துப் பரவலுக்கும் சமூகத்தின் மொழியே உகந்தது என்பதைச் சுட்டுகிறது. எனவே, கல்வியின் பயன் சமூகத்தை எட்டவேண்டுமாயின் அச்சமூகத்தின் மொழியில் கல்வி வழங்கப்பட வேண்டும்.

தாய்மொழிவழிக் கல்வி என்பது ஒரு கல்வித் தத்துவம் என்பதோடு, சமூகப் பண்பாட்டு வளர்ச்சியையும், மன நிறைவையும் நோக்கமாகக் கொண்டதும் ஆகும். மொழி என்பது ஒரு கருத்துப் புலப்படுத்தக் கருவி என்று சொல்லப்படுவது மொழி குறித்துச் சொல்லப்படும் மேலோட்டமான விளக்கமாகும். ஒருவனின் தாய்மொழி என்பது அவன் பிறந்த மண்ணோடும் வாழும் சமூகத்தோடும் தொடர்பு கொண்டது. அவனது நிழலைப் போல அவனது ஆளுமையிலிருந்து பிரிக்க முடியாதது. அவன் அம்மொழி பேசும் சமூகத்தின் உறுப்பினன். அவ்வினத்தின் ஆற்றலை, உணர்வுகளை, நினைவுகளை, வரலாறுகளை அந்த இனத்தின் மொழிவழியாகத்தான் சொந்தம் கொண்டாடுகின்றான். எனவேதான், அவன் வாழும் சமுதாயத்தில் அவனுடைய பங்கு சமுதாயப் பங்காகிறது. இங்குதான் மொழி என்பது சமூகப் பண்பாட்டை வளர்த்தெடுக்கும் கருவியாகச் செயல்படுகிறது: சமூகத்தில் மொழியின் பயன்பாட்டுத் தளங்கள் சுருங்கும்போது அவ்வினத்தின் பண்பாட்டுத் தொடர்ச்சி அறுபட வாய்ப்புள்ளது.

மொழியைத் தேசிய இன எழுச்சியின் வடிவமாக **இலெனின்** பார்க்கிறார். அவர்,

www.tamilarangam.net



"மனித சமுதாயம் கூடி வாழ மொழி மிகவும் இன்றியமையாதது; பல்வேறு வகுப்புக்களாகப் பிரிந்து உரிமையுடன் வாழ மொழிவளர்ச்சி தவிர்க்க முடியாதது. தேசிய மாநிலங்கள் அமைவதற்குப் பாடுபடும் ஒவ்வொரு தேசிய இயக்கமும் இன்றைய முதலாளித்துவச் சூழலில் மொழிகளின் தேவைகளை வலியுறுத்திப் பாடுபட வேண்டியுள்ளது. மொழி வளர்ச்சி பெறாத நிலையில் அந்தக் குறிக்கோளைத் தேசிய இயக்கங்கள் அடைந்திட இயலாது"

என்று விளக்குகிறார்.

ஒவ்வோர் இனமும் தனது மொழி வழியாகத்தான் தன் தலைமுறைக்கு வழிவழியாகப் பண்பாட்டு எண்ணத் தொடர்பை ஏற்படுத்துகிறது. வேற்றுமொழி கல்வி மொழியாக அமைவது கருத்தைப் புலப்படுத்தும் கருவி என்ற அளவில் மட்டுமன்று; அம்மொழி பேசும் இனத்தின் பண்பாட்டுச் சாயலையும் அது வழங்குகிறது. இதனால் வேற்றுமொழியோடு வேற்று இனப் பண்பாட்டுக் கலப்பும் மேலோங்குகிறது. எதிர் நிலையில் அச்சமூகத்தினரின் தாய்மொழியும் அம்மொழி பேசும் இனத்தின் பண்பாடும் பின்னுக்குத் தள்ளப்பட்டுக் காலப் போக்கில் அழிந்து மறைகிறது. எனவே, தாய்மொழிவழிக் கல்வி என்பது ஓர் இனத்தின் சமூகப் பண்பாட்டை நிலைநிறுத்துவதற்கான இன்றியமையாத் தேவை என்பதை அனைவரும் உணர வேண்டும்.

அடுத்ததாக, தாய்மொழிக் கல்வியின் முக்கியமான செயற்பாடுகளில் ஒன்று கல்வியைப் பரவலாக்குவது ஆகும். குறிப்பிட்ட சிலரோ, குறிப்பிட்ட சில இனங்களோ மட்டும் கல்வி கற்க வேண்டும் என்ற நிலை இருக்குமானால் எந்த மொழியையும் பயிற்றுமொழியாக்கலாம். ஆனால் கல்வியை எல்லா மக்களுக்கும் பரவலாக்க விரும்பினால்-கல்வி கற்கும் வாய்ப்பை எல்லா வகுப்பினருக்கும் வழங்க விரும்பினால் அவர்களின் தாய்மொழிகளைப் பயிற்று மொழிகளாக்குவதன் மூலம் மட்டுமே அது எய்தப்படும்.

www.tamilarangam.net



கல்வியைப் பரவலாக்குவதோடு கல்வி வாயிலாகப் பெறும் வேலை வாய்ப்பைப் பரவலாக்குவதற்கும் தாய்மொழி வழிக் கல்வி பயன்படும் என்பதை முலாயம்சிங் யாதவ் பின் வருமாறு சுட்டிக் காட்டுகிறார்.

"அரசு நடத்தும் பள்ளிகளை விட ஆங்கில வழிப் பள்ளிகள் சிறப்பானவை. ஆயினும் செலவு அதிகம் என்பதனால் அவை சராசரி விவசாயியின் மகனுக்குக் கட்டுபடியாவதில்லை. எனவே, விடுதலை பெற்று ஐம்பது ஆண்டுகளாகியும் கிராமப்புற மக்கள் முக்கியமான, நல்ல ஊதியமுள்ள பதவிகளைப் பெறமுடிவதில்லை. இந்திய ஆட்சிப்பணி அல்லது அதற்குச் சமமான பணிகளில் அமர்வதென்றால் அது ஒரு சிலருக்கே உரியதாக அமைகிறது. உண்மையான கிராமவாசி ஐ.ஏ.எஸ். ஆக முடிவதில்லை. தாய்மொழிவழிக் கல்வியை அறிமுகம் செய்தால் தான் குடியரசுத் தலைவர்கள், பிரதமர்கள், அமைச்சர்கள், தொழிலதிபர்கள் ஆகியோரின் பிள்ளைகளால் கிராமவாசிகளின் பிள்ளைகள் பாதிக்கப்படாமல் இருப்பர்."

யாதவின் கருத்துக்கள் சமூகத்தில் பெரும்பான்மையினராக உள்ள மக்களின் நலனில் அக்கறை கொண்டவையாகும். குறிப்பிட்ட சிலரிடமும் குறிப்பிட்ட சில இன மக்களிடமும் மட்டுமே தங்கி விடும் கல்வியை, சமூகத்தின் எல்லா நிலை மக்களுக்கும், குறிப்பாகக் கீழ் நிலையில் உள்ள மக்களுக்கும் உரிய ஒன்றாக ஆக்குவதில் தாய்மொழி வழிக் கல்வி முக்கியப் பங்காற்றும். ஆக, கல்வி பரவலாக்கப்பட வேண்டுமென்றால் தாய் மொழியில் கல்வி வழங்கப்பட்டாக வேண்டும்.

அடுத்ததாக, தாய் மொழி வழிக் கல்வியின் மற்றொரு செயல்பாடு மக்களை உரிமையுடன் வாழ வழி வகுப்பதாகும். அந்தந்த மாநிலத்தில் அந்தந்த மாநில மொழியில் கல்வி வழங்கப்படும் பொழுதுதான் கல்விக்காகச் செலவிடப்படும்

www.tamilarangam.net



செலவினங்கள் அந்தந்த மாநில மக்களுக்குப் பயன்படுவதாக அமையும். மனிதவள மேம்பாடு குறித்துச் சிந்திக்கும் இன்றைய நாளில் அந்தந்த மாநில மக்களுக்கு மன வலிமையும் அறிவுத் தெளிவும் ஏற்படுவதற்குத் தாய்மொழிவழிக் கல்வி என்பது கட்டாயத் தேவையாகிறது.

தமிழகத்தில் தமிழுக்குரிய இடத்தை ஆங்கிலத்திற்கு மட்டுமன்றி வேறு எந்த மொழிக்கும் கொடுத்துவிட முடியாது. இதைப் போலவே, கேரளத்தில் மலையாளத்திற்குரிய இடம் மலையாளத்திற்கே தரப்பட வேண்டும். எந்த ஒரு மாநிலமும் தன்னுடைய மொழிக்குரிய இடத்தை வேறு எந்த ஒரு மொழிக்கும் தருவது என்பது கூடாது. அது அடிமைத் தனத்தின் சின்னமாகவே கொள்ளப்படும். அப்படி வேறொரு மொழிக்கு இடம் கொடுத்துவிட்டு அந்த மாநில மொழியைப் புறந்தள்ளுவது என்பது அந்த மாநில மக்களை ஏமாற்றுவதாகும்; இழிவுபடுத்துவதாகும். இச்செயல் அந்த மாநில மக்களை ஊமையராகவும் செவிடராகவும் ஆக்கி அவர்களை முடமாக்கிவிடும். உயர்கல்வியைப் பொறுத்த வரையில் தங்களுக்குரிய இடத்தைப் பெறுவதற்காக மாநில மொழிகள் இன்னும் காத்துக் கொண்டிருப்பதால் ஆங்கிலம் பேசுபவர்களின் குத்தகையாக இந்தியக் கல்வித் துறை ஆகிவிட்டது. இப்போக்கில் மாற்றம் ஏற்பட்டு, மாநில மக்கள் முழு உரிமையுடன் வாழ கல்வித் துறையின் எல்லா நிலைகளிலும் தாய் மொழி வழிக்கல்வி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

நாட்டின் பெரும்பாலான மக்கள் தொழில்நுட்பம், பொருளுற்பத்தி, விற்பனை முதலியவற்றில் ஈடுபட்டுள்ளனர். நாட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கும், பொருட்களின் உற்பத்தியையும் அவற்றின் தரத்தையும் பெருக்குவதற்கும் மக்களிடம் மிகுதியான திறமை இருக்க வேண்டும். இப்பணிகளைத் திறமையாகச் செய்வதற்கு இவற்றில் சிறந்த பட்டறிவுள்ள நபர்கள் தேவை. இப்படிப்பட்ட அறிவுள்ளவர்களைத் தாய்மொழி வழிக்கல்வி மூலமாகத்தான் உருவாக்கமுடியும். அதன் மூலமாகத் தான் தகுந்த வாய்ப்புக்களையும், நேரடி வாய்ப்புக்களையும் ஒரு

www.tamilarangam.net



மாணவன் பெற முடியும். இன்று உலகில் முன்னேறிய நாடுகளாகக் கருதப்படும் பல நாடுகளின் உற்பத்தி முன்னேற்றத்திற்கு அங்கு நிலவும் தாய்மொழி வழிக் கல்வியே முக்கியக் காரணமாகும்.

தொழில் துறையில் மிக விரைவாக முன்னேறி நாட்டை முன்னேற்ற வேண்டுமாயின் பின்வரும் மூன்று நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

1. மக்களிடம் அறிவியல் மனப்பான்மையும் அறிவியல் அணுகுமுறையும் வளர வேண்டும்.
2. சமூகத்தின் அனைத்து நிலை மக்களும் கல்வியறிவு பெற வேண்டும்.
3. அறிவியல் தொழில்நுட்பத் துறைகளில் ஏற்படும் வளர்ச்சிகள் அனைத்தும் மக்கள் மொழியில் இடம் பெற வேண்டும்.

ஆங்கிலத்தில் உள்ள அறிவுக் கருவூலங்களை ஒரு சிலர் பயன்படுத்தலாம். அதன் வழிப் பயன் பெறலாம். ஆனால் சிலர் பெற்ற அறிவு சமூகம் பெற்ற அறிவாகிவிடாது. அறிவியல் தொழில் நுட்ப அறிவும், பயிற்சியும் சமுதாயத்தின் வாழ்வோடும் மரபோடும் இணைந்து இயல்பான கூறாக ஆக வேண்டும். அதை ஒரு சமுதாயம் தனது தாய்மொழி மூலம்தான் பெற முடியும். தாய்மொழி பெறாத அறிவு நிலையைத் தனிமனிதர் சிலர் பெறலாம். ஆனால், ஒரு சமுதாயம் பெற இயலாது. எனவே சிலர் பெற்ற அறிவியல் அறிவை ஒட்டுமொத்தச் சமூக அறிவாக ஆக்குவதற்குத் தாய் மொழியே உரிய வாகனமாகப் பயன்படும். எனவே, தாய்மொழி வழியே கல்வி அளிப்பதன் மூலம் உற்பத்தியில் முன்னேற்றம், சமுதாய முன்னேற்றம், நாட்டு முன்னேற்றம் ஆகியவற்றுக்கான அடித்தளத்தை அமைக்கலாம்.

## கல்வியியலுக்கு உகந்தது தாய்மொழியே!

மாணவன் எந்த மொழியோடு வளர்ந்தானோ, எந்த மொழியோடு வாழ்கின்றானோ, அந்த மொழியே அவனின் சுய

www.tamilarangam.net


சிந்தனைக்கும் அச்சிந்தனையின் வெளிப்பாட்டிற்கும் உகந்த மொழியாக அமையும். கற்றல் அனுபவங்களாகிய படித்தல், கேட்டல், வெளிப்படுத்தல் ஆகியவற்றை மிகுதியாகப் பெறுவதற்குத் தாய்மொழியே மிகுதியான வாய்ப்பளிக்கும்.

**மூளையில் தோன்றும் சிந்தனை அடுத்த நிலையில் தாய்மொழிச் சொற்களாகவே வடிவம் பெறுகின்றன**

என்பது ஆராய்ச்சியின் வழிக் கண்டுபிடிக்கப்பட்ட உண்மையாகும்.

கற்பித்தலின் நோக்கமே சிந்தனையைத் தூண்டுவது தான். சிந்தனைத் தூண்டலின் விளைவாக ஆளுமை வளர்ச்சியும், தற்சிந்தனையும் மேலோங்கி உயர்நிலையைப் பெற இயலும். சிந்தனை மொழியாக - சிந்தனைக்குரிய கருவியாகத் தாய்மொழி இருப்பதனால் கற்றல், கற்பித்தல் முறையியலுக்கு மிகுந்த வாய்ப்பாக அமையும்.

ஆங்கிலம் போன்ற பிற மொழிகளைக் கற்பதற்கும் அம்மொழிகள் வழியாகக் கற்பதற்கும் வேறுபாடு உண்டு. பிறமொழி வழியாகக் கற்கும்போது அம்மொழியே தடையாக அமைந்து அறிவு வளர்ச்சியைத் தடுக்கிறது. கற்கும் பொருளையோ, பாடத்தையோ விடுத்து முதலில் அந்நியமான மொழியைக் கற்க வேண்டியுள்ளது. கற்க விழையும் பாடத்தை வேற்று மொழியானது ஒரு திரைபோல மூடி மறைத்துவிடுகிறது. இந்தத் திரையை முதலில் நீக்க வேண்டியுள்ளது. இதனால் மிகுதியான நேரமும், முயற்சியும் வீணடிக்கப்படுகின்றன. இவ்வீணடிப்பைப் பாட அறிவிற்குப் பயன்படுத்தினால் மிகுந்த பயனளிக்குமன்றோ!

கற்பிக்கும் ஆசிரியருக்கும் தாய்மொழி மூலம் கற்பிப்பதே எளிதானது. வேற்றுமொழி வழியாகக் கற்பிக்கும் பொழுது இரு மொழி பெயர்ப்புக்கள் தேவையாகின்றன. ஆசிரியர் முதலில் தனது கருத்தை வேற்றுமொழியில் மொழி பெயர்க்க வேண்டும். அடுத்ததாக மாணவர் ஆசிரியரின் கருத்தைத் தமது மொழியில் மொழி பெயர்த்துக் கொள்ள வேண்டும். இது சுற்றி வளைத்துக் கற்பிக்கும் முறையாகும். இதில் உண்மையான பொருளை உணர்ந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


கொள்வதற்கு மாணவன் தலையைப் பிய்த்துக் கொள்கிறான். இதனால், ஆசிரியரின் கருத்து மாணவன் மனதில் பதிவதில்லை. முழுமையாகப் புரிந்து கொள்ளாத நிலையில் மாணவனுக்குக் குழப்பமும் தன்னம்பிக்கைக் குறைவும் ஏற்படுகின்றன.

வேற்றுமொழி வழிக்கல்வியால் ஆசிரியர், மாணவர் ஆகிய இரு திறத்தினருமே ஆக்கப்பூர்வமாகச் சிந்தனை செய்யவியலாது போய்விடுகிறது. அவர்களுடைய மூளைகள் களைத்துப் போகின்றன. ஆசிரியர்களுக்கும் கூடப் புதிய வழியில் சிந்தனை செய்வது தேவையற்றதாகி விடுகிறது. அந்நிய மொழியோடு மண்டையைக் குழப்பிக் கொள்ள வேண்டியுள்ளதால் பாடத்திலுள்ள அடிப்படைக் கருத்துக்கள் மாணவர்கள் மனதில் பதியமுடியாமல் போகிறது. சொல்வோருக்கும் கேட்போருக்குமிடையில் வேற்றுமொழியென்னும் திரை இருப்பதால் ஆசிரியர்கள் எதைச் சொன்னாலும் மாணவர்கள் கேட்டுக் கொள்ளும் நிலையில் உள்ளனர். பெரும்பாலான மாணவர்கள் மனப்பாடம் செய்வதோடு நின்று விடுகின்றனர். தேர்வில் வெற்றி பெற வேண்டிய கட்டாயம் இருப்பதனால் புரிந்து கொள்ள முடியாத பகுதியினையும், அச்சடிக்கப்பட்ட பிறர் தம் விடைகளையும் அப்படியே மனப்பாடம் செய்கின்றனர். புரிந்து கொள்ளாமல் மனப்பாடம் செய்த விடைகளே விடைத்தாள்களில் இருப்பதை அவற்றைத் திருத்துவோர் உணருவர்.

வினாத்தாள் கடினமாக உள்ளது என்று மாணவர்கள் அவ்வப்போது கூறுவதற்குப் பொறுக்கி எடுத்த சில விடைகளை மட்டுமே அவர்கள் மனப்பாடம் செய்து வைத்திருப்பதே காரணமாகும். கற்கும் பாடத்தின் உட்பொருளை மாணவர்கள் முழுமையாக உணர்ந்து கொள்ளாது போவதற்கு அடிப்படையான காரணம், அது கற்றுத்தரப்படும் அந்நிய மொழியை அவர்களால் உணர முடியாததுதான். தாய்மொழி கல்விமொழியாக அமையும் போது, இது போன்ற சிக்கல்களுக்கு இடமே இருக்காது.

தாய்மொழி வழியாக மட்டுமே கல்வியை முழுமையாக அளிக்க இயலும் என்பதிலும், வேற்றுமொழியால் உண்மையான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கல்வியை வழங்க முடியாது என்பதிலும் அளவற்ற நம்பிக்கை கொண்டிருந்த காந்தியடிகள்,

"நம் நாட்டுக் கல்வி அந்நியப் பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது; நம் நாட்டுப் பண்பாட்டை அறவே நீக்கும் தன்மை கொண்டது; சொற்பயிற்சியையும் மனப்பயிற்சியையும் பற்றிக் கவலைப்படாதது; மூளையில் சில செய்திகளைத் திணிப்பதையே நோக்கமாகக் கொண்டது; இம் முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தித் தாய் மொழி மூலம் கல்வி வழங்காதவரை இந்நாட்டு மக்களுக்கு உண்மையான-முழுமையான கல்வியை அளிக்க முடியாது"

என்று குறிப்பிட்டுள்ளார்.

தாய்மொழியில் ஒரு கருத்தைத் தானே தனது சொந்த முயற்சியில் கற்றுக் கொள்ளும் ஒருவரின் அறிவு தெளிவாக வளரத் தொடங்குகிறது. இதனால் அவர் கொள்ளும் மகிழ்ச்சி தான் கற்ற கருத்துக்களை அவரின் மனதில் நன்கு பதிய வைத்து விடுகிறது. இவ்வகையான கல்வி நோக்கங்கள் நிறைவேற பிற மொழியை விடத் தாய்மொழி மிகுதியான வாய்ப்பளிக்கும் அல்லவா?

மேலை நாடுகளில் நிகழ்கின்ற அளவிற்கு அறிவியல் கண்டுபிடிப்புக்களோ, பல்துறைக் கோட்பாடுகளோ இந்தியாவில் தமிழகத்தில் உருவாக்கப்படுவதில்லை. மேலை நாட்டினர் தத்தம் தாய்மொழிகளில் பல்துறை நூல்களைப் பயிலுவதனால் நன்கு சிந்தித்துப் புதியன படைக்கின்றனர். இம் முயற்சியில் அவர்களின் வெற்றிக்கும் தாய்மொழி வழிக் கல்விக்கும் தொடர்பு இருப்பதைப் பல்வேறு அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

"சென்ற சில ஆண்டுகளில் நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட புதிய கண்டுபிடிப்புக்கள் கண்டுபிடித்து உள்ளோம் என்று சோவியத் நாட்டவர்கள்

www.tamilarangam.net



பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். இந்தப் பெருமைக்குக் காரணம், பாமரத் தன்மையில் மூழ்கிக் கிடந்த கோடானுகோடி மக்களின் படைப்புத்திறன் கட்டவிழ்த்து விடப்பட்டதேயாகும். நவீன உலகியல் அறிவு முழுவதையும் மிகக் குறுகிய காலத்தில் வெகு விரைவாகப் பொதுமக்களுக்கு அவர்தம் தாய் மொழிகளில் கிடைக்கச் செய்தனர். தாய்மொழிகள் மாத்திரமே பாமர ஜன சமுத்திரத்தைக் கப்பிக் கிடக்கும் அறியாமைக் காரிருளைக் கிழித்தெறிந்து ஒளிவீசச் செய்ய முடியும்" என்றார் பா. ஜீவானந்தம்.

இரண்டு நூற்றாண்டுக்கால ஆங்கிலக்கல்வி உலகில் ஆங்கிலம் பேசும் நாடுகளோடு நமது தொடர்பை எளிமைப்படுத்தி யிருந்தாலும் தாய்மொழி வழி நினைவோட்டத்தைத் தடைப்படுத்தி விட்டது. இதனால், அறிவியல் துறைகளில் பல வெற்றி வாய்ப்புக்கள் இழக்கப்பட்டு விட்டன. இந்நிலை மாறத் தாய்மொழிகளில் அறிவியல் தடையின்றி நடைபோட வேண்டும். புதிய கண்டுபிடிப்புகளுக்குத் தேவைதான் தாய்; கற்பனைதான் தந்தை; ஆயினும் தேவையும் கற்பனையும் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் புதுமை தோன்ற இயலும். தேவையை ஒட்டியெழும் சிந்தனை செயலாக்கம் பெறுவதற்குத் தாய்மொழியே சிறந்தது. புதியனவற்றிற்கான சிந்தனை, செயல்திறன் ஆகிய இவற்றை மிகுதியாக வழங்கவல்லது தாய்மொழி என்பதனால் அது கல்வித்துறையின் பயிற்றுமொழியாக அமைவது நாட்டு வளர்ச்சிக்கும் வாய்ப்பாக அமையுமன்றோ?

இந்தியாவில் ஆங்கிலம் வழியாகப் பயிலும் மாணவர்களில் பலர் தாய் மொழிகளிலேயே தேர்வு எழுதுகின்றனர். ஆங்கில வழிப்பாடங்களில் அடித்துக் கொண்டு சேர்ந்த மாணவர்களில் 99% மாணவர்கள் பல்கலைக்கழகத் தேர்வைத் தாய்மொழியிலேயே எழுதுகின்றனர். தனியார் கல்லூரிகளில் தாய்மொழிக்கு இடமில்லை என்றாலும் 60% மாணவர்கள் தாய்மொழியிலேயே விடை எழுதுகின்றனர். பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்ள கல்லூரிகளில் இளங்கலைப் பட்ட வகுப்பில் சேரும் மாணவர்களில் தொன்னூறு விழுக்காட்டினர் பள்ளியிறுதி வகுப்பு வரை தமிழையே பயிற்று மொழியாகக் கொண்டவர்கள். இவர்களில் பெரும்பாலோர் ஆங்கிலவழி வகுப்புக்களில் சேர்ந்திருந்த போதிலும் தேர்வைத் தமிழிலேயே எழுதுகின்றனர். நூற்றுக்குத் தொன்னூறு மாணவர்கள் இப்படிச் செய்வதாக அப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் சுட்டிக் காட்டியுள்ளார். ஆங்கிலப் பயிற்று மொழி மூலம் பயிலும் பொறியியல் மாணவர்களைத் தமிழில் தேர்வு எழுத அனுமதிக்கும் திட்டம் பற்றித் தமிழக அரசு ஆராய்ந்து வருகிறது.

இவ்வாறாக, வேற்றுமொழி வழியாகப் பயின்று தாய்மொழியில் தேர்வு எழுதுவதற்குரிய காரணம், எண்ணங்களை முழுமையாக வெளிப்படுத்தும் மொழியாகத் தாய்மொழி இருப்பதேயாகும். ஒருவர் எவ்வளவு கற்றவராக இருந்த போதிலும், அவர் கற்றதைப் பிறருக்கு வெளிப்படுத்தும் திறம் இல்லாவிட்டால் கற்ற கல்வியால் பயனில்லை என்பது பொருள். கருத்துவெளிப்பாட்டிற்குரிய மொழியாகத் தாய்மொழி விளங்குவதால் கல்வியின் முழுப்பயனை நுகரத் தாய்மொழி வழிக்கல்வி மிகுந்த பயனளிக்கும்.

தாய்மொழி வழிக்கல்வி இயற்கையானது. தமிழ் மண்ணில் வாழை வளமுற வளர்வது போல் சிறிது இடம் கொடுத்தாலும் இளைஞரின் மூளையில் தாய்மொழி விரைந்து வளர்ந்து விடும். உலக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் தத்தம் தாய்மொழியோடும் ஆங்கிலத்தோடும் சிக்கலான ஓர் உறவோடுதான் வாழ்ந்து வருகின்றனர். ஆயினும் அவர்கள் இச்சிக்கலை முன்வைத்து அஞ்சித் தத்தம் நாட்டின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகளை ஆங்கிலத்தில் மட்டுமே வெளிப்படுத்தித் தத்தம் மொழியினரின் கண்களைக் கட்டி விடவில்லை. ஆனால், இந்தியாவில் நிலைமை வேறாக உள்ளது. ஆங்கிலத்தைக் கல்விமொழியாகத் தொடர்வதனால் சமூகத்தை அறிவியல் உணர்ச்சிக்கு உட்படுத்தாது ஒதுக்கி வைக்கும் நிலை தொடருகிறது. இதனால், தாய்மொழி வழிச் சிந்தனை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செழிப்படைவது தடைப்பட்டு அறிவியல் கல்விக்கு ஊக்கமும் உரமும் கொடுக்கும் களங்களாகக் கல்வி நிறுவனங்கள் அமையாமல் போக மாணவர்கள், அறிவியலில் பெற்றிருக்க வேண்டிய பல வெற்றிகளைத் தொட முடியாமலே போய்விடுகின்றனர்.

வேற்றுமொழி ஒன்றின் வழியாகக் கல்வி கற்பதனால் மாணவர்களுக்குப் பெரிய அளவில் சிந்தனைத் திறன் உருவாக வழியில்லாது போய் விடுகிறது. இந்தியக் கல்வித் துறையில் ஆங்கில வழிக்கல்வி பெரும் பாரமாகவும் இடையூறாகவும் இருந்து வந்துள்ளது. இந்த நிலை மாற வேண்டுமாயின் தாய்மொழி பயிற்று மொழியாக்கப்பட வேண்டும்.

தேர்வுகளில் கூடுதல் மதிப்பெண் பெறுவது என்பது பல்வேறு காரணிகளைச் சார்ந்துள்ளது. மாணவரின் கடின உழைப்பு, அவரின் தனிப்பட்டவகை ஆற்றல், கல்விச் சூழல், மனப்பாடம் செய்யும் திறம், கற்றதை வெளிப்படுத்தும் பாங்கு போன்ற பல காரணங்கள் இதில் அடங்கும். ஒரே திறமை மற்றும் கல்விச் சூழலில் உள்ள இரு மாணவர்களைக் கருதினால், தாய்மொழியில் பயிலும் மாணவரே மிகுதியான மதிப்பெண்கள் பெற இயலும். ஓர் அறிவியல் செய்முறையை விளக்குவதாகக் கொண்டால் முதலில் தாய்மொழியில் படிக்கும் மாணவரால் புரிந்து கொள்வது எளிது. பின்பு ஒருமுறை படித்தாலே தேர்வில் சொந்தமாக எழுத முடியும். மனப்பாடம் செய்வதாக இருந்தாலும் வேறு மொழியை விடத் தாய்மொழி எளிதாகவே இருக்கும். இவ்வாறு பாடங்களைப் புரிந்து கொள்ளல், சொந்தமாக எழுதுதல், மனப்பாடம் செய்தல் ஆகியனவற்றிற்குத் தாய்மொழி வாய்ப்பாக அமைவதால் தேர்வில் கூடுதல் மதிப்பெண் பெறுவதும் எளிதாகி விடுகிறது. தாய்மொழிவழிக் கல்வியினால் தேர்ச்சி விழுக்காடும் கூடுகிறது. கல்வித்துறையில் இடைநிறுத்தம் பற்றியும், அதனால் ஏற்படும் பொருள் இழப்புப் பற்றியும் ஆய்வு செய்யப் பெறும் இற்றைநாளில் தாய்மொழி வழிக்கல்வி இவற்றை நீக்கிப் பெரும் பயனளிக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 2. உளவியல் நோக்கில் தாய்மொழி வழிக் கல்வியின் முக்கியத்துவம்

ஒருவன் ஒரு மொழியைப் பயிலலாம்; ஒரு மொழி வழியாகக் கற்கலாம்; ஒரு மொழி வழித் தொடர்பு கொள்ளலாம். ஆனால் இன்னொரு மொழி வழியாகச் சிந்திக்க இயலாது. வேறொரு மொழியை எழுத்தெண்ணி, சொல்லெண்ணி, சொல்லுக்குரிய பொருள் எண்ணிப் படித்தவர்கள் கூடச் சொல்ல வரும் கருத்துப் படிவம்; கருத்துப் படிவத்திற்கு முந்தைய முன்னாக்க முயற்சி ஆகியன அவர்களையும் அறியாமலேயே அவர்களுடைய தாய்மொழியில் அமைகின்றன. இது இயல்பாக அமைந்து, அனிச்சைச் செயலாகவும் ஆகி விடுகிறது. இதுதான் தாய்மொழியின் தனிச்சிறப்பு.

கல்வியின் முடிவான பயன் முதல் தர மதிப்பெண் பெறுவதும், பட்டங்களை அடுக்கிக் கொண்டு போவதும், பட்டங்கள் வழிப் பணியில் அமர்வதும் மட்டுமன்று, இவற்றுக்கும் மேலாகக் கல்வி என்பது பண்பை வளர்ப்பதும், அறிவை வளர்ப்பதும் ஆகும். பண்பின் விரிவாக்கமும் அறிவின் விரிவாக்கமும் ஒருவனது தற்சிந்தனையால் உருவாவன. அறிவு, பண்பு இவற்றை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட கல்வி ஒருவனின் தற்சிந்தனையை உசுப்பி விடுவதாக அமைய வேண்டும். தற்சிந்தனையின் வழிப் படைப் பாற்றலும், படைப்பின் வழிப் புதுமையும் உருவாகச் செய்வதே கல்வியின் இலக்கு. இவ்விலக்கை அடைவதற்குரிய ஏதுக்களாக விளங்கும் தற்சிந்தனை, படைப்பாற்றல் ஆகியன உள்ளத்தோடு தொடர்புடையன. உள்ளத்தோடு தொடர்புடையது தாய்மொழி. எனவே, உளவியல் நோக்கில் கல்வித்துறைகளில் தாய்மொழி வழிக்கல்வி அவசியமாகக் கருதப்படுகிறது.

www.tamilarangam.net



தாய்மொழி வழிக் கல்வி பயின்றவர்கள் அச்சமில்லாமல் வாழ்வர். வேற்றுமொழிகளை எளிதாகக் கற்றுக் கொள்வர். யார் ஒருவர் தானும் அமைதியாக இருந்து கொண்டு, பிறருக்கும் அமைதியைக் கொடுக்கிறாரோ அவர்தான் அச்சமற்றவராக இருப்பதுடன் பிறருக்கும் அதைப் போதிக்க இயலும். எனவே, மனிதனின் வாழ்க்கை பயனுள்ளதாக ஆக வேண்டுமானால் அவனுக்குத் தாய்மொழி வழிக் கல்வி அவசியமாகிறது. மனிதன் அச்சத்திற்கு அடிமையாக இருந்தால் அவனுடைய வாழ்வே அவனுக்கும் சுமையாக இருந்துவிடும். மனிதன் வாழ்வின் விழுமியங்களைத் தெரிந்து கொள்ளுவதற்கும், இன்பமாகவும், சுதந்திரமாகவும் வாழுவதற்கும் அச்சமில்லாதவனாக அவனை உருவாக்குவதற்கும் தாய்மொழி வழிக் கல்விதான் உகந்தது.

அறிவியலோ, வரலாறோ, இன்ன பிற கலைப்பாடங்களோ, தாய்மொழியில் கற்றுத் தரும் போது மாணவனுக்கு இயற்கையாக மனதில் பதிகிறது. பாடங்களைக் கவனித்து ஆர்வம் காட்டுகிறான். வேற்றுமொழி வழியாகக் கற்பிக்கும் பொழுது, அந்த மொழியைப் புரிந்து கொள்ள நேரத்தைச் செலவிட்டு, அது எதைப் பற்றிச் சொல்லுகிறது. என்று மூளையைச் செலவிட்டு, அதன்பிறகே பாடம் என்ன என்பதைத் தெரிந்து கொள்கிறான். ஆகவே தாய்மொழியில் கற்பது புரிதலுக்குக் கூடுதல் வாய்ப்பாக அமையும்.

வேற்றுமொழி வழியாகக் கல்வியை அளிப்பதன் மூலம் தாய் மொழியின் பயன்பாடு குறைகின்ற போதிலும், இதை மொழியடிப்படையில் நோக்காது அறிவு, சிந்தனை, பொருளாதாரம் போன்றவற்றின் அடிப்படையில் பார்க்க வேண்டும். வேற்றுப் பயிற்று மொழியில் படிக்கும் மாணவர்கள் தங்களது பாடங்களை முழுமையாகப் புரிந்து படிப்பதில்லை. பெரும்பாலான மாணவர்கள் மனப்பாடம் செய்தே தங்களது பாடங்களைப் படிக்கின்றனர். அறிவியல் போன்ற பாடங்களைக் கற்பிப்பதன் நோக்கமே அதனைப் புரிந்து கொண்டு அதன் வழியில் சிந்தனை செய்ய வேண்டும் என்பதற்குத்தான். வேற்றுப் பயிற்று மொழியில் படித்து வெளிவருகின்ற பெரும்பான்மையானவர்களுக்குத் தாய்மொழியும்

www.tamilarangam.net



சரி, அவர்கள் படித்து வந்த மொழியும் சரி சரிவரத் தெரியாது என்பது மட்டுமன்றி அவர்கள் படித்த பாடங்களைப் புரிந்து கொள்வதுமில்லை.

புரிதல் இல்லாது கற்கும் இந்தக் கல்வி முறையைக் காந்தியடிகள் பின்வருமாறு மதிப்பீடு செய்கிறார்.

**"வரலாற்றில் ஆங்கிலேயர் செய்த தீமைகளில் எல்லாம் முதன்மையானது, நம்நாட்டு இளைஞர்கள் மீது ஆங்கிலப் பயிற்றுமொழியைத் திணித்ததே. அது நாட்டின் சக்தியைப் பாழ்படுத்தி விட்டது. அது மாணவர்களுடைய வாழ்வைக் குறைத்துவிட்டது. ஆங்கிலம் பயிற்றுமொழியாக இருப்பதனால் மாணவர்களின் துயரம் இரு மடங்காகிறது. காலம் முழுவதும் ஆங்கிலச் சொற்களை மனப்பாடம் செய்வதிலேயே காலம் கழிகிறது. நாம் அறியாத்தனமாக ஆங்கிலப் பண்பாட்டைப் பின்பற்றும் மை ஒற்றும் தாள் போல் ஆகிவிட்டோம்."**

மேற்குறித்த காரணங்களையெல்லாம் நோக்க, புரிதலுக்கும் உள்ளம் உணர்தலுக்கும் ஏற்ற மொழி தாய்மொழி என்பது புலப்படும்.

பிறருடைய துணையில்லாமல் ஒருவன் தன் சொந்தச் சிந்தனையின் பயனாக விளைவது தன்னறிவு எனப்படும். பிறர் சிந்தனை வழிச் சென்று தான் சொந்தமாகச் சிந்தித்து ஒருவன் பெறும் அறிவும் தன்னறிவில் அடங்கும். புதுமையானவற்றைக் கண்டுபிடிப்பதற்குத் தன்னறிவு மிகவும் இன்றியமையாதது. இந்த அறிவுக்கு அடிப்படையாய் அமைபவை ஏன்? எப்படி? என்ற கூரிய வினாக்களாகும். இவ்வினாவிற்குக் கிடைக்கும் விடைகள் எல்லாம் தன்னறிவின் பயன்களாகும். தன்னறிவு தாய்மொழி மூலமே வளம் பெறும் என்பது உளவியல் அறிஞர்களின் ஆய்வு முடிவாகும்.

www.tamilarangam.net



நாம் எதை நினைத்தாலும், சிந்தித்தாலும், அது தமிழில் தான் இருக்கும். தமிழ் வழியை ஒட்டித்தான் இருக்கும். நாம் தமிழில் சிந்தித்தால்தான் அந்தச் சிந்தனையோட்டம் தங்கு தடையில்லாமல் செல்லும். அத்தகைய சிந்தனைதான் பூரணத்துவத்தை அடைய முடியும். அத்தகைய சிந்தனையில்தான் உண்மைக் கவிதைகள் தோன்ற முடியும். உணர்ச்சிவசமான இனிய இசை பிறக்க முடியும். உயர்ந்த இலக்கியங்கள் தோன்ற முடியும். அரிய ஆராய்ச்சிகள் வெளிப்பட முடியும்.

தமிழ்ச் சிந்தனையில்தான் தமிழனின் திறமையனைத்தும் வெளிப்பட இயலும். உயர்ந்த எண்ணங்கள், அறிவியல் கருத்துக்கள், நுண்ணிய ஆராய்ச்சிக் கருத்துக்கள் இவற்றிற்கு ஏற்ற தமிழ்ச் சிந்தனை வேண்டுமென்றால் அத்தகைய சிந்தனைக்கு நம்மைப் பக்குவப்படுத்தக்கூடிய, பண்படுத்தக்கூடிய கல்வி, உயர்தரக் கல்வி கல்லூரிக் கல்வி, ஆராய்ச்சிக்கல்வி ஆகிய அனைத்தும் தமிழில் தான் இருக்க வேண்டும்.

நம்முடைய இளைஞர்களுக்குக் கல்வி போதிக்கும் பொறுப்புள்ளவர்கள் சற்று மனம் வைத்துச் சிந்தித்தால் குழந்தையின் உடல் வளர்ச்சிக்குத் தாய்ப்பால் எப்படியோ அப்படி மனிதனின் மன வளர்ச்சிக்குத் தாய்மொழியே இயற்கையானது என்பது விளங்கும்.

வெறும் ஏட்டறிவு ஒருவன் வாழ்க்கைக்குப் பயன்படாது. நீந்துதலைப் பற்றி எல்லா விதிகளையும் ஏட்டளவில் அறிந்த ஒருவனால் நீரில் நீந்த இயலாது. நீரில் திறமையாக நன்முறையில் நீந்த ஏட்டறிவை விடச் செயல்முறை அறிவே மிகுதியாக வேண்டும். நம் மாணவர்களுக்கு ஆர்க்கிமிடிஸ் கோட்பாட்டைச் சொல்லத் தெரியுமேயன்றி கப்பலைச் செய்யத் தெரியாது. இது நமது கல்வி முறையில் உள்ள மிகப் பெரிய குறைபாடு. தாய்மொழி கல்விமொழியாக அமைந்தால் செயல்முறை அறிவு பெருகுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

www.tamilarangam.net


வேற்றுப் பயிற்றுமொழியால் ஏற்படும் எதிர்விளைவுகளை நீக்குவதற்காகவும் தாய்மொழி வழிக் கல்வி வலியுறுத்தப் பெறுகிறது.

1. சிறார் பள்ளியில் தொடங்கிப் பட்டப்படிப்பு வரை ஆங்கிலத்தை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறோம். குறைபாடுகளைக் கொண்ட பயிற்றுவிப்பு முறைகளால் ஆங்கிலம் ஒரு கருவி என்ற நோக்கில் கூர்மையற்ற வார்ப்பிலேயே அது படைத்தளிக்கப்படுகிறது. சிந்தனையோட்டத்தை முடுக்கவும், செயலின் பயனை வெளிப்படுத்தவும் ஆங்கிலம் இன்றைய இளைஞர்களுக்குக் கை கொடுக்கவில்லை.

2. தாய்மொழியில் அறிவியல் கற்க முடியாது என்று ஒரு மாணவனுக்குக் கூறி, அதனால் ஆங்கிலம் கற்க வேண்டும் எனும் போது, அவன் மனத்தில் தாய்மொழி பற்றிய இழிவான எண்ணமும், ஆங்கிலம் பற்றிய உயர்வான எண்ணமும் புகுத்தப்படுகின்றன. அதனால் தாய்மொழியும், அதைப் பேசுவோரும் தாழ்ந்தவர். ஆங்கிலமும் அம்மொழியைப் பேசுவோரும் உயர்ந்தவர் என்று மயங்குகின்றான். இது அவனுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மையை உருவாக்கிப் பின்பு அவனைத் தாழ்ந்தவனாகவே ஆக்கி விடுகிறது.

3. ஆங்கில வழிக் கல்வியினால் ஒரு சிலர் சிறந்த மனிதர்கள் போலப் பொதுமக்களிடமிருந்து விலகிப் போய்விடுகின்றனர். நமது நாட்டுச் சூழல் அவர்களுக்குப் பிடிப்பதில்லை: அவர்கள் மேலை நாட்டினர் ஆகி விடுகின்றனர். இன்றைய குடியரசுச் சமுதாயத்திற்குத் தேவைப்படாத ஓர் உயர் வகுப்பாக அவர்கள் ஆகி விடுகின்றனர். அரைகுறையாக ஏதோ கொஞ்சம் படித்த பலர்; மேலை நாட்டினர் போல் வேடம் போடும் ஒரு சிலர் எனறு இரண்டு புதிய வகுப்புகளை ஆங்கிலமொழி வழிக் கல்வி உருவாக்கியுள்ளது. ஆங்கிலமொழி பேசி ஆங்கிலேயர் போல் நடித்து, பொது மக்களுக்கும் தங்களுக்கும் ஏணி வைத்தால் கூட எட்டாது என்று இறுமாப்புக் கொள்கின்றனர் இச்சிலர்.

www.tamilarangam.net


இன்று நமது கல்வி நிறுவனங்களில் ஆங்கிலம் கற்பிக்கப்படுவதை எண்ணிப் பார்த்தால், வெறும் பாடமாக மட்டுமே பயின்றவர்கள் எவரும் அதைப் பேசவோ, எழுதவோ முழுமையாகப் பயன்படுத்தும் அளவிற்கு ஆங்கில அறிவு பெறுவது இல்லை. ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாகப் பயன்படுத்தியவர்களில் கூடப் பலர் தவறில்லாது சில வரிகள் கூட ஆங்கிலத்தில் எழுத இயலாத சூழ்நிலை நிலவுகிறது. பல மாணவர்கள் போதிய ஆங்கில அறிவு வளர்ச்சியின்றிப் பட்டங்கள் பெறுகின்றனர்.

மொழிச் சிக்கலில் ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக ஆங்கிலத்தில் போதிய திறனற்ற மாணவர்களும் கூட ஆங்கில வழிக் கற்றலையே விரும்புகின்றனர். இதற்குக் காரணம் பாடத் திறமையைக் கவனத்தில் கொள்ளாத ஆசிரியர்கள், பெற்றோர்களின் ஆங்கிலக் கவர்ச்சியே ஆகும். தற்சிந்தனையும் புரிதலும் இல்லாது மனப்பாடம் செய்தலே நடைபெறுகிறது. தாய்மொழி வழிக் கல்வி கற்பவர்களுக்கு ஆட்சித் துறைகளிலும், அறிவியல் தொழில் நுட்பத் துறைகளிலும் வேலை கிடைக்காது என்ற பயம் நிலவுகிறது மொழியறிவிற்கும் மொழி வழிப் பாட அறிவிற்குமுள்ள வேறுபாட்டை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

இது "அறிவியல் யுகம்" என்று சொல்லப்படுகிறது. அறிவியலை ஆங்கிலத்தின் மூலம் பெற்றால் தான் மதிப்பு எனும் நிலை உள்ளது. உண்மையில் அறிவியல் கல்வியை விடவும், அக்கல்வியைத் தரும் ஆங்கிலத்திற்குத் தான் கூடுதல் மதிப்பு உள்ளது. புரிந்து கொள்ளாத மருத்துவக் கல்வியையோ, பொறியியல் கல்வியையோ புரிந்து கொள்ளத்தான் மாணவன் கல்லூரிக்குச் செல்கிறான். அங்கு வகுப்புக்களில் புரியாத கலையை மாணவனுக்கு முழுவதுமாகத் தெரியாத அல்லது அரைகுறையாகத் தெரிந்து வைத்திருக்கின்ற ஆங்கில மொழியின் மூலம் பயிற்றுவிக்கப்படுகிறது. கலையைப் பயில வேண்டிய வகுப்பில் ஆங்கில மொழியையும் சேர்த்துப் பயில வேண்டிய சூழல் மாணவனுக்கு ஏற்படுகிறது.

நாட்டின் நிருவாகம், நீதி, தொழில், வணிகம் விவசாயம் ஆகிய துறைகள் தொடர்பான எல்லா முடிவுகளிலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் ஆங்கிலம் படித்த ஒரு சிறுபான்மையினர் தமது மேலாதிக்கத்தைச் செலுத்தி வருகின்றனர். நூறு கோடி இந்திய மக்கள் தொகையில் ஆங்கில அறிவு உள்ளவர்களின் எண்ணிக்கை மூன்று விழுக்காடு தான். இவர்களில் சிலர் பெரிய பதவிகளில் இருந்து கொண்டு ஆங்கிலத்திலேயே சிந்தித்து, சிக்கல்களை அலசித் தங்களது முடிவுகளையே ஒரு தீர்வாக முன் வைக்கின்றனர்.

இந்திய நாட்டில் குடியாட்சி முறை நிலவுவதால் ஆங்கிலம் படிக்காதவர்களும் அரசியல் தலைவர்களாக இருக்க இயலுகிறது. இவர்கள் அமைச்சர்களாகவும், மாநில முதல்வர்களாகவும் பதவி ஏற்கும் போது ஆங்கிலம் படித்த அதிகாரிகளின் அறிவுரைப்படியே செயலாற்ற வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. மக்களுக்கு எது தேவை என்பது பற்றி முடிவு செய்யும் போதும் நல்லதொரு மக்கள் நலத் திட்டத்தை அவர்கள் முன் வைக்கும் போதும் அதிகாரிகளும், ஆங்கிலம் படித்த வல்லுநர்களும் அவற்றில் குறைகளைக் கண்டுபிடித்துத் திட்டத்தையே மாற்றி விடுகின்றனர்.

அரசியலிலும் பொருளாதாரத்திலும் தற்போது ஏற்பட்டுள்ள கோளாறுகளுக்கெல்லாம், மெத்தப் படித்த ஆங்கில மொழியினரின் அணுகுமுறையிலும், பார்வையிலும், அடிப்படைக் கோளாறு இருந்து வருவதே காரணமாகும்.

இன்று நம் நாட்டில் அறிவியல் அறிஞர்கள் பெரும்பான்மை யினராக இருந்தும் அறிவியல் துறை நூல்களும், கட்டுரைகளும், இதழ்களும் பெரும்அளவில் வெளி வருவதில்லை. இதற்குரிய முக்கியக் காரணம் வேற்றுமொழி பயிற்றுமொழியாய் இருப்பதனால், பெருமளவு நேரம் மொழிப் பயிற்சியில் செலவிடப்பட்டு அறிவு வளர்ச்சியில் நாட்டம் குறைந்திருப்பது தான். முழுமையாக ஆங்கிலம் கற்க முடியாமல், அறிவியல் தேர்ச்சி பெறாமல் போவதால் இங்கு அறிவியல் நன்கு வளரவில்லை. பயிலும்

www.tamilarangam.net



பொருள் பற்றி முழுமையாக உணராததால் கட்டுரைகள், நூல்கள் ஆகியவை எழுத இயலுவதில்லை.

பொருளாதார நன்மைகள், பண வருவாய், தகுதி வாய்ந்த பதவி முதலியவற்றைப் பெறுவதற்கான போராட்டத்தில் குறிப்பிட்ட மொழி/இன மக்கள் தமது தேசியத் தனித்துவத்தையும் பல காலமாகப் போற்றப்பட்டு வந்த பாரம்பரியத்தையும் பறி கொடுத்து நிற்கின்றனர். தாய் மொழிகளின் மீது அக்கறை செலுத்தாமையினால் மக்கள் வாழ்க்கையுடன் பிணைந்து நின்ற பழக்க வழக்கங்களும், பண்பாட்டுக் கூறுகளும் மறையத் தொடங்கியுள்ளன. தமிழர் பலரின் வீடுகளுக்குள் ஆங்கிலம் புகுந்து விட்டது. சிலரின் வாயில் தாய்மொழி வரவே மறுக்கிறது. தாய்மொழியறியாதவர் உயர் பதவியையும் செல்வாக்கையும் பெறும் நிலை ஆட்சித் துறைகளில் தொடரப்படுகிறது.

கல்வித் துறையைப் பொறுத்தமட்டில் ஆங்கில மொழியின் இடத்தினை இந்திய மொழிகள் இட்டு நிரப்பாதவரை நம் பண்பாட்டு அடிமைத்தனத்தை அகற்ற முடியாது. இதைக் காந்தியடிகள்,

> "ஆங்கிலேயரின் ஆட்சியை அகற்றியது போல் ஆங்கில மொழியையும் அகற்ற வேண்டும். அப்போதுதான் பண்பாட்டுக் கவிழ்ப்பினின்றும் ஏற்றம் பெற முடியும். ஆங்கில வழிப் பயிலவில்லை என்றால் ஒரு பாடத்தில் தேர்ச்சி பெறுவதோ அல்லது மென்மேலும் அறிவு பெறுவதோ இயலாது என்று இந்தியர்கள் நினைப்பதாகத் தெரிகிறது. நம் மனங்களிலிருந்து எவ்வளவு விரைவில் இந்தத் தப்புக் கணக்கு அழிக்கப்படுகிறதோ, அவ்வளவு விரைவில் அயலக மொழியால் அலைக்கழிக்கப்பட்டுச் சோர்வடைந்துள்ள இலட்சக்கணக்கான அறிவுக்கூர்மை மிக்க குழந்தைகளுக்கு நன்மை விளையும்" என்றார்.

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது அந்நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சியோடு இணைந்ததாகும். இந்த அறிவு வளர்ச்சிக்கு

www.tamilarangam.net


அங்குள்ள கல்விமுறை அங்குள்ள மக்களின் தாய்மொழியில் இருக்கும் போதே உறுதிப்படும். ஒரு மொழிக்குப் பல பயன்பாட்டுத் தளங்கள் உள்ளன. ஆட்சிமொழி, பயிற்றுமொழி என்பன முக்கியமான பயன்பாட்டுத் தளங்களாகும். வேற்றுமொழி பயிற்றுமொழி என ஆகும் போது தாய்மொழி தன் தளத்தில் ஒன்றை இழந்து விடுகிறது. இதனால், அம்மொழி பேசும் மக்கள் பண்பாட்டு நிலையில் பின்னுக்குத் தள்ளப்படுகின்றனர். எனவே, எந்த ஒரு தேசிய இனமும் ஒரு நம்பிக்கையுள்ள தேசிய இனமாக மலரத் தாய்மொழி வழிக்கல்வி இன்றியமையாததாகும்.

ஆக, கல்வி பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள் திட்டவட்டமானவை, கல்வி புகட்டுவதற்கான ஊடகம் ஒரு மொழியே; நன்முறையில் கற்பதற்கு இன்றியமையாதது அம்மொழியில் புலமை. இன்றைய சமுதாயத்தில் மக்கள் அனைவருக்கும் கல்வி புகட்ட வேண்டுமென்பதே நோக்கமாயுள்ளது. சிறப்புத் திறமை படைத்த சிலரை மட்டுமே தேர்ந்தெடுத்துக் கல்வியூட்ட வேண்டுமென்பது நோக்கமன்று. அறிவையும், திறனையும் வளர்ப்பதுதான் கல்வி. சொல்லிக் கொடுப்பதை நன்றாக உணர்ந்து கொள்ளாமல் மனப்பாடம் செய்வது கல்வியாகாது. வகுப்பறையோடு அது நின்று போவதில்லை. வகுப்பறைக்கு வெளியில் பயனுள்ள முறையில் வாழ்வை அமைத்துக் கொள்ளுவதற்கு நெறிப்படுத்தும் கொள்கைகளும் கல்வியியலில் அடங்கும். மற்றவர்களைப் புரிந்து கொள்ளும் திறமையை வளர்ப்பதும் சமுதாயத்தின் வாழ்விலும் வளர்ச்சியிலும் பயனுள்ள முறையில் பங்கு கொள்ளுவதும் கல்வியியலில் அடங்கும்.

வெளி உலகச் சமூக வாழ்விலிருந்து கல்வி விலகியதாக இருக்குமேயானால், சொல்லிக் கொடுப்பது மக்களைச் சென்று அடைய முடியாமற் போகும். மொழி வாயிலாக வெளியிடப்பெறும் சொற்களின் பொருளானது அதைப் பயன்படுத்துவோர் ஒன்றுகூடி வாழ்ந்து மேற்கொள்ளும் வழக்கங்களைப் பொறுத்தது.

www.tamilarangam.net



சுருக்கமாகச் சொல்லப்போனால், கல்விக்குரிய பயனுள்ள ஊடகமாக வேற்று மொழியில் தேர்ந்த புலமை பெறுவது கடினம். பெரும்பாலான மக்களுக்குக் கல்வி புகட்ட வேண்டிய இக்காலத்தில் வேற்றுமொழி வழிக்கல்வி இந்த நோக்கத்திற்குத் தடையாகவே இருக்கும். சமுதாய வாழ்வில் கலந்து கொள்வதற்கும் அது ஒரு இடையூறாகவே இருக்கும். எனவே, உண்மையான கல்வியை தாய் மொழி மூலம் மட்டுமே வழங்க இயலும்.

www.tamilarangam.net



# 3. தமிழகமும் தமிழ்வழிக் கல்வியும்

தமிழ்நாடு 1,30,069 சதுர கிலோமீட்டர் பரப்புள்ள இந்திய மாநிலமாகும். இதன் மக்கள் எண்ணிக்கை 4,11,99,168 ஆகும். இம் மாநிலத்தின் முக்கிய மொழியாகத் தமிழ் உள்ளது. 1956-இல் இயற்றப்பட்ட தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டத்தின்படித் தமிழ் மொழி இம் மாநிலத்தின் ஆட்சி மொழியாக உள்ளது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 159 மொழிகளைப் பேசுவோர் இம் மாநிலத்தில் வாழுகின்றனர். 10,000 மக்களுக்கு மேல் பேசும் மொழிகளாகப் பத்து மொழிகள் இங்குள்ளன.

## கல்வி அமைப்பு முறை

தமிழகத்தின் கல்வி அமைப்பு பல்வேறு படிநிலைகளைக் கொண்டதாக உள்ளது. அவை வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | தொடக்கக்கல்வி | - | ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை (ஐந்து ஆண்டுகள்) |
| 2. | இடைநிலைக்கல்வி | - | ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை (மூன்று ஆண்டுகள்) |
| 3. | உயர்நிலைக்கல்வி | - | ஒன்பது, பத்தாம் வகுப்புகள் (இரண்டு ஆண்டுகள்) |
| 4. | மேல்நிலைக்கல்வி | - | பதினொன்று, பன்னிரண்டாம் வகுப்புகள் (இரண்டு ஆண்டுகள்) |
| 5. | கல்லூரிக்கல்வி | - | இளநிலை, முதுநிலைப்பட்ட வகுப்புகள் (மூன்று, இரண்டு என ஐந்து ஆண்டுகள்) |

www.tamilarangam.net



SEELAN BOOKS NORWAY SIGNATURE

6. பல்கலைக்கழகக் கல்வி – முதுநிலைப்பட்ட வகுப்புகள் மற்றும் ஆராய்ச்சிக் கல்வி (இளம் முனைவர் பட்டம் ஒன்று முதல் இரண்டு ஆண்டுகள், முனைவர் பட்டம் இரண்டு முதல் ஐந்தாண்டுகள்)

இவ்வாறாகத் தமிழகத்தில் முறையான கல்வி அமைப்பு (Formal Education) இருபது முதல் இருபத்துநான்கு ஆண்டுகளை உள்ளடக்கியதாக உள்ளது.

## பயிற்றுமொழி

தமிழகத்தில் பெரும்பான்மையோரால் பேசப்படும் தமிழ்மொழி மேனிலைக் கல்வி வரை முக்கியப் பயிற்று மொழியாக உள்ளது. தமிழ் தவிர தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது, இந்தி, குசராத்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளும் பள்ளிகளில் பயிற்று மொழிகளாக உள்ளன. கல்லூரிக் கல்வியில் சில கலைப்பாடங்களில் (இளநிலை அளவில்) தமிழ் பயிற்று மொழியாக உள்ளது. பல்கலைக் கழகக் கல்வியில் தமிழ் மொழிக்கென்று தனித்துறையொன்று செயல்படுகிறது. அங்குத் தமிழ்மொழியும், தமிழ் இலக்கியமும் கற்பிக்கப்படுகின்றன. அப்பொருள்களில் உயராய்வுகளும் செய்யப்படுகின்றன.

தமிழ் மொழி தமிழ் நாட்டிலும் புதுச்சேரியிலும் முக்கியப் பயிற்று மொழியாகவும் (Main Medium), குசராத்து, கேரளம், மகாராசுட்டிரம், ஆந்திரம், கருநாடகம், மேற்கு வங்காளம், அந்தமான் நிக்கோபார் தீவுகள் ஆகிய மாநிலங்களில் துணைப் பயிற்று மொழியாகவும் (Subordinate Medium) பள்ளிக் கல்வி அளவில் பயன்பட்டு வருகிறது.

## பாடமொழியாகத் தமிழ் (முதல்மொழி)

பாட அமைப்பு இருவகைப்படும். ஒன்று மொழிப்பாடம். மற்றது, மொழியல்லாத பிற பாடங்களாகும். மொழிப்பாடத்தில் இரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரிவுகள் உள்ளன. ஒன்று முதல்மொழி மற்றது இரண்டாம் மொழி. இந்தியாவில் தமிழகம் உள்பட பதினொரு மாநிலங்களில் தமிழ் முதல் மொழியாகக் கற்பிக்கப்படுகிறது. அவை வருமாறு:

| எண். | மாநிலம் | வகுப்புகள் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு | ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை |
| 2. | ஆந்திரம் | ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை |
| 3. | குசராத்து | ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை |
| 4. | கேரளம் | ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை |
| 5. | மத்தியப் பிரதேசம் | ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை |
| 6. | மகாராசுட்டிரம் | ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை |
| 7. | கருநாடகம் | ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை |
| 8. | மேற்கு வங்காளம் | ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை |
| 9. | புதுச்சேரி | ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை |
| 10. | தில்லி (து.நி.மா) | ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை |
| 11. | அந்தமான் நிக்கோபார் தீவுகள் (து.நி.மா) | ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை |

## இரண்டாம் மொழியாகத் தமிழ்

ஆந்திரம், மத்தியப்பிரதேசம், கருநாடகம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் உள்ள சில பள்ளிகளில் குறிப்பிட்ட வகுப்புகளில் தமிழ் கட்டாய இரண்டாம் மொழியாக உள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| மாநிலம் | | வகுப்புகள் |
|---|---|---|
| ஆந்திரம் | - | ஐந்து முதல் பத்தாம் வகுப்பு வரை |
| மத்தியப் பிரதேசம் | - | ஆறு முதல் பத்தாம் வகுப்பு வரை |
| கருநாடகம் | - | ஐந்து முதல் பத்தாம் வகுப்பு வரை |
| புதுச்சேரி | - | ஆறு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை |

மேலும், மத்தியப்பிரதேசம் (ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை), மகாராசுட்டிரம் (எட்டு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை) ஆகிய மாநிலங்களிலும் சில பள்ளிகளில் விருப்பப் பாடமாக்வும் (Optional Language) உள்ளது.

"தமிழகமும் தமிழ் வழிக்கல்வியும்" எனும் இப்பகுதியில் தமிழகத்தில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சியினையும், பயிற்று மொழியினையும், கல்வித் துறையில் தமிழ் வளர்ந்த வரலாற்றினையும் பார்க்கலாம்.

## தமிழகத்தில் மொழியுணர்ச்சி

தனித்தனிக் குழுக்களாக இயங்கி வந்த தமிழ் மொழி பேசும் பகுதியினரை ஒன்றிணைத்த பெருமை ஆங்கிலேயர் ஆட்சிக்கு உண்டு. ஒருமுகப் படுத்தப்பட்ட ஆங்கில ஆட்சி, நிருவாக முறைமை ஆகியன தமிழ் மொழி பேசும் மக்களிடையே குழு உணர்வை (Team Spirit) ஏற்படுத்துவதற்குத் தூண்டுகோலாக இருந்தன. ஆங்கிலேயர் வரவுக்கு முன்னர்த் தமிழகம் என்ற நிலப்பரப்பு இருந்தது; தமிழ் பேசும் மக்கள் கூட்டத்தினர் இருந்தனர். ஆனால், தமிழ்மொழி பேசும் மக்கள் அனைவரும் ஒரே குழுமத்தினர் என்ற உணர்வு இருந்ததாகக் கொள்ளவியலாது. இத்தகு உணர்வு மேலோங்காமைக்குரிய காரணம், தமிழ்கம் என்ற நிலப்பரப்பு அரசியல் அடிப்படையிலான ஒன்றிணைப்பைப் பெறாமல் இருந்ததேயாகும். படையாட்சி அரசுகள், பாளையப்பட்டு அரசுகள், குறுநில மன்னர் அரசுகள் என்ற தமிழகத்தின் ஆட்சி முறைமை பலவாகப் பிரிந்து கிடந்தது. இத்தகு ஆட்சிகள் அந்தந்த

வட்டாரத்தின் தன்மைக்கேற்பவும், எங்கோ ஓரிடத்தில் குவிமுகப் படுத்தப்பட்ட போராட்சியின் தன்மைக்கேற்பவும் செயல்பட்டு வந்தன. இதனால் மொழிவழிப்பட்ட "நாம் உணர்வை" (We feeling) விட, நிலவழிப்பட்ட அரசியல் உணர்வே (Political feeling) மேலோங்கி வளர்ந்தது. அழிக்கப்படுவது "தமிழினம்" என்பதை விட "அழிவிற்குள்ளாவது அயலரசு" என்ற உணர்வின் வெளிப்பாட்டை ஆங்கிலேயர் வரவுக்கு முன்னர் தமிழகத்தில் தமிழர்கள் நிகழ்த்திய போர்கள் சுட்டி நிற்கும். தமிழர்கள் அரசியல் நிலையில் தங்களுக்குள்ள பிளவுகளை மறந்து ஒரே ஆட்சிப்பரப்பில் வாழ்பவர்கள் என்ற உணர்வை ஆங்கில ஆட்சி முறையே ஏற்படுத்திற்று.

## தமிழின் மறுமலர்ச்சி

தமிழின் மறுமலர்ச்சி ஆங்கிலேயரின் அறிமுகத்தால் உருப்பெற்றதை **எஸ். வையாபுரிப்பிள்ளை** பின்வருமாறு விளக்குகிறார்.

> "கட்டுக் கிடையாய் நின்ற தமிழும் அறிவும் புத்துயிர் பெற்றுப் புதிய நெறிகளில் செல்வத்திற்கு நமது கலைப் பண்பாடுகளினின்றும் முற்றும் வேறுபட்ட ஒரு கலைப் பண்பாட்டின் தூண்டுதல் அவசியமாய் இருந்தது. ஆங்கிலேயரது கூட்டுறவால் இத்தூண்டுதல் நமக்குக் கிடைத்தது: புதிய விஞ்ஞான அறிவு சிறிது சிறிதாகப் புகுந்து தமிழுலகை உள்ளும் புறமும் புதைத்திருந்த இருட் படலத்தைக் கீறி நீக்குவதாயிற்று."

தமிழர்கள் தங்கள் மொழியினையே தமது தனித்துவத்தின் சின்னமாகக் கொள்ளும் ஒரு நிலைமை தோன்றுவதற்கும். அம்மொழியினையே போராட்டத்திற்கான கருவியாகப் பயன்படுத்தியமைக்கும் பல்வேறு காரணங்கள் உண்டு. அவற்றில் பின்வரும் மூன்று காரணங்கள் மிக முக்கியமானவைகளாகும்.

1. ஆங்கில ஆட்சியினால் தோற்றுவிக்கப்பட்ட சென்னை மாகாணத்தின் புவியியல் அமைப்பும், மக்கள் தொகைக் கணக்கெடுப்பும் தமிழர்களுக்குத் தமது வாழிடத்தில் இனத் தனித்துவம் பற்றிய புத்துணர்வை ஏற்படுத்தின.

www.tamilarangam.net

2. அந்நியப்பட்ட ஓர் ஆட்சி முறைக்குக் கீழே தமிழரல்லாதோருடன் இணைந்து வாழ்ந்த பன்மொழிச் சூழல் தன்மை.

3. தமிழ் நாட்டினுள் வந்து கிறித்துவச் சமயத்தைப் பரப்பிய பாதிரிமார்களின் "தமிழ் மேன்மை" பற்றிய கருத்துகளின் தாக்கங்கள்.

## கிறித்துவப் பாதிரிமார்களின் "தமிழ் மேன்மைக் கருத்துகள்":

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியிலும் தோன்றி வளர்ந்த "தமிழ் மேன்மை" பற்றிய மொழியுணர்விற்குக் கிறித்துவப் பாதிரிமார்களின் பணி குறிப்பிடத்தகுந்ததாகும்.

கால்டுவெல் பாதிரியாரால் 1856-இல் எழுதப்பட்ட "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" (Comparative Grammar of Dravidian Languages) என்ற நூல் தமிழர்களின் மொழி பற்றிய எண்ணப் போக்கிற்குப் புத்துணர்வை ஊட்டியது. பிற்காலத்தில் (1916) உருவான "தனித்தமிழ் இயக்கம்" "திராவிட இயக்கம்", ஆகிய இயக்கங்களுக்கான அடிப்படை உந்துதலைக் கொடுத்த பெருமை இந்த நூலையே சாரும். கால்டுவெல் பாதிரியார் இந்நூலில், இந்தியாவில் பேசப்பட்டு வந்த பல மொழிகளிடையே "திராவிட மொழிக் குடும்பம்" தனி நிலையான அடிப்படையை உடையது என்றும், திராவிட மொழிகள் பலவற்றுள்ளும் தமிழே மிகத் திருந்திய மொழியாக உள்ளது என்றும், பண்டைத் தமிழர்கள் சமசுகிருதச் சொற்களை மிகுதியும் பயன்படுத்தவில்லை என்றும், அக்காலத் தமிழ் தூய்மையுடையதாக இருந்தது என்றும், தமிழ் சமசுகிருதத்தின் உதவியின்றித் தனித்து இயங்கும் ஆற்றல் உடையது என்றும் விளக்கிச் சொல்கிறார். இவ்விளக்கங்கள், தமிழர்களுக்குத் தங்கள் மொழி பற்றிய புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தின.

www.tamilarangam.net

தமிழின் தனித்துவம் காக்கப்பட வேண்டும் என்ற எண்ணப் போக்கிற்குச் "சைவ சித்தாந்தம்" பற்றிய கருத்துகளும் கூடுதல் வலிமையைச் சேர்த்தன. தமிழர்களின் மொழியடிப்படையிலான தன்னுணர்விற்குக் "கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம்" எவ்வாறு வழி கோலியதோ, அதேபோல் பண்பாட்டு அடிப்படையிலான தன்னுணர்விற்கு **"ஜி.யு.போப்"** அவர்களின் **சைவசித்தாந்தம்** பற்றிய கருத்துகள் அடிப்படையான உந்துதலைக் கொடுத்தன.

திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து "போப்" அவர்கள் அந்நூலிற்கான முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "சைவ சித்தாந்தம் என்பது இந்தியச் சமயங்கள் எல்லாவற்றையும் விட விரிவானதும், செல்வாக்குத் தாக்க முடையதும் ஆகும். அது தென்னிந்தியாவிற்கும் தமிழர்க்கும் உரிய சமயமாகும்" இதுபோன்ற சைவ சித்தாந்தம் பற்றிய விளக்கங்கள் தமிழர்களுக்குப் பண்பாட்டு அடிப்படையிலான எழுச்சிக்கு வழி கோலுவனவாய் அமைந்தன.

## தமிழ் மறுமலர்ச்சிக் காலம்

இவ்வாறு பல்வேறு காரணங்களால் உந்தப்பட்ட தமிழர்கள், தாங்கள் தனிமொழி, பண்பாட்டுக் குழுவினர் என்ற வகையில் தனித்துவத்திற்கான இயக்கங்களைத் தோற்றுவித்தனர். தமிழர்கள் தங்களுக்கான இயக்கங்களை அமைத்துக் கொள்ளும் காலமாக - தமிழின் மறுமலர்ச்சிக் காலமாக 1916-ஆம் ஆண்டு தமிழக வரலாற்றில் தென்படுகிறது. ஏனெனில், இக்காலத்தில்தான் பிராமணர், பிராமணரல்லாதார் என்ற சமூக உணர்வு அரசியலாக்கப்பட்டது. **திராவிடக் கருத்துநிலை** எழுந்தது. **மறைமலையடிகளின் தனித்தமிழ் இயக்கம்** போன்ற இயக்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. எனவே இக்காலத்தைத் தமிழின் மறுமலர்ச்சிக் காலம் எனச் சுட்டலாம்.

## சென்னை மாகாணத்தில் கல்வி வளர்ச்சி

இந்தியாவில், ஆங்கிலேயர் வரவுக்கு முன்னர்க் குருகுலக் கல்விமுறை நிலவியது. சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யில் (1650 வரை) இந்து மடங்களின் வழியாகவும். கிறித்துவ மடங்களின் வழியாகவும் கல்வியளிக்கப்பட்டு வந்தது. இத்தகைய மடப்பள்ளிகளில் சமசுகிருதமும், தமிழும் கற்பிக்கப்பட்டு வந்தன. ஐரோப்பியர்களின் வருகைக்குப் பிறகு கல்வி முறையில் மாற்றம் ஏற்படலாயிற்று. ஆங்கில ஆட்சியாளர்கள் முறைப்படியான கல்வி அமைப்புகளைத் தோற்றுவித்துக் கற்கும் வாய்ப்பினைப் பெருக்கினர்.

வெளிநாட்டிலிருந்து வந்து சென்னை மாகாணத்தில் தங்கியிருக்கும் போர்ச்சுக்கீசியர்கள், ஆங்கிலேயர்கள் ஆகியோரின் குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கும் நோக்கில் 1673-இல் சென்னையில் முறைப்படியான முதற்கல்விக்கூடம் நிறுவப்பட்டது. இந்தக் கல்விக் கூடத்தில் **''பெரிங்கி''** (Feringhi) என்ற போர்ச்சுகீசிய மொழிபயிற்று மொழியாக இடம்பெற்றது. சென்னை மாகாணக் கல்வி வரலாற்றில் இம்மொழியே முறையான முதல் பயிற்று மொழியென்னும் தகுதியைப் பெறுகிறது.

**1687-இல் கிழக்கிந்தியக் கம்பெனி,** சென்னை நகராட்சியின் மூலம் வரும் வருவாயின் ஒரு பகுதியைக் கொண்டு, சென்னை மாகாணத்தில் வாழும் இந்துக்களுக்கும் முசுலீம்களுக்கும் ஆங்கிலக் கல்வியைப் போதிக்க முன் வந்தது.

**1717-இல் டேனிசு மிசனரின்** இரண்டு அறக்கட்டளைப் பள்ளிகளைச் சென்னையில் அமைத்தன. அதே அமைப்பு கடலூரிலும் ஒரு பள்ளியைத் துவக்கியது. இப்பள்ளிகளில் குழந்தைகளின் தாய்மொழியிலேயே கல்வி அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கில், தமிழும் பயிற்று மொழியாக இடம் பெற்றது.

**1790-இல் சான் சலீவன்** (John Sullivan) என்பாரது பரிந்துரைப்படிச் சென்னை மாகாணத்தில் உள்ள பள்ளிகளில் ஆங்கிலத்தோடு தமிழும் கற்பிக்கப்பட வேண்டும் எனும் கருத்தைச் செயல்படுத்துவதற்கு இராமநாதபுரம் அரசர், தஞ்சாவூர் மன்னர் ஆகியோர் நிதி உதவி செய்தனர். இக்காலத்தில் ஆசிரியர்களுக்குத் தேவையான இருமொழிப் பயிற்சியளிக்கப்பட்டது. மேலும்,

www.tamilarangam.net



சென்னை மாகாணத்தில் புதிய பள்ளிகள் சிலவும் தொடங்கப் பட்டன.

1817 - 1818-இல் முறையான ஆங்கில முறைக் கல்விக் கூடங்கள் நிறுவப்பட்டன. முதன் முதலாக இப்பள்ளிகள் பாளையங் கோட்டையிலும் திருநெல்வேலியிலும் தொடங்கப்பட்டன. 1822-க்கும் 1826-க்கும் இடைப்பட்ட காலங்களில் ஆங்கில முறைப் பள்ளிக் கூடங்கள் பலவாகப் பெருகின. இப்பெருக்கத்திற்குச் **சர். தாமசு மன்றோ** (சென்னை மாகாண ஆளுநர்) என்பாரது பரிந்துரை காரணமாக அமைந்தது. அவர் பின்வரும் மூன்று பரிந்துரைகலைச் செய்தார்.

1. ஆயிரம் மக்கள் உள்ள ஒவ்வொரு ஊரிலும் கட்டாயம் ஒரு பள்ளியாவது நிறுவப்பட வேண்டும்.
2. வட்டாட்சிப் பள்ளிகள் அமைக்கப்பட்டு **(Dasildary Schools)** அப்பள்ளிகளில் மாணவர்களின் தாய்மொழியில் கல்வி அளிக்கப்பட வேண்டும்.
3. மாகாணத்தின் பெரிய நகரங்களில் நகராட்சிப் பள்ளிகள் **(Collectorate Schools)** அமைக்கப்பட்டு ஆங்கில வழிக்கல்வி அளிக்கப்பட வேண்டும்.

இப்பரிந்துரை தாய்மொழிகளைக் கல்வி மொழியாக்குவதற்கு உதவியதோடு ஆங்கில வழிக்கல்வியை மேலும் வளர்ப்பதற்கும் வாய்ப்பளித்தது.

1830-இல் "சென்னை மாகாணத்தார் அரசு ஆட்சிப் பணிகளில் இடம் பெறுவதற்கு வாய்ப்பாக, அவர்களின் கல்வி ஆங்கிலத்தில் அமைவதே நல்லது" என்ற கருத்தை மையக் கல்விக்குழு சென்னை மாகாணக் கல்விக் குழுவிற்குப் பரிந்துரை செய்தது. இப் பரிந்துரையை ஏற்ற சென்னை மாகாண அரசு மேலும் பல புதிய ஆங்கில வழிப் பள்ளிகளைத் திறந்தது.

இந்திய ஆட்சிப் பொறுப்பு 1857-ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி முறையிலிருந்து இங்கிலாந்துப் பாராளுமன்றத்தின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. இந்தியச் செயலாளராகப் பொறுப்பேற்ற **“இசுடான்லி பிரபு”**, **“சார்லசு உட்”** கல்விக் குழுவின் அறிக்கையோடு **“எல்லன்பரோ”** என்பவரது தலைமையில் அமைந்த கல்விக் குழுவின் அறிக்கையினையும் ஏற்று 1859-இல் தொடக்கக் கல்விக்கான முழுப் பொறுப்பையும் அரசு ஏற்க ஆணை பிறப்பித்தார். இவருக்குப் பின் வந்த **மேயே பிரபு** (Lord Mayo) கல்விப் பொறுப்பினை முழுமையாக மாகாண அரசுகளிடம் ஒப்படைக்க ஆணை பிறப்பித்தார். இந்த முறை தாய்மொழிவழிக் கல்விக்கு உதவியது.

1914-இல் சென்னை மாகாணத்தில் உள்ள பள்ளிக் கல்வியின் எல்லா நிலைகளிலும் தாய்மொழிகளைக் கொண்டு வருவதற்கான பல்வேறு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால், **சென்னை ஆட்சி மன்றக்குழு** (Madras Legislative Council) தாய்மொழி வழிக் கல்விக்குப் பல்வேறு மறுப்புகளைக் கூறித் தடையாக இருந்தது. அதற்குப் பின்வரும் காரணங்களை அக்குழு சுட்டிக் காட்டியது.

1. பொது மக்கள் தாய்மொழி வழிக்கல்வியில் முழு ஈடுபாடு கொள்ளவில்லை.
2. தேவையான பாடப்புத்தகங்கள் கிடைக்கவில்லை.
3. போதுமான கலைச்சொற்கள் இல்லை.
4. சென்னை மாகாண பன்மொழிச் சூழலைக் கொண்டதாக இருக்கிறது.
5. உயர் கல்வியைத் தொடருவதற்கு வாய்ப்பில்லை.
6. தாய்மொழியில் பயிற்றுவிக்க ஆசிரியர்கள் முன்வருவதில்லை.

இதே ஆண்டில், பொதுமக்கள் பயிற்றுக்குழு இயக்குநர் மாநாட்டில் பேசிய ஆளுநர் தாய்மொழிகளைப் பயிற்று மொழிகளாகத் தொடருவதில் உள்ள சிக்கலைப் பின்வருமாறு சுட்டிக் காட்டினார்.

www.tamilarangam.net



1. ஆங்கிலம் கல்வியில் எல்லா நிலைகளிலும் இடம் பெறுகிறது.
2. கற்றவர்கள் ஆங்கிலத்தில் நாட்டம் உடையவர்களாக இருக்கின்றனர்.
3. ஆட்சி, நிருவாகத் துறைகளில் ஆங்கிலமே தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது.
4. புதிய கல்வியியல் துறைகள் இந்திய மொழிகளுக்குப் புதியன. எனவே, இவைகளைப் பயிலுவதற்கு ஆங்கிலமே உகந்தது.
5. தாய்மொழிகளைப் பயிற்று மொழியாக்க அரசே விரும்பி னாலும், இந்நாட்டுக் கல்வி கற்றோரின் எதிர்ப்பைச் சமாளிப்பது பெரும் சிக்கலாகும்.

**1915-இல் உயர்மட்ட ஆட்சிக்குழு (Imperial Legislative Council)** தாய்மொழிவழிக் கல்விக்கு வாய்ப்பாக ஒரு சட்டம் இயற்றியது. இச்சட்டம், பள்ளிக் கல்வி முழுவதும் தாய் மொழிகளிலேயே அமைய வேண்டும்; ஆங்கிலம் இரண்டாம் மொழியாக இடம்பெற வேண்டும் என்றது. இச் சட்டமானது, "நாட்டின் முன்னேற்றத்தைப் பாழாக்கும்", "கல்வியின் தரத்தைக் குறைத்துவிடும்" என்று பலரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இவ் வெதிர்ப்பைத் தொடர்ந்து பொதுமக்கள் கருத்துக் கணிப்பிற்கு விடப்பட்டது. அக்கணிப்பில், ஆங்கிலம் பயிற்று மொழியாக இருப்பதில் உள்ள பல்வேறு சிக்கல்களும், தாய்மொழிவழிக் கற்பதில் உள்ள நன்மைகளும் கூறப்பட்டன. பின்னர், சென்னை மாகாண அரசு கொள்கை அளவில் இச் சட்டத்தை ஏற்றுக் கொண்டது.

**1917-இல்** அமைக்கப் பெற்ற **கல்கத்தா கல்விக்குழு,** உயர்நிலைப் பள்ளிவரை தாய்மொழியில் கற்பிக்க வேண்டும் எனும் பரிந்துரையை முன் வைத்தது. இப்பரிந்துரை தாய்மொழி வழிக் கல்விக்கு ஊக்கத்தைக் கொடுத்தது. மேலும் அக்குழு, ஆங்கிலத்தையும் கணிதத்தையும் தவிர மற்ற எல்லாப்பாடங்களுக்கு மான வினாக்களும் விடைகளும் அவரவர்களின் தாய்மொழிகளில் அமைய வேண்டும் என்றது.

www.tamilarangam.net



**1917-18-களில் சென்னை பொதுமக்கள் பயிற்று இயக்கம்** (Directorate of Madras Public Instruction) உயர்நிலைப் பள்ளிக் கல்வியைத் தாய் மொழியில் பயிற்றுவிக்கக் கருத்துத் தெரிவித்தது. ஆனால், இதைச் சட்டமாக்க இயலாதென்றும், பள்ளி நிருவாகத்தினர் விரும்பினால் தாய்மொழிகளில் கல்வி கற்பிக்கலாம் என்றும் அரசு ஆணை பிறப்பித்தது. பயிற்று மொழியைத் தேர்ந்தெடுப்பதைப் பள்ளியின் விருப்பத்திற்கு விட்டபோதிலும், நடைமுறையில் தாய்மொழிவழிக் கல்வி பின்பற்றப்படவில்லை.

1919-இல் பொதுமக்கள் பயிற்றுக்குழு, "பொதுத் தேர்வுகளைத் (Public Examinations) தாய் மொழிகளிலேயே நடத்த வேண்டும்" என்று கேட்டுக் கொண்டது. அதற்குத் தமிழக அரசின் சார்பில் தாய்மொழிகளில் தேர்வை நடத்துவதில் அரசிற்கு யாதொரு சிக்கலும் இல்லை;

ஆனால், இதை மாணவர்கள் விரும்புவதில்லை என்று பதிலளிக்கப்பட்டது.

1921-இல் **மாண்டேகு செம்சு போர்டு** சீர்திருத்தத்தின் விளைவாக நாட்டில் இரட்டை ஆட்சி முறை ஏற்படுத்தப்பட்டது. இரட்டை ஆட்சியின்படி கல்வித் துறை முழுக்க முழுக்க மாகாண அரசுகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இது மாகாண மொழிகள் கல்வித் துறையில் இடம் பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்தது.

## உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலேயே உயர்நிலைப் பள்ளிகளில் தாய்மொழிகள் பயிற்று மொழியாக இடம் பெறுதல் எனும் கருத்து கொள்கை அளவில் ஏற்கப்பட்டிருந்தது. என்றாலும், நடைமுறைப்படுத்துவது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. 1938-களில் தொடங்கப்பட்டு 1955களில்தான் இத்திட்டத்தை முழுமையாகச் செயற்படுத்த முடிந்தது. இம்மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு இடைவெளி தேவைப்பட்டுள்ளது. (19ஆம் நூற்றாண்டின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிற்பகுதியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை) மிகக் கூடுதலான கால அளவில் இத்திட்டம் வெற்றி பெற்றது.

## விருப்பப் பயிற்று மொழியாகத் தமிழ்

1921-இல் ஆர். வேங்கடரத்தினம் தலைமையில் அமைந்த குழு, உயர்நிலைப்பள்ளிக் கல்வி குறித்துப் பின்வரும் பரிந்துரையை அளித்தது. "உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்றுமொழியாகவும், தேர்வு மொழியாகவும் வட்டார மொழிகள் அமைவதே தமது உயர் நோக்க மாகும் என்றாலும் இவ்வாறு வட்டார மொழிகள் பயிற்று மொழியாக அமைவதில் தொடக்கத்தில் பல சிக்கல்கள் இருக்கின்றன. இச் சிக்கலைத் தவிர்ப்பதற்கு வாய்ப்பாக, ஆங்கிலம், வட்டார மொழி இவையிரண்டில், பயிற்று மொழியாகத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பள்ளி நிருவாகத்தினருக்கு விட்டுவிட வேண்டும். ஆனால், பள்ளிகளில் பாடங்கள் ஆங்கிலம், வட்டாரமொழி ஆகிய இரண்டின் மூலமாகவும் கற்பிக்கப்பட வேண்டும். தேர்வுகளில் மொழிப் பாடங்கள் தவிர, பிற பாடங்களின் வினாக்கள் முறையே ஆங்கிலத்திலும் வட்டார மொழிகளிலும் இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது."

1924-இல் திரு. சத்தியமூர்த்தி மேல்சபையில், "உயர்நிலைப் பள்ளிகளில் வட்டார மொழிகள் கட்டாயப் பயிற்று மொழியாக்கப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். இத்தீர்மானம் மாவட்ட உயர்நிலைக் கல்விக் கழகங்களுக்குக் (District Secondary Education Boards) கருத்துக் கேட்டு அனுப்பப்பட்டது. மாவட்டக் கல்விக் கழகங்கள் இத்தீர்மானத்தின் மீது ஒருமித்த கருத்துக் கொண்டிருக்கவில்லை. கல்வித்துறை இயக்குநர் இக்கருத்துகளோடு தமது குறிப்புகள் சிலவற்றையும் சேர்த்து அரசுக்கு அனுப்பினார். அவற்றில் பின்வரும் செய்திகள் இடம் பெற்றிருந்தன.

1. உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம், வட்டாரமொழி ஆகிய இரண்டின் வழியேயும் கற்பிப்பது, வட்டார மொழிகளின் படிப்படியான வளர்ச்சிக்கு உதவும். அதே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேளையில் இருக்கின்ற முறையை முழுவதும் மாற்றா வண்ணம் இருக்க இந்த இணக்கமான நிலை (Compromise) பயன்படும்.

2. பயிற்று மொழியைக் கட்டாயமாக்குவதைவிடப் பள்ளி நிருவாகத்தினர் மற்றும் பெற்றோர்களின் விருப்பத்திற்கு விட்டுவிடுவதே பயிற்று மொழிச் சிக்கலை எளிதாகத் தீர்ப்பதற்குரிய வழியாகும்.

3. உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலத்திலிருந்து தாய் மொழி வழியாகக் கற்பது படிப்படியாகவே மாற்றம் பெற வேண்டும். இதற்கான தொடக்கத்தை நான்காம் படிவத்தில் (IV FORM) தொடங்கி மூன்றாண்டுகளில் சிறிது சிறிதாக மேற்கொள்ள வேண்டும்.

அரசு மேற்குறித்த இயக்குநரின் கருத்தை ஏற்று, அவரைச் சென்னைப் பல்கலைக்கழகக் கல்விக் குழுவில் கலந்து கொண்டு இதற்கான செயற்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்குமாறு பணித்தது.

1925-இல் கல்வி இயக்குநர், சென்னைப் பல்கலைக் கழகக் கல்விக் குழுவோடு இணைந்து தயாரித்த திட்டத்தை அரசின் ஒப்புதல் பெற்று, பள்ளிகளுக்குச் சுற்றறிக்கை மூலம் அனுப்பினார். அந்த அறிக்கையில் பின்வரும் செய்திகள் இடம் பெற்றிருந்தன.

1. பள்ளி நிருவாகங்கள், உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்று மொழியாக் ஆங்கிலத்தையோ, வட்டார மொழியையோ தெரிவு செய்து கொள்ளலாம்.

2. ஆயினும், ஆங்கில மொழிக்குரிய பாடவேளை உள்பட பள்ளி நேரத்தில் பாதிநேரம் ஆங்கிலம் வழிக் கற்பிப் பதற்கும், மீதி நேரம் தாய்மொழி வழிக் கற்பிப்பதற்கும் பயன் படுத்த வேண்டும்.

www.tamilarangam.net



3. பள்ளிப் பொதுத் தேர்வில், ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம், ஈப்ரு, பிரஞ்சு, செருமன் ஆகிய மொழிப் பாடங்களைத் தவிர மற்றவற்றிற்கு வினாத்தாள்கள் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஒரியா, மராத்தி, உருது ஆகிய மொழிகளில் இருக்கும். வடமொழி மற்றும் தாய்மொழி வினாத்தாள் அந்தந்த மொழிகளில் மட்டுமே இருக்கும். அரபு, பெர்சியன் மொழிகளுக்குரிய வினாத்தாள் உருதுவில் மட்டுமே இருக்கும். மாணவர்கள் மொழிப்பாடமல்லாத பிற பாடங்களுக்கு ஆங்கிலத்திலோ அந்த வினாத்தாள் அமைந்துள்ள மொழியிலோ விடையளிக்கலாம்.

## பள்ளிக் கல்வியில் மிதமான வளர்ச்சி

உயர்நிலைப் பள்ளிகளில் தாய்மொழிகளைப் பயிற்று மொழியாகக் கொள்ளும் முயற்சி மிக மெதுவாகவே நடந்தது. 1937-வரை இம் முயற்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை என்பதைப் பயிற்று மொழியின் கொள்கையை மதிப்பீடு செய்த ஆய்வு சுட்டிக் காட்டுகிறது. 1930-களில் மொத்தம் இருந்த முந்நூறு பள்ளிகளில் ஐம்பத்தைந்து பள்ளிகளில் தான் தாய்மொழிவழிக் கல்வி கற்பிக்கப்பட்டது.

1927, 28, 29, 30, 32, 37 ஆகிய ஆண்டுகளில் சென்னைச் சட்ட மன்றத்தில் தாய்மொழிவழிக் கல்வியை வலியுறுத்தித் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. 1927-இல் **காலேசுவரராவ்** கொண்டு வந்த தீர்மானத்தில், உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்று மொழி ஆங்கிலத்திலிருந்து உடனடியாகத் தாய்மொழிகளுக்கு மாற வேண்டும் என்றும், 1929-இல் **சத்தியமூர்த்தியும் மல்லையாவும்** கொண்டு வந்த தீர்மானத்தில், ஐந்தாண்டுகள் காலக்கெடு தரலாம் என்றும் கூறப்பட்டன. இத்தீர்மானங்களின் மீது நடந்த விவாதங்களில் தாய்மொழிவழிக் கல்விக்கான இன்றியமையாமையும், அக்கல்வியை வழங்குவதில் உள்ள சிக்கல்களும் விரிவாக விளக்கப்பட்டன.

www.tamilarangam.net


1938-இல் அரசு வெளியிட்ட ஆணை, தாய்மொழி வழிக் கல்விக்குப் புது வளர்ச்சியைக் கொடுத்தது. அந்த ஆணை, "இதுவரை தாய்மொழிவழிக் கல்வியை மேற்கொள்ளாத பள்ளிகள் இனிக் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டும்; முதலில் நான்காம் படிவத்தில் தொடங்கித் தொடர்ந்து உயர்நிலைப் பள்ளிக் கல்வி முழுவதும் செயற்படுத்தப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டது.

இந்த ஆணையைப் பன்மொழி மக்கள் வாழும் பகுதிகளில் செயற்படுத்துவதில் உள்ள சிக்கல் உணரப்பட்டு அந்தப் பகுதிப் பள்ளிகளுக்கு மட்டும் கூடுதல் காலக்கெடு கொடுக்கப்பட்டது.

"அரசுச் சட்டம் 1935-இன்படி மாகாணங்களுக்குத் தன்னுரிமை கிடைத்தபின், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிற்று மொழி மாற வேண்டும் என்ற தேவை ஏற்பட்டது. சில மாகாண அரசுகள் குறைந்த அளவு உயர்நிலைப் பள்ளி அளவிலாவது மாநில மொழிகள் பயிற்று மொழியாக வேண்டும் என்று தீர்மானித்தன. இந்த நிலையில்தான், சென்னை மாகாணத்திலும் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் பயிற்றுமொழியாக்கப்பட்டது. "1939-இல் கல்வியமைச்சராக இருந்த **டாக்டர் சுப்பராயன்** தமிழை உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்று மொழியாக்கினார்".

1942-இல் சென்னை ஆட்சியில் அறிக்கையின் (Madras Administrative Report) படி, இடைநிலைப் பள்ளி அளவில் எல்லா வகுப்புகளிலும் தாய்மொழி அல்லது வட்டார மொழி வழியே கல்வி அளிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இவ்வாண்டில், சென்னை மாகாணத்திலுள்ள முந்நூற்றித் தொண்ணூற்றுநான்கு பள்ளிகள் மொழியல்லாத பாடங்களை வட்டார மொழிகளில் கற்பித்தன. இப்பள்ளிகளில் பயின்ற மாணவர்களும், தனித் தேர்வர்களும் அவரவர்களின் தாய்மொழிகளிலேயே விடையெழுதினர். என்றாலும் குறிப்பிட்ட சில பள்ளிகளுக்கு ஆங்கிலம் வழியாகக் கற்பிக்கும் உரிமையை வழங்க பள்ளிக் கல்வி இயக்குநருக்கு உரிமையளிக்கப்பட்டிருந்தது.

www.tamilarangam.net


## ஆங்கில வழிப் பள்ளிகளுக்கு விதிவிலக்கு

1946 சூனில் வெளியிடப்பட்ட அரசாணை ஆங்கில வழிப் பள்ளிக்கான விதிவிலக்குப் பற்றிக் குறிப்பிடுகிறது.

1. விதி விலக்கு ஓராண்டிற்கு மட்டுமே - அதிலும் தக்க காரணங்கள் இருந்தால் மட்டுமே அளிக்கப்பட வேண்டும்.
2. தொடக்கப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் உள்ள தொடக்கக் கல்வியில் மூன்றாம் படிவத்திற்குக் கீழுள்ள வகுப்புகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட மாட்டாது.
3. ஒன்றிற்கும் மேற்பட்ட பள்ளிகள் ஓரிடத்தில் இருந்தால் அங்கு ஒரு பள்ளியில் ஒரு பிரிவிற்கு மட்டுமே விலக்கு அளிக்கப்படும்.
4. வட்டார மொழி வழிக் கற்பிக்கத் திறன் பெற்ற ஆசிரியர்கள் கிடைக்காத பகுதிகளில் உள்ள பள்ளி களுக்கு ஓராண்டிற்கு விதிவிலக்கு அளிக்கலாம். ஆனால், அப்பள்ளிகள் ஓராண்டிற்குள் இதற்கேற்பத் தம்மைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும்.
5. வட்டார மொழிகளில் பாடநூல்கள் இல்லை என்னும் காரணத்திற்காக விலக்கு அளிக்கப்பட மாட்டாது. ஏனெனில், தற்போது போதுமான பாடநூல்கள் கிடைக்கின்றன.

## முதல் மொழியாகத் தமிழ்

1946 சூன் 6-ஆம் நாளிட்ட அரசாணைக் குறிப்பு, ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக அறிவித்தது. இதற்கு முன்பு ஆங்கிலம் முதல் மொழியாகவும் வட்டார மொழிகள் இரண்டாம் மொழிகளாகவும் இருந்தன. 1946-இல் வெளியிடப்பட்ட அரசாணையின் மூலம் தமிழ் உள்ளிட்ட வட்டார மொழிகள் முதல்

www.tamilarangam.net


மொழிகளாகவும், ஆங்கிலம் இரண்டாம் மொழியாகவும் மாற்றப் பட்டது. ஆங்கிலம் இரண்டாம் மொழியாக மாற்றப்பட்டதால் ஆறாம் வகுப்பிற்குப் பிறகு கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. முதல் மொழியாக இருந்த போது தொடக்கக் கல்வியிலிருந்து கற்பிக்கப்பட்டு வந்தது.

## பள்ளிகளில் தமிழ்வழிக் கல்விச் சிக்கலும் - அரசின் அணுகுமுறையும்

உயர்நிலை அளவில் தாய்மொழி வழிக் கல்வியை மேற் கொண்டதில் எழுந்த சிக்கல்கள் பெரும்பாலும் மொழிச் சிறுபான்மையினர் மற்றும் இருமொழி பயன்படும் பகுதிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் தொடர்பானவைகளாகும். இவற்றைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் 1947-ஆம் ஆண்டு அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இடம் பெயரும் பணிகளில் உள்ளோரின் குழந்தைகள், தாய்மொழியாக இந்த வட்டார மொழிகளைக் கொள்ளாதோர் ஆகியோர் வட்டார மொழி வகுப்பில் சேர்ந்தாலும், அவர்கள் ஆங்கிலத்திலோ அல்லது அவர்களது தாய்மொழி களிலோ படித்துத் தேர்வு எழுத அனுமதிக்கப் படுவார்கள்.

2. இருமொழி வழங்கும் பகுதிகளில் உள்ள பள்ளி நிருவாகங்களுக்கு தாய்மொழிகளில் பாடங்களைக் கற்பிக்கும் பொருட்டுக் கூடுதலாக ஆசிரியர்களை நியமித்துக் கொள்ள அரசு உதவும்.

இவ்வாறு, மொழிச் சிறுபான்மையினருக்கும், இருமொழிச் சூழலிலிருப்போருக்கும் அரசு தக்க ஏற்பாடுகளைச் செய்து பயிற்று மொழிச் சிக்கலைத் தீர்த்துக் கொண்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## ஐம்பதுகளில் தமிழ்வழிக் கல்வியின் முன்னேற்றம்

சென்னை மாகாணத்திற்கு உட்பட்டிருந்த பள்ளிகளில் தமிழ், தெலுங்கு போன்ற மாகாண மொழிவழியாகப் பயிற்றுவிக்கும் பள்ளிகளின் எண்ணிக்கை 1948 முதல் 1950 வரையிலான காலப் பகுதிகளில் குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்குக் கூடியது.

| ஆண்டு | மொத்தப் பள்ளிகள் | தாய்மொழிவழிப் பள்ளிகள் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1948 | 626 | 527 | 83% |
| 1949 | 693 | 647 | 93% |
| 1950 | 769 | 749 | 97% |

## கல்வி பற்றிய வெள்ளை அறிக்கை (1956)

1956-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களின் இறுதி வாரத்தில் கல்வி மீதான வெள்ளையறிக்கை மாநிலத்தின் இரு அவைகளிலும் வைக்கப்பட்டது. சட்டப் பேரவையில் 1956, ஏப்பிரலில் 6-ஆம் நாளும், சட்ட மேலவையில் 1956, ஏப்பிரலில் 7-ஆம் நாளும் இது குறித்து விவாதிக்கப்பட்டது. விவாதத்திற்குப் பின் சென்னை மாநிலத்திற்கான கல்வித் திட்டத்தை இறுதி வடிவம் செய்வதற்காகத் தனியே ஒரு குழு அமைக்கச் சட்டப் பேரவை முடிவெடுத்தது. இதன்படி அமைக்கப்பட்ட குழு கல்வியின் மற்ற கூறுபாடுகளுடன் மொழிகள் பற்றியும் ஆய்ந்து அறிக்கை தந்தது. குழுவின் கருத்துப்படி, தமிழகத்தில், தமிழ்வழிக் கல்வி பற்றிய நிலை கீழ்க் காணும் வண்ணம் விளக்கப்பட்டது.

பள்ளிக் கல்வியைப் பொறுத்தமட்டில் தமிழ்வழிக் கல்வி ஆய்வு நிலையைக் கடந்துவிட்டது. கல்வியின் எல்லா நிலை களிலும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு முழுமையாக மாற்று வதற்குச் சிறிது காலமாகும். தமிழ் பயிற்றுமொழி ஆகியபோதிலும் கூட, அறிவியல், தொழில் நுட்பம் போன்ற தொழில்சார் அறிவைப்

www.tamilarangam.net



பெறுவதற்கு வாய்ப்பாக ஆங்கிலத்தின் தேவை தொடர்ச்சியாக இருந்து கொண்டே இருக்கும்.

மேற்சுட்டிய கருத்தானது, பள்ளிகளில் ஆங்கிலம் கற்பித்தலை மேம்படுத்துவதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் தேவையைச் சுட்டிக்காட்டியது. அண்மைக் காலங்களாக ஆங்கில அறிவைப் பெறுவதில் சரிவு ஏற்பட்டுள்ளது. இவ்வீழ்ச்சி தடுக்கப்பட வேண்டும்; முடியுமானால் முற்றிலும் மாற்றப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்த இவ்வறிக்கை அதற்காகப் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

1. பள்ளிக் கல்வியின் எல்லா நிலைகளிலும் ஆங்கிலம் கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்பட வேண்டும்.

2. தொடக்கக் கல்வி சீர்திருத்தக் குழுவின் பரிந்துரைப்படி, உயர் கல்வியில் ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாகச் செயற்படுத்தப்பட வேண்டும்.

3. கல்வியில் பின் தங்கிய சமூகங்களிலிருந்து வந்து பயிலும் மாணவர்களுக்கு, ஐந்தாம் வகுப்பிலிருந்து ஆங்கில நெடுங்கணக்குடன், பாடப்புத்தகங்களைக் கொண்டு, ஆங்கிலச் சொற்களைக் கற்பிக்க வேண்டும். இக்கருத்தினை ஏற்று ஒருங்கிணைந்த தொடக்கக் கல்வி வகுப்புகளில் இதற்கான வழிவகை செய்யப்பட வேண்டும். இதற்காக, இருமொழிப் பாடப்புத்தகங்கள் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

1956-க்குப் பிறகு தமிழ்வழிக் கல்வியில் தளர்ச்சி நிலை காணப்பட்டது. இவ்வாண்டிற்குப் பிறகு இன்று வரை நீடித்து நிற்கும் ஆங்கில வழிக்கல்வி செல்வாக்குப் பெற்றது. இது குறித்த முழுமை யான விளக்கங்களைப் பெற அப்போதைய கல்வி நிலை, பிந்தைய ஆண்டுகளில் கல்வி நிலை பற்றிய விபரங்கள் இங்குத் தேவை யாகின்றன.

www.tamilarangam.net



## ஆங்கிலோ - இந்திய பள்ளிகளுக்கான சிறப்பு விதிகள்

ஆங்கிலோ - இந்தியர்களுக்குக் கொடுக்கப்பட்ட அரசியல் சட்ட உறுதிக் கேற்ப, ஆங்கிலோ - இந்தியப் பள்ளிகள் தொடர்ந்து நடைபெற்றும், சிறப்பு ஒழுங்குமுறை விதிகளின்படி நெறிப்படுத்தப் பட்டும் வந்தன. இப்பள்ளிகளில் ஆங்கிலம் பயிற்று மொழியாக இடம் பெற்று வந்தது. இப்பள்ளிகளில், ஆங்கிலோ இந்தியரல்லாத தமிழர்களும் தம் குழந்தைகளை ஆங்கிலம் வாயிலாகக் கற்பிக்க, இப்பள்ளிகளைப் பயன்படுத்திக் கொண்டனர். ஒவ்வோர் ஆங்கிலோ - இந்தியப் பள்ளியிலும், ஆண்டுச் சேர்க்கையில் நாற்பது விழுக்காடு அவர்களல்லாதோருக்கு ஒதுக்க வழிவகை செய்யப்பட்டது. நடைமுறையில் இவ்விழுக்காடு மிகுதியாகவே இருந்தது. 1958-59ஆம் ஆண்டுகளில் இப்பள்ளிகளின் எண்ணிக்கை நாற்பதாக இருந்தது. மொத்தம் 9,637 ஆண்களும், 8,880 பெண்களும் இப்பள்ளிகளில் பயின்றனர். 1985-86ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவைக் குறிப்பின்படி நாற்பத்தைந்து பள்ளிகள் இருந்தன. இந்தி, பிரஞ்சு, செருமன், தமிழ் ஆகிய மொழிகள் மொழிப் பாடத்தைத் தெரிவு செய்வதில் விருப்பத்திற்கு விடப்பட்டிருந்தன.

## நடுவணரசுப் பள்ளிகள்

ஐம்பதுகளின் பிற்பகுதியிலும், அறுபதுகளின் முற்பகுதியிலும் தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்களிலும் நடுவண் பள்ளிகள் பல தொடங்கப்பட்டன. நடுவணரசால் அமைக்கப் பெற்ற இப்பள்ளிகளிலும், நடுவணரசு இடைநிலைப் பள்ளிகளிலும் (Central Board of Secondary Education - CBSE) ஆங்கிலம் பயிற்று மொழியாக அறிமுகப்படுத்தப்பட்டது. 1968-69 முதல் சமூகத் துறைப்பாடங்கள் (Social Studies) இந்தியில் மட்டுமே பயிற்று விக்கப்படுகின்றன.

www.tamilarangam.net



## இடைநிலைப் பள்ளிகளில் ஆங்கிலப் பயிற்றுமொழி

இடைநிலைப் பள்ளிக் கல்வியில் தாய்மொழியிலோ, வட்டார மொழியோ பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்றிருப்பினும், சில பள்ளிகளுக்கு ஆங்கில வழிக் கல்வியை வழங்க உரிமை அளிக்கப்பட்டது. இப்பள்ளிகளில், ஆங்கிலோ இந்தியப் பள்ளி களில் பயின்ற மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1962-இல் இடைநிலைக் கல்வியில் (Secondary Education) ஆறாம் வகுப்பிலிருந்து ஆங்கிலவழிக் கல்வியைத் தொடங்க 65 பள்ளி களுக்கு இசைவளிக்கப்பட்டது. ஆங்கில வழியில் சேருவதற்கான விதிமுறைகள் வருமாறு: (1966ஆம் ஆண்டின்படி)

1. தாய்மொழியாகத் தமிழைக் கொண்டிராத பெற்றோர் களின் குழந்தைகள்.
2. தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தும் பல்வேறு மாநிலங்களுக்கு மாற்றம் செய்யப்படக் கூடிய ஊழியர் களின் குழந்தைகள்.
3. தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தும் இப் பள்ளிகளில் சேருவதற்கு முன் ஆங்கிலம் வழிப் பயின்ற குழந்தைகள்.

## தமிழ்வழிக் கல்விக்கு எதிர்ப்பும் ஆங்கிலவழிக் கல்வியில் ஆர்வமும்

அரசின் இந்த ஆணை பொதுமக்களின் எதிர்ப்பிற்கு உள்ளாகியது. நடுவணரசுப் பணிகளில் உள்ளவர்கள் மட்டுமன்றித் தொழில் துறையிலும், வணிக நிலையிலும் ஈடுபட்டுள்ளோரும் கூட மாநிலம் விட்டு மாநிலம் செல்ல வேண்டியிருப்பதால் அவர் களின் குழந்தைகளுக்கும் ஆங்கில வழிப் பிரிவுகளே ஏற்றவை என்று கருத்துக் கூறப்பட்டது. அத்தோடு ஆங்கில வழிக் கல்வியினை அரசு தமிழ்வழிக் கல்வியைப் போல இலவசமாக்க வேண்டும் என்றும் கோரப்பட்டது. மேலும், அரசு இசைவு பெற்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அல்லது அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகளில் அரசே ஆங்கில வழிப் பிரிவுகளைத் தொடங்க வேண்டும். சிற்றூர்க் குழந்தைகளும் ஆங்கில வழிக் கல்வியைக் கற்கத் தக்க ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும், என்று பொது மக்களிடமிருந்து ஆங்கிலத்திற்குச் சார்பான கருத்துகள் பல அரசின் முன் வைக்கப்பட்டன.

1969-ஆம் ஆண்டு மட்டும் ஆங்கிலவழிப் பள்ளிகளில் இடம் பிடிப்பதற்கான எண்ணிக்கை 20 முதல் 25 விழுக்காடு வரை கூடியதாகத் தெரிகிறது. சென்னை நகரத்தில் மட்டும் 120 பள்ளிகள் இருந்தன. இவற்றுள் பெரும்பாலானவை நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட ஆங்கில வழிப் பிரிவுகளைக் கொண்டிருந்தன. இப்பள்ளிகளில் சேர்ப்பதற்குரிய இடங்களைப் போல மூன்று நான்கு மடங்கு விண்ணப்பங்கள் வரப்பெற்றன. நகரத்திலிருந்த 300 ஆங்கிலவழி மழலையர் பள்ளிகளிலிருந்தும் ஆங்கிலவழி இடைநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு மாணவர்கள் விண்ணப்பித்தனர். அரசின் இசைவு பெறாத இப்பள்ளிகள் சுமார் ஒரு இலட்சம் மாணவ மாணவியர்களுக்கு ஆங்கில வழிக் கல்வியை வழங்கின.

## ஆங்கில வழிப் பள்ளிகள் மிகுவிப்பு

பொது மக்களுக்கும், பள்ளி நிருவாகத்தினருக்கும் ஆங்கில வழிக் கல்வியில் இருந்த ஆர்வத்தைக் கருத்தில் கொண்டு ஆங்கில வழிப் பிரிவுகளை அதிகமாக்க அரசு முடிவு செய்தது. 1967-இல் நடந்த **மாநிலக் கல்வித்துறை மாநாட்டில்** (Conference of the State Education Officer) ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும், வட்டத் தலைநகரங்களில் ஆங்கில வழிப் பள்ளிகளைத் திறக்கவும், தற்போது இயங்கும் ஆங்கில வழிப் பள்ளிகளில் பிரிவுகளைக் கூடுதலாக்கவும் பரிந்துரைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, தனியார் பள்ளிகளிடமிருந்து தமிழுக்கு இணையாக ஆங்கிலவழிக் கல்விப் பிரிவுகளைத் தொடங்கவும்,

www.tamilarangam.net



ஆங்கிலப் பிரிவு வகுப்புகளைக் கூடுதலாக்கவும், தமிழ்வழிப் பிரிவுகளை ஆங்கிலவழிப் பிரிவுகளாக மாற்றிக் கொள்ளவும் நிறைய வேண்டுகோள்கள் ஆங்கிலவழிக் கல்விக்குச் சார்பாக வந்தன. இதற்கு அரசு,

1. தமிழ் வழியில் இயங்கும் வகுப்புகள் எக்காரணம் கொண்டும் ஆங்கில வழிக்கு மாற்றப்பட மாட்டா.
2. தமிழுக்கு இணையான/கூடுதலான ஆங்கில வழிப் பிரிவுகளைத் தொடங்குவதற்குப் போதுமான இடவசதி இருக்க வேண்டும்.
3. ஒவ்வொரு வகுப்பிலும் 40 மாணவர்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

என்று குறிப்பிட்டது.

மேலும், அரசு உயர்நிலைப் பள்ளிகளில், ஆங்கில வழிப் பிரிவுகள் 100 கூடுதலாகத் தொடங்குவதற்கு அனுமதியளித்தது. ஆண்டு தோறும் ஆங்கிலவழிக் கல்விக்கான தேவை கூடிக் கொண்டே வந்தது.

## அரசு இசைவு பெறாத மழலையர், தொடக்கப் பள்ளிகளில் பயிற்று மொழி

தொடக்க வகுப்புகளில்லாத இடைநிலைப் பள்ளிகளுக்கு மாணவர்களை அனுப்பும் பள்ளிகளாகப் புற்றீசல் போல் மழலையர் பள்ளிகள் வளர்ந்தன. இவை, அரசின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கவில்லை. இலாபமீட்டும் வணிக நிறுவனங்களாகச் செயல்பட்டு வந்தன, வருகின்றன. இப்பள்ளிகளைப் பற்றி ஆராய்ந்த ஆய்வுக்குழுவொன்று இப்பள்ளிகளைப் படிப்படியாக மூட வேண்டும். அல்லது இசைவு பெற்ற பள்ளிகளாக மாற்ற வேண்டும் என்று பரிந்துரைத்தது. தனியார் பள்ளிகளின் கூட்டமைப்பு (The Federation of Private School) தம் பள்ளிகளின் உள்ளாட்சியில் அரசின் தலையீட்டை விரும்பவில்லை என்று குறிப்பிட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பின்னர் அரசு பின்பற்றும் பாட நூல்களையும், பாடத் திட்டத்தையும், ஐந்தாம் வகுப்பிற்கான பொதுத் தேர்வையும் பின்பற்ற இவ்வமைப்பு ஒத்துக் கொண்டது.

1979-இல் தமிழகக் கல்வியமைச்சர் தமிழகத்திலுள்ள மழலையர் பள்ளிகளில் தமிழ் பயிற்றுமொழியாக மாற்றப்பட வேண்டும் என்றும், இதற்குப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார். மேலும், இப்பள்ளிகளை ஒழுங்கு செய்யும் நடவடிக்கைகள் அரசின் கவனத்தில் இருப்பதாகவும், ஏழைகளுக்கான மழலையர் பள்ளி களை அரசே நடத்த விரும்புவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## தொடக்க நிலைக் கல்வியில் ஆங்கில மொழிப்பாடம்

கி.பி. 1857-ஆம் ஆண்டு ஆங்கில அரசு கல்வியை மாநில அரசுகளிடம் ஒப்படைத்ததைத் தொடர்ந்து தாய்மொழிக் கல்வி சிறப்படைந்தது. எனினும், 1948-ஆம் ஆண்டிலிருந்து ஆங்கிலத்தினை மூன்றாம் வகுப்பிலிருந்து ஒரு பாடமாகக் கற்றுக் கொடுக்க ஆணை பிறப்பிக்கப்பட்ட நிலை தமிழகத்தில் ஆங்கில மோகத்திற்கு வித்திட்டது. அதன் பின்னர் மீண்டும் ஆங்கில மொழியினை மூன்றாம் வகுப்பிலிருந்தே பயிற்றுவிக்கும் நிலை யினை மாற்றி ஆறாம் வகுப்பிலிருந்து பயிற்றுவிக்க அரசு ஆணை பிறப்பித்தது. இந்த முறை தாய்மொழிக் கல்விக்குப் பெரும் வாய்ப்பாக அமைந்தது. அதன் பின்னர், கல்வியமைச்சராகப் பொறுப்பேற்ற **சி.சுப்பிரமணியம்** ஆங்கிலத்தை ஐந்தாம் வகுப்பிலி ருந்தே பயிற்றுவிக்க ஆணை பிறப்பித்தார்.

காமராசர் அமைச்சரவையில், கல்வியமைச்சராகப் பொறுப் பேற்ற **பக்தவச்சலம்** 1963-ஆம் ஆண்டு மீண்டும் மூன்றாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்றுக் கொடுக்க ஆணை பிறப்பித்தார்.

1985-ஆம் ஆண்டு மைய அரசு கொண்டு வந்துள்ள புதிய கல்விக் கொள்கை இந்தித் திணிப்பிற்கு வகை செய்கிறது. இதற்குச் சான்றாக நாவோதயப் பள்ளிகள் செயல்படுவதைக் காட்டலாம்.

www.tamilarangam.net



நாவோதயப் பள்ளிகள் தமிழகத்தில் தொடங்க மைய அரசு எடுத்த முயற்சிக்குக் கடும் கண்டனங்கள் எழுந்தன. இதனைத் தொடர்ந்து தமிழக அரசு புதிய கல்விக் கொள்கையினைச் செயற்படுத்த 1987-ஆம் ஆண்டு **"மால்கம் ஆதிசேசையா"** தலைமையில் குழுவொன்றினை அமைத்தது. அக்குழுவின் பரிந்துரைப்படித் தமிழக அரசு தமிழ் நாட்டிலுள்ள தொடக்கப் பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்து ஆங்கிலத்தைக் கட்டாயப் பாடமாகக் கற்றுக் கொடுக்க முன் வந்துள்ளது.

## உயர்நிலைக் கல்வியில் ஆங்கில மொழிப்பாடம்

1937-ஆம் ஆண்டு முதல் 1939-ஆம் ஆண்டு வரை சென்னை மாகாணத்தின் முதல்வராக இருந்த **இராசாசி** தமிழ் வழிக் கல்வியை வரவேற்றார். அவர் **"தமிழில் முடியும்"** எனும் கருத்தமைந்த நூல் ஒன்றினையும் எழுதி வெளியிட்டார். தமிழகத்தைப் பொருத்தவரை 1939-ஆம் ஆண்டு "இராசாசி" அமைச்சரவையில் கல்வி அமைச்சராக இருந்த **சுப்பராயன்** தாய் மொழியை உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்று மொழியாக்கினார்.

1944-ஆம் ஆண்டு **"சான்சார் சண்ட்"** தலைமையில் அமைக்கப்பட்ட கல்விக்குழுவின் பரிந்துரைப்படி, இந்தியா முழுவதிலுமுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் தாய்மொழிகள் பயிற்று மொழியாக்கப்பட்டன.

சென்னை மாநிலத்தில் தமிழ்வழிக் கல்வி நிலை குறித்து ஆராய அமைக்கப்பட்ட சென்னை மாநில சட்டப்பேரவை உறுப்பினர் குழுவின் பரிந்துரைப்படி, தமிழ், இந்தி, கன்னடம், தெலுங்கு, மலையாளம், உருது, குசராத்தி, சமசுகிருதம், அரபிக், பெர்சியன், பிரஞ்சு, இலத்தீன், செருமன் ஆகிய மொழிகளுள் ஏதேனும் ஒன்றினை உயர்நிலைக் கல்வியில் பயிற்று மொழியாகக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. எனினும், உயர்நிலைக் கல்வியில் தமிழ் கட்டாயப் பாடம் என்னும் நிலை உருவாக்கப்பட வில்லை.

www.tamilarangam.net



**காமராசர்** தமிழக முதல்வராக இருந்தபோது 22.12.1956-இல் தமிழை ஆட்சி மொழியாக்கும் வகையில், **சென்னை ஆட்சி மொழிச் சட்டம்** (Madras Official Language Act) ஒன்றை நிறை வேற்றினார். பின்னர் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற பக்தவச்சலம், 1956-இல் கொண்டு வந்த தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்திற்குத் தடையாக இருந்தார். அவர் 1963-ஆம் ஆண்டு முதல் உயர்நிலைப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பிலிருந்து பதினோராம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிலும், ஒரு பிரிவில் ஆங்கிலம் பயிற்று மொழியாக வகை செய்யும் சட்டம் இயற்றினார்.

1978-ஆம் ஆண்டில், 11,12-ஆம் வகுப்புகளில் ஒவ்வொரு பிரிவிலும் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்க வகை செய்யும் ஆணையினைக் கல்வியமைச்சர் **செ. அரங்கநாயகம்** பிறப்பித்தார்.

## ஆங்கில மொழிச் சிறப்புப் பயிற்சி

1969-இல் 5-ஆம் வகுப்பில் ஆங்கிலம் கட்டாயப் பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டதை ஒட்டி, ஆங்கிலம் கற்பித்தலை மேம்படுத்துவதற்கான முயற்சியை அரசு மேற்கொண்டது. பிரிட்டிசு கவுன்சில் உதவியுடன் ஆங்கில மொழி கற்பித்தல் இயக்ககத்தை (English Language Teaching Campaign) அமைத்தது. புதிய முறைகளில் ஆங்கிலத்தைக் கற்பிப்பதற்கான பயிற்சியை இவ்வமைப்பின் மூலம் ஆசிரியர்கள் பெற்றனர். ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியிலிருந்தும் இரண்டு அல்லது மூன்று பட்டதாரி ஆசிரியர்களைத் தெரிவு செய்து, இவர்கள் மூலமாக 27,000 தொடக்கக் கல்விஆசிரியர்களுக்குப் பயிற்சி தரப்பட்டது.

பிரிட்டிசு கவுன்சிலின் உதவியுடன் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கும் ஆங்கிலத்தில் புலமை பெறுவதற்கு வாய்ப்பாகப் பயிற்சித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் எட்டு முதல் பதினொன்றாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு பயிற்சி பெற்றனர். 1972

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அக்டோபர் 22-இல் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் "இம் மாணவர்கள் இரண்டு மூன்று வாரங்களுக்கு முறையாக ஆங்கிலம் படிக்கவும், பேசவும், எழுதவும் சிறந்த பயிற்சியளிக்கப்படுவார்கள்" என்று குறிப்பிட்டார். மாநில அரசு இதற்காக உருபாய் 50,000 ஒதுக்கியது. ஒவ்வோர் ஆண்டும் 300 மாணவர்கள் பயிற்சி பெற்றனர்.

1974-இல் தமிழக அரசு, நடுவணரசு கல்வி வாரிய (Central Board of Education) உதவியுடன் ஆசிரியர்களுக்கு ஆங்கிலத்தைப் புரியும்படிக் கற்பிக்கச் சிறப்புப் பயிற்சி அளித்தது.

1978-இல் ஐதராபாத்து ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகளின் நடுவண் நிறுவனத்தில் (CIEFL) கூடிய ஆங்கிலம் கற்பிக்கும் கல்வி நிறுவனங்களின் மாநாட்டில் "சிற்றூர்ப் பள்ளிக் கான ஆங்கிலப் பயிற்று முறை" குறித்து ஆராயப்பட்டது. பள்ளி களுக்குச் சிற்றூர் சார்ந்த பாடப் பொருளைத் தருவதுடன் சிறப்புப் பயிற்று முறைகளினால் அவர்களின் ஆங்கிலத்தரத்தை உயர்த்து வதற்கான முயற்சிகளைச் செய்யுமாறு அம் மாநாடு கேட்டுக் கொண்டது.

## தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தமிழின் இடம்

தமிழக அரசு நடத்தும் அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகள், உள்ளாட்சி நிறுவனத்தின் கீழ் செயற்படும் பள்ளிகள், ஆகியவற்றில் தமிழ் பயிற்று மொழியாக உள்ளது. ஆனாலும், தமிழ் கட்டாயப் பாடம் என்னும் நிலை இல்லை.

## ஆங்கிலோ - இந்தியப் பள்ளிகள்

இப்பள்ளிகள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேயர் களின் குழந்தைகள் கல்வி பெறுவதற்காகத் தொடங்கப்பட்டவை. 1985 - 86ஆம் ஆண்டு தமிழகச் சட்டப்பேரவைக் குறிப்பின்படித் தமிழகத்தில் 45 பள்ளிகள் இயங்குவதாகக் குறிக்கப்பட்டுள்ளது.

www.tamilarangam.net

இப்பள்ளிகளின் பயிற்று மொழியாக ஆங்கிலம் இருந்து வருகிறது. இந்தி, பிரஞ்சு, செருமன், தமிழ் ஆகிய மொழிகள் விருப்பத்திற்கு விடப்பட்டுள்ளன.

## மெட்ரிக்குலேசன் பள்ளிகள்

1985 - 86ஆம் ஆண்டு தமிழக அரசு சட்டப்பேரவைக் கல்விக்குறிப்பேட்டின்படி, 63 மெட்ரிக்குலேசன் பள்ளிகள் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பள்ளிகளின் எண்ணிக்கை இன்று அதிகமாகியுள்ளது. மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் ஆங்கிலம் பயிற்று மொழி. இந்தி, செருமன், பிரஞ்சு போன்ற மொழிகளும் கற்பிக்கப்படுகின்றன.

## ஐ.சி.எஸ்.சி., சி.பி.எஸ். பள்ளிகள்

இப்பள்ளிகளின் எண்ணிக்கை 200-க்கு மேல் உள்ளன. மைய அரசின் கல்வித்துறை இப்பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குகிறது. ஆங்கிலம் பயிற்று மொழியாக உள்ளது. இந்தி, பிரஞ்சு, செருமன், ருசியன் போன்ற மொழிகள் கற்றுத் தரப்படுகின்றன. இப்போது, முதல் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை தமிழ் மொழியை விரும்புவோர் கற்றுக் கொள்ள வாய்ப்பு உள்ளது. ஆனால், 1988ஆம் ஆண்டு அக்டோபரில் மைய அரசின் கல்வி வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் 1989-ஆம் ஆண்டிலிருந்து முதல், முதல் வகுப்பு முதல் ஆறாம் வகுப்பு வ்ரை தமிழ் பயிற்றுவிக்கப் படமாட்டாது எனக் கூறப்பட்டுள்ளது. விரும்புவோர் ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை தமிழை ஒரு பாடமாகப் பயிலலாம்.

## கேந்திர வித்தியாலயாப் பள்ளிகள்

இருபது பள்ளிகள் தமிழகத்தில் உள்ளன. மைய அரசின் நேரடிப் பார்வையில் இப்பள்ளிகள் இயங்கி வருகின்றன. ஆங்கிலம் பயிற்று மொழி. இந்தி, பிரஞ்சு, செருமன், உருது, ருசியன் ஆகிய மொழிகளுள் ஏதாவது ஒரு மொழியைப் பயிலலாம். இப்பள்ளிகளில் தமிழைப் பயில வாய்ப்பில்லை.

www.tamilarangam.net

## முன் தொடக்கப்பள்ளிகள்

தமிழகத்தில் 50,000 மழலையர் பள்ளிகள் உள்ளன. இப்பள்ளிகளில் ஆங்கிலம் பயிற்று மொழி தமிழ், இந்தி, போன்ற மொழிகளில் ஏதேனும் ஒன்றினைக் கற்கலாம் எனும் நிலை உள்ளது.

## பல்கலைக் கழகங்களில் தமிழ் வழிக்கல்வி

1946-இல் தாய்மொழி அல்லது வட்டார மொழிகளை உயர்நிலை பள்ளி அளவில், பயிற்று மொழிகளாக வெற்றியுடன் அறிமுகப்படுத்திய பிறகு கல்லூரி, பல்கலைக் கழகம் ஆகிய உயர் கல்வி அளவிலும் தமிழைப் பயிற்றுமொழியாக ஆக்குவது குறித்து அரசு சீரிய கவனம் செலுத்திற்று. உயர்க்கல்விக்கான பயிற்று மொழி குறித்து ஆராய்ந்து கூறுவதற்கு இந்திய அரசு ஒரு குழுவை அமைத்தது. கீழ்க்கண்ட பரிந்துரைகளை அறிக்கையாக அக்குழு அரசிற்கு அளித்தது.

1. பல்கலைக் கழக அளவில் பயிற்று மொழியாக ஆங்கிலம் இருப்பதை நீக்கி, வட்டார மொழிகளை வரும் ஐந்தாண்டுகளுக்குள் இடம் பெறச் செய்ய வேண்டும்.

2. குறிப்பிட்ட ஐந்தாண்டுகளுக்குள், பல்கலைக் கழகங்கள் வட்டார மொழிகளைப் பயிற்று மொழியாகவும் தேர்வு மொழியாகவும் ஏற்க வேண்டும். இதற்குப் பிறகு ஆங்கிலம் பல்கலைக் கழகங்களில் பயிற்று மொழியாக இடம் பெறலாகாது.

3. ஆங்கிலத்தைப் பயிற்று மொழியிலிருந்து நீக்குவது, படிப்படியாக, சிறிது சிறிதாக ஐந்தாண்டுக் காலத்திற்குள் அமைய வேண்டும்.

4. வட்டார மொழிகளில் தரம் வாய்ந்த புத்தகங்கள் விரைவாக உருவாக்கப்பட வேண்டும்.

www.tamilarangam.net

5. கூடுமான வரையில் அறிவியல் கலைச்சொற்களுக்குத் தாய்மொழிச் சொற்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இயலாத நிலையில் உலகளாவிய நிலையில் பயன்படுத்தும் சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

6. நடுவணரசு உடனடியாக மொழியியலாளர், அறிவியலாளர் ஆகியோரைக் கொண்ட குழுவொன்றை அமைத்து எல்லா இந்திய மொழிகளுக்குமான "அறிவியல் கலைச்சொல் அகர முதலி" ஒன்றை உருவாக்க வேண்டும். இக்குழு மாநிலங்களுடனும், பல்கலைக் கழகங்களுடனும் இணைந்து பணியாற்றும் அமைப்பாக இருக்க வேண்டும். இப்பணி, ஐந்தாண்டுக் காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். இப்பணிகளைத் தொடங்க, நடுவணரசு உடனடியாகப் போதிய நிதியினை ஒதுக்க வேண்டும்.

7. நடுவணரசு மாநிலங்களுக்கு வழிகாட்டும் வகையில், இந்தியாவின் ஆட்சி மொழியில் (இந்தி) உடனடியாக அறிவியல் பாடப் புத்தகங்களைக் கொண்டு வர வேண்டும், இது பிற மாநில மொழிகளும் பின்பற்ற உதவியாக இருக்கும். மற்றப் பாடப்புத்தகங்கள், அந்தந்தப் பல்கலைக் கழகங்களினாலோ, பல்கலைக் கழகப் பாடத்திட்ட குழுக்களாலோ எழுதப் படலாம். இவற்றுக்கான நிதி உதவியை நடுவணரசு செய்ய வேண்டும்.

## சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு

மேற்குறித்த பரிந்துரைகளைச் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு ஆராய்ந்து கீழ்க்காணும் தீர்மானங்களை 1950-இல் நிறைவேற்றியது.

1. கல்வி நிறுவனங்களிடமிருந்து ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகத் தேர்ந்தெடுக்கும் உரிமையினைப் பறிக்கக் கூடாது.

www.tamilarangam.net



2. பயிற்று மொழியைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை அந்தந்தப் பல்கலைக் கழகங்களுக்கே விட்டுவிட வேண்டும்.
3. அனைத்திந்திய ஆராய்ச்சி நிறுவனங்களில், ஆங்கிலமே பயிற்று மொழியாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.
4. பல்கலைக் கழக அளவில் வட்டார மொழிகளைப் பயிற்று மொழியாகக் கொள்ளுவதற்கான முன்னேற் பாடுகள் உடனடியாகச் செய்யப்பட வேண்டும்.
5. பயிற்று மொழியாக்குவதற்குத் தேவையான, பொருத்த மான வகையில் வட்டார மொழிகளை வளப்படுத்த வேண்டும்; காலப்போக்கில் பயிற்றுமொழி ஆகும்போது அவற்றைப் பயன்படுமாறு செய்ய வேண்டும்.
6. இப் பணிகளைச் செய்வதற்கு உரிய தகுதி வாய்ந்த அலுவலர்களை நியமித்து தேவையான புத்தகங்களை உருவாக்க வேண்டும்.

இத் தீர்மானங்களைக் கருத்தில் கொண்டு 1951இல் சட்டப் பேரவைக் குழு, வட்டார மொழிகளைப் பயிற்று மொழிகளாக அறிமுகப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், பொருத்தமான பாடப் புத்தகங்கள் கொண்டு வருவதற்கு உதவியாக, நான்கு முக்கிய மொழிகளில் (தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம்) தரப்படுத்தப்பட்ட அறிவியல் கலைச்சொல் தொகுதியை வெளியிடவும் பரிந்துரை செய்தது.

## பயிற்று மொழி மாநாடு

**இது தொடர்பாக 1955-இல் அரசு ஒரு மாநாட்டைக் கூட்டியது. இம் மாநாட்டில் மாநிலத்திலுள்ள கல்லூரி முதல்வர்கள், பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள், (சென்னை, அண்ணாமலை) ஆர்வமுள்ள பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இம் மாநாட்டில் கலந்து கொண்டோரில் பெரும்பாலோர், மாநிலத்தில் தமிழ் பேசும் பகுதிகளில் உள்ள கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொள்ள வேண்டும் என்றனர். சிலர் மாற்றம் ஏற்படுவதை விரும்பவில்லை. வேறுசிலர் படிப்படியாக மாற வேண்டும் என்றனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், மாற்றுவதிலுள்ள இடர்ப்பாடுகளையும், மாற்றத்திற்குத் தேவையான முன்னேற்பாடுகளையும், கல்லூரி அளவில் ஆங்கிலத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய இன்றியமையாமையையும் பற்றி எடுத்துக் கூறினார். சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், பாடநூல்களாக மட்டுமன்றிப் பார்வை நூல்களாகப் பயன்படுத்தவும் தமிழில் நல்ல நூல்கள் இல்லாமைபற்றிக் குறிப்பிட்டதுடன், இம் மாற்றம் படிப்படியாகச் செய்யப்பட வேண்டும் என்றார்.

இம்மாநாட்டில், தமிழ் பயிற்று மொழியாக இடம் பெறுவதற்கு எதிர்ப்பு என்பது நேரடியாக இல்லை. ஆனால், திட்டமிட்ட மாற்றமாக இருக்க வேண்டும் என்பதாகவும், அதற்குப் போதிய முன்னாக்கப் பணிகள் தேவை என்பதாகவும் இருந்தது. சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், இச் சிக்கல் தொடர்பாக அரசுக்கு அறிவுரை கூற சிறப்புக் குழுவொன்று அமைக்க வேண்டுமென்று கருத்துத் தெரிவித்தார். அவரின் கருத்தை ஏற்ற அரசு, அவரையே தலைவராகக் கொண்ட குழுவொன்றை அமைத்தது. கல்லூரிகளில் வட்டார மொழிகளைப் பயிற்று மொழியாகக் கொள்ளுவதற்கு ஏற்றவகையில் ஆக்கப் பணிகளை எடுத்துச் சொல்லுதல், வட்டார மொழிகளில் அறிவியல் கலைச்சொல் தொகுதிகளை வெளியிடுவதற்கான வழிவகைகளை ஆராய்தல், கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் அனைத்துப் பாடங்களுக்குமான பாடநூல்களை உருவாக்குவதற்குத் திட்டமிடல் ஆகிய பணிகளைச் செய்யுமாறு அரசு இக்குழுவைப் பணித்தது. ஆனால், இக்குழு இது குறித்து எந்த முடிவும் எடுத்ததாகத் தெரியவில்லை. கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்கும் முயற்சி 1956-இல் ஆட்சி மாறியதுடன் எப்போதும் போல மிகத் தொலைவிற்குச் சென்றுவிட்டது.

www.tamilarangam.net


## தமிழ் ஆட்சிமொழிக் குழு

1957-இல் ஆட்சி மொழிக் குழுவின் அறிக்கை வெளியாகியது. அரசு, இவ்வறிக்கையைச் சட்டப் பேரவை, மேலவைகளிலுள்ள அனைத்துக் கட்சியாளர்களுடனும் கலந்து பேசித் தம் கருத்தைத் தெரிவித்தது. பள்ளிக் கல்விக்கும், கல்லூரிக் கல்விக்கும் தொடர்பு இருக்க வேண்டும். கல்வியின் எல்லா நிலைகளிலும் தமிழைப் பயிற்று மொழியாக்குவதே நமது கல்விக் கொள்கையின் தற்போதைய குறிக்கோளாகும். கல்லூரிகளில் ஆங்கிலம் பயிற்று மொழியிலிருந்து நீக்கப்பட்டால், அந்த இடத்திற்குத் தமிழ்தான் வர முடியுமே தவிர வேறுமொழிக்கு இடமில்லை என்று அரசு தன் கருத்தைத் தெரிவித்தது.

## மொழிவழி மாநில அமைப்பும் - தமிழ்ப் பயிற்று மொழி வளர்ச்சியும்

1956-இல் மொழிவழி மாநில அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. மாநில அமைப்பு நாட்டின் ஒற்றுமைக்குப் பெருந்தீங்கினை ஏற்படுத்திவிட்டது என்று சிலர் கூறிய போதும், அது மாநில மொழிகளின் வளர்ச்சிக்குப் புதிய உந்துதலைக் கொடுத்தது "மொழிவழி மாநிலங்கள் அமைந்த பின்புதான் மாநில மொழிகளுக்கு முக்கியத்துவம் ஏற்பட்டது; கல்வியின் எல்லா நிலைகளிலும் மாநில மொழிகளே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், இறுதியாகப் பயிற்று மொழியாகவும் ஆக்கப்பட வேண்டும் என்றும் எண்ணங்கள் தோன்றின". கல்வியானது, உயர்ந்தவர்களுக்கு மட்டும் உரியதாக; ஏழை எளியவர்களுக்கு எட்டாக்கனியாக இருந்தது. கல்விக் கற்ற ஒரு சில குடும்பங்கள் முன்னேறவும், எளியவர்கள் எளியவர்களாக இருக்கவுமே ஆங்கிலக் கல்வி வழிவகுத்தது. இதனைத் தடுத்து அனைவருக்கும் கல்வியறிவு கிடைக்க உயர்நிலைப் பள்ளிகளில் விளைந்த நன்மைகள் கல்லூரிகளிலும் கிடைக்க வேண்டுமாயின் ஆங்கிலப் பயிற்று மொழியை மாற்றுவதன் மூலம் மட்டுமே அவ்வாறான நன்மை கிடைக்கும் என்று பலரும் கருதினர்.

3

"இத்தனை ஆண்டுக் காலமாக நான் கல்வித்துறையில் செய்த சேவையின் காரணமாக இன்றைக்கு என்ன அறிந்து கொண்டேனென்றால் மாணவர்களுக்குச் சிந்தனா சக்தி பெரிய அளவில் பெருகவில்லை என்பதும், அதற்குக் காரணம் அந்நியமொழி ஒன்றின் மூலம் கல்வி கற்று வந்து, அது அவர்களுக்குப் பெரும்பாரமாக, இடையூறாக இருந்து வந்திருக்கிறது என்பதும்தான்" என்று **சி.சுப்பிரமணியம்** கூறினார்.

"பல்கலைக் கழகப் படிப்புப் பிரதேச மொழியில் இருந்தால் மாணவர்களது ஆளுமையில் இன்று காணும் பிளவுகளும் மனநோயும் மறையும்; சிந்தனையும், செயலும், உணர்ச்சியும் பிணைந்து செல்லும்; எண்ணங்கள் திறமையடையும்; அவர்கள் வாழும் சமுதாயம் உயரும்" என்று **க. அருணாசலம்** கூறினார்.

"எல்லாப் பாடத்தையும் ஆங்கிலத்தில் போதிப்பது என்பது தற்போதைய வழக்கமாக இருக்கிறது. ஆங்கிலப் பாடம் போதிப்பவர்தான் அதில் நிபுணத்துவம் பெற்றிருப்பார். மற்றப் பாடங்களைப் போதிப்பவர்கள் அம்மொழியில் தீவிரமான பாண்டித்தியமில்லாமல் இருப்பார்கள். ஆகவே, மாணவர்களுக்கும் ஐந்தாறு விதமான இங்கிலீஷில் பாடபோதனை நடக்கிறது. இதனால் எது இங்கிலீஷ் என்று தெரியாமல் திகைக்க வேண்டியிருக்கிறது. ஸ்தலபாஷையில் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் பொழுது வகுப்பில் சூழ்நிலையே மாறுதல் அடைகிறது. பாடங்கள் எல்லாம் ருசிகரமாக அமைகின்றன. ஸ்தல பாஷையைக்கொண்டு போதிப்பதால் புத்திப் பூர்வமாக ஏற்படக் கூடிய பளு குறைந்து விடுகிறது" என்று **சத்தியமூர்த்தி** கூறினார்.

"இந்தியாவில் ஓர் அந்நிய மொழியின் மூலமே உயர்தரக் கல்வி போதிக்கப்படுகிறது. இதனால் தேசத்திற்குத் தீங்கு ஏற்பட்டு விட்டது. இந்தக் காலத்திலேயே வாழும் நாம் இந்தத் தீங்கு எவ்வளவு பெரியது என்பதை மதிப்பிட முடியாது" என்று பலரும் பல்வேறு நன்மைகளைச் சுட்டிக் காட்டினர்.

www.tamilarangam.net


1956-இல் தமிழக ஆட்சி நிருவாகத்திலும், கல்லூரிகளிலும் பயன்படும் நோக்கத்தில் தமிழ் ஆட்சி மொழிச் சட்டம், சட்டப் பேரவையில் நிறைவேற்றப் பட்டது. அப்போதைய கல்வியமைச்சர் "அரசுரிமையை நாம் நம் தமிழன்னைக்கு அளித்திருக்கிறோம் என்றால், மற்ற துறைகளில் நாம் பெற்றிருக்கக் கூடிய சுதந்திரத்திற்கு இதுவும் ஒரு சின்னமாகவே அமைந்திருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

இவ்வாறாக அமைந்த மொழிவழி மாநில அமைப்பும், தமிழ் ஆட்சி மொழிச் சட்டமும் கல்லூரி, பல்கலைக் கழக அளவிலான தமிழ்வழிக் கல்விக்குப் புதிய அணுகுமுறையைக் கொடுத்தன.

## கல்லூரிகளில் தமிழ்வழிக் கல்வி

தமிழகக் கல்லூரிகளில் தமிழ்வழிக் கல்வி விடுதலைக்கு முன்னமாகத் தொடங்கப்பட்டது. 1948-இல் திருச்சி தேசியக் கல்லூரி, சேலம் கல்லூரி, கோவை கல்லூரி ஆகிய மூன்று கல்லூரிகளிலும் இடைநிலை (Intermediate) அளவில் தமிழ் பயிற்று மொழியாக்கப் பட்டது. இக்கல்லூரிகளில் வரலாறு, பொருளியல் ஆகிய பாடங்கள் தமிழில் கற்பிக்கப்பட்டன. நாடு விடுதலை பெற்று, அரசியல் சூழ்நிலை தமிழ்வழிக் கல்விக்கு ஏதுவாக இருந்தும், வேற்று மொழியை ஒதுக்கித் தள்ளும் ஆர்வம் இருந்தும்; பல்வேறு சிக்கல்களினால் இது முழுமையான அளவில் வெற்றி பெறவில்லை. மாணவர்களைப் பொறுத்தவரையில் போதுமான பாடநூல்கள் இல்லை; அத்தோடு வேலைவாய்ப்புப் பற்றிய அச்சமும் அவர் களுக்கு இருந்தது. ஆசிரியர்களுக்கு உதவச் சரியான மேற்பார்வை நூல்கள் கிடைக்கவில்லை. எனவே, இக் கல்லூரிகள் மீண்டும் ஆங்கில வழிக்குத் திரும்பின.

1959 மார்ச்சுத் திங்களில் சட்ட மேலவையில், நடந்த பயிற்று மொழி தொடர்பான விவாதத்தில், பயிற்சிக் கல்லூரிகளில் (Training Schools) விருப்பப் பாடம் உள்ளிட்ட அனைத்துப் பாடங்களையும் தமிழில் கற்பிக்க வாய்ப்பளிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கல்லூரிக் கல்விக்கான முன்னோடித் திட்டம்

1959-இல் தமிழக அரசு 1963-64ஆம் கல்வியாண்டு முதல் இளங்கலைப் பட்ட வகுப்பில் தமிழ்வழிக் கற்பிக்க ஆணை பிறப்பித்தது. அதில், "உயர்கல்வி உள்ளிட்ட அனைத்துக் கல்வியும் தமிழ் வழியில் வழங்குவதே நமது கல்விக் கொள்கையின் நோக்கமாகும். ஆனால், உயர்கல்வியைப் பொறுத்த மட்டில் அறிவியல், தொழில்சார் கல்விக்கும், கலையியல் கல்விக்கும் நிறைய வேறுபாடு உள்ளது. எனவே, முதலில் கலையியல் பாடங்களைத் தமிழ் வழியில் கற்பிக்க விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இளங்கலைப் பட்ட வகுப்பில் ஆங்கிலப் பயிற்று மொழியிலிருந்து தமிழ்ப் பயிற்றுமொழிக்கு மாறுவதாவது, முதலாண்டு 1963-64லும் இரண்டாமாண்டு 1964-65லும், மூன்றாமாண்டு 1955-66லும் நடைபெறுவதாகத் திட்டமிடப்பட்டது. இதற்கென ஒரு முன்னோடிக் கல்லூரி ஒன்றை உருவாக்க வேண்டியிருந்தது. "கோவை அரசினர் கல்லூரி முன்னோடிக் கல்லூரியாகத் தெரிவு செய்யப்பட்டது." இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவும், தேவையான ஆக்கப் பணிகளைச் செய்யவும் **ஜி.ஆர். தாமோதரன்** அவர்களைத் தலைவராகக் கொண்டு கல்லூரித் தமிழ்க்குழு (College Tamil Committee) அமைக்கப்பட்டது.

இக்குழு கீழ்க்காணும் பரிந்துரைகளை அரசுக்கு வழங்கியது:

1. முன்னோடிக் கல்லூரியில் தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலிருந்தும் இளங்கலை பயில வரும் மாணவர்களில் தலைசிறந்த மாணவர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

2. இப்புதிய வகுப்பினை நடத்துவதற்கான ஆசிரியர்கள் தகுதி வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும். பல்வேறு பாடங்களைத் தமிழில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து ஒரு குழுவாக இயங்க வேண்டும். தகுதி

வாய்ந்த ஆசிரியர் குழுவொன்றினைக் கல்லூரித் தமிழ்க் குழு உருவாக்கித் தரும். முன்னோடிக் கல்லூரிகளுக்குத் தேவையான ஆசிரியர்களை அரசு இக்குழுவிலிருந்து தெரிவு செய்ய வேண்டும்.

3. புதிய வகுப்புகளுக்கான பாடப் புத்தகங்களும், விரிவுரைக் குறிப்புகளும் உடனடியாக உருவாக்கப்பட வேண்டும்.

4. தேவையைப் பொறுத்து உலகளாவிய கலைச் சொற்களைக் கூடிய வரையில் அப்படியே பயன்படுத்தலாம், தமிழ்க் கலைச் சொற்களையும் பயன்படுத்தலாம். ஆனால், அவற்றிற்கு அருகில் அவற்றிற்குரிய உலகளாவிய கலைச்சொல் வடிவம் தரப்பட வேண்டும்.

தமிழ், பயிற்று மொழியாக மாற்றம் பெற வேண்டியதன் தேவையையும், இதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சியினையும் பற்றிக் கருத்துத் தெரிவித்த கல்லூரித் தமிழ்க் குழுவின் பரிந்துரைகளை மாநிலக் கல்வி அறிவுரைக் குழுவின் (State Education Advisory Committee) முன் அரசு வைத்தது. இப்பரிந்துரைக்குப் பெரும்பாலானோர் ஆதரவு கிட்டியது. இதையொட்டித் தமிழக அரசு, 1959 ஏப்பிரலில், 1963-64ஆம் ஆண்டுகளில் இளங்கலைப் பட்ட அளவில், பயிற்றுமொழி ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாற்றப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது.

உயர்கல்வியில் தமிழ் பயிற்று மொழியாக இடம் பெறுவது குறித்து உயர்கல்வி' அமைப்புகளிடமிருந்து எவ்வித எதிர்ப்பும் தொடக்கத்தில் இருக்கவில்லை. 1948-லேயே துணைவேந்தர்களின் கல்விக்கு (Committee of the Vice - Chancellors) பல்கலைக் கழக அளவில் பயிற்று மொழியாக ஆங்கிலத்தை மாற்றுவது வரும் ஐந்தாண்டுகளுக்குள் செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. பல்கலைக் கழகக் கல்விக் குழுவும் (University Education Commission) வட்டார மொழிகளே கட்டாயப் பயிற்று மொழியாக

www.tamilarangam.net


இடம்பெற வேண்டும் என்று பரிந்துரைத்தது. ஆட்சிமொழிக் குழுவும் (Official Language) வட்டார மொழிவழிக் கல்வியை வற்புறுத்தியது பல்வேறு குழுக்களின் பரிந்துரைகளோடு அரசின் ஆணையையும் சென்னைப் பல்கலைக் கழகம் ஏற்றுக் கொண்டது. இம் முன்னோடித் திட்டம் பற்றி ஆராய அரசு 1960-இல் திட்ட மதிப்பீட்டுக் குழுவை (The Programme of Education Committee) அமைத்தது. இக்குழு, தமிழ் வழியில் தரப்படும் ஆசிரியர்களின் விரிவுரைகளை மாணவர்கள் நன்கு புரிந்து கொள்ளுகின்றனர் என்றும், ஆங்கிலப் பகுதிகளைத் தமிழில் எளிமையாக மொழி பெயர்க்கின்றனர் என்றும், தமிழ் பயிற்று மொழியாக இருப்பதனால் பொதுவான ஆங்கிலத்தின் தரம் குறையவில்லை என்றும் கருத்துத் தெரிவித்தது.

## கல்லூரிக் கல்வியில் விரிவாக்கம்

1962-இல் முன்னோடித் திட்டம் பற்றிச் சட்டப் பேரவையில் நடந்த விவாதத்தில், தமிழ்வழிப் பயில மாணவர்களிடையே ஆர்வமில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டது. இவ்வாண்டில் பொள்ளாச்சிக் கல்லூரியில் தமிழ்வழிப் பயில இருபது பேர் சேர்ந்திருந்தாலும் இரண்டு மாணவர்களே வகுப்பிற்கு வந்து கொண்டிருந்தனர். என்றாலும், தமிழக அரசு சென்னை அரசினர் கல்லூரி, இராணிமேரி கல்லூரி, குடந்தை அரசினர் கல்லூரி ஆகியவற்றிலும் கோவை மாவட்டத்தில் நான்கு கல்லூரிகளிலும் தமிழ்வழிக் கல்வியை 1963-64ஆம் கல்வியாண்டில் அறிமுகப் படுத்தியது.

1965இல் சட்டப் பேரவையில் எழுந்த வினா ஒன்றிற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர் அப்போதைய தமிழ்வழிக் கல்வி பற்றியும், அங்கு பயிற்றுவிக்கும் பாடங்கள் குறித்தும் குறிப்பிட்டார்.

1. கோவை அரசினர் கலைக் கல்லூரி - வரலாறு, அரசியல், பொருளியல், நிலவியல், உளவியல் ஆகிய பாடங்கள் தமிழ் வழியில் கற்பிக்கப்பட்டன.

www.tamilarangam.net


2. கோவை பூ.சா.கோ. கலைக் கல்லூரி - பொருளியல் சமூக அறிவியல் ஆகிய பாடங்கள் தமிழ் வழியில் கற்பிக்கப்பட்டன.

3. பொள்ளாச்சி என்.ஜி.எம். கல்லூரி - வரலாற்றுத் துறைப் பாடங்களை மட்டும் தமிழில் கற்பித்தது.

4. கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி - பொருளியல் பாடத்தை மட்டும் தமிழ் வழியில் கற்பித்தது.

5. குடந்தை அரசினர் கல்லூரி - பொருளியல் பாடத்தை மட்டும் தமிழ் வழியில் கற்பித்தது.

1966 - 67-இலிருந்து அனைத்து அரசினர் கல்லூரிகளிலும் புகுமுக வகுப்பு (P.U.C.) கலையியல் பாடங்கள் தமிழ்வழிப் பயிற்றுவிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளமை 1966 சட்டப்பேரவை விவாதக் குறிப்பிலிருந்து தெரிய வருகிறது. இரண்டாண்டுகளுக்குப் பிறகு 1968 - 69இல் மாற்றுப் பயிற்றுமொழியாக (Alternative Medium) அறிவியல் பாடங்களுக்கும் தமிழ் அறிமுகப்படுத்தப் பட்டது.

## தமிழ்வழிக் கல்விக்கு எதிரான போராட்டம் (1970)

1969-சூனில், தமிழ்ப் பயிற்று மொழியை மிகுவிக்கும் வகையில், தமிழக அரசுக் கல்லூரிகளில் மேலும் சில பாடங்களைத் தமிழ்வழிக் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆங்கில வழிப் பிரிவுகள் சிலவும் கூடத் தமிழ்வழிப் பிரிவுகளாக மாற்றப்பட்டன. இதை மாணவர்கள் தமிழ்த் திணிப்பு என்றெண்ணி, வகுப்புகளைப் புறக்கணித்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் கல்லூரிகள் நடைபெறவில்லை. சென்னை, மதுரை, அண்ணாமலை ஆகிய பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கல்லூரிகள் மூடப்பட்டன. மாணவர்கள் தாங்கள் விரும்பும் பயிற்றுமொழி, பாடப் புத்தகங்களின்மை, எதிர்கால வேலைவாய்ப்புப் பற்றிய அச்சம்,

www.tamilarangam.net



பாதுகாப்பின்மை ஆகியன தமிழகம் முழுவதும் ஆங்கிலத்திற்குச் சார்பான ஓரியக்கத்தை உருவாக்கின.

1970 செப்டம்பர் 29-இல் 85,000 பெற்றோர் தம் குழந்தைகளுக்குப் பயிற்று மொழியைத் தெரிவு செய்யும் உரிமையைத் தங்களுக்கு அளிக்க வேண்டுமென்று கோரிக்கையொன்றை வெளியிட்டனர். பெற்றோர் மாணவர் சங்கம் "தம் குழந்தைகளுக்கு எவ்விதக் கல்வி தரப்பட வேண்டும் என்பதைத் தெரிவு செய்யும் உரிமை பெற்றோர்களுக்கு உண்டு. எனவே, பயிற்று மொழித் தெரிவை அவரவர்களின் விருப்பத்திற்கு விட்டு விடுவதே முறையானதாகும்" என்றுமுறையிட்டது.

பயிற்று மொழியைத் தெரிவு செய்யும் உரிமையை மாணவர்களுக்கு அளிக்கக் கோரி 1970 - திசம்பர் 9-ஆம் நாளன்று, சென்னை நகரின் பல்வேறு கல்லூரிகளிலுள்ள மாணவர்கள் ஏறத்தாழ ஈராயிரம் பேர் தமிழ்வழிக் கல்வியை எதிர்த்துத் தலைமைச் செயலகத்தின் முன் போராட்டம் நடத்தினர். 1970 திசம்பர் 16இல் ஈரோட்டுப் பள்ளி மாணவர்கள் 1400 பேர் தமிழ்வழிக் கல்வியினை எதிர்த்துத் தமிழ்த் தேர்வு எழுத மறுத்தனர்.

## பயிற்றுமொழி வல்லுநர் குழு

தமிழ்வழிக் கல்விக்கான மாணவர் போராட்டத்தைத் தொடர்ந்து, தமிழக அரசு 1970 திசம்பர் 28-இல் ஏ.எல். முதலியாரைத் தலைவராகக் கொண்டும் தெ.து. சுந்தரவடிவேலு, தெ.பொ.மீனாட்சி சுந்தரம், சந்திரன், தேவநேசன், ஜி.ஆர். தாமோதரன் ஆகியோரை உறுப்பினராகக் கொண்டும் பயிற்று மொழி குறித்து ஆராய ஒரு வல்லுநர் குழுவை (Expert Committee on the medium of instruction) அமைத்தது.

- ★ கல்லூரிக் கல்வியில் தமிழ் பயிற்று மொழியாக இறுதியில் ஆக்கப்பட வேண்டும்.
- ★ மேற்படிப்பிற்கும், பன்னாட்டுத் தொடர்பிற்கும் ஏற்ற வகையில் ஆங்கிலத்திற்குரிய இடம் ஒதுக்கப்பட வேண்டும்.

www.tamilarangam.net



இக் குறிக்கோள்களை அடைவது பற்றியும், தமிழ்வழிக் கல்வி குறித்துப் பொது மக்களின் தவறான எண்ணங்களையும்; மாணவர்களின் அச்சத்தையும் போக்குவது பற்றியும் ஆராய அரசு, இக்குழுவைப் பணித்தது. வல்லுநர் குழு, ஆய்விற்குப் பின் அரசிற்குப் பின்வரும் பரிந்துரைகளை முன் வைத்தது.

1. பயிற்று மொழியைத் தெரிவு செய்யும் உரிமை மாணவர்களுக்கு அளிக்க வேண்டும்.

2. தமிழில் மட்டுமே கற்க வாய்ப்பளிக்கப்படும் அரசுக் கல்லூரிகளில் ஆங்கில வழியில் பயில விரும்பும் மாணவர்களுக்குத் தக்க வசதிகளைச் செய்து தர வேண்டும்.

3. தமிழ் பயிற்று மொழியாக்கப்படாத தனியார் கல்லூரி களில், தமிழ் வழிக் கல்வியை மாணவர்கள் விரும்புவார் களாயின், தக்க நடவடிக்கைகளைச் செய்யுமாறு தனியார் கல்லூரி நிருவாகத்தினரை அரசு பணிக்க வேண்டும்.

மேலும் அக்குழு, கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் ஆங்கிலம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படும் தற்போதைய நிலை தொடரப்பட வேண்டும். பள்ளி மட்டத்தின் ஆங்கிலம் கற்பித்தலைக் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்ற வேண்டும். இதற்கு ஏற்ற வகையில் மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் நாட்டம் உண்டாக்க கூடிய அளவில் தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும். தமிழ் வழியில் பயிலும் மாணவர்களும் ஆங்கிலத்தில் மேற்பார்வை நூல்களைப் படித்தறியுமளவிற்குத் திறன் பெறுதல் வேண்டும். இது ஆங்கிலத்திலுள்ள பரந்துபட்ட அறிவைப் பெற்றுத் தமிழில் கருத்துகளை வெளிப்படுத்த உதவும் என்று ஆங்கிலத்தின் இன்றியமையாமையைச் சுட்டிக் காட்டியது.

தமிழில் பாடநூல்கள் எழுதுவதைப் பற்றி இக்குழு புத்தகம் எழுதுவோர் உயர்கல்வித் தகுதி பெற்றவராகவும், கற்பித்தலில் பட்டறிவு உடையவராகவும், எழுதும் பாடப்பொருளில் பரந்துபட்ட

www.tamilarangam.net



அறிவுடையவராகவும், தமிழில் எழுதும் திறன் பெற்றவராகவும் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டது. பட்டப் படிப்பிற்குத் தேவையான பாடப்புத்தகங்கள் மூலப் படைப்புகளாக இருக்க வேண்டும். அவை, அவ்வப்பொழுது ஏற்படும் அறிவியல் முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டு காலத்திற்குக் காலம் புதுப்பிக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் மொழிபெயர்த்து எழுதும்போது, அறிவியல், தொழில் நுட்பக் கலைச் சொற்களை அப்படியே வைத்துக் கொண்டு பாடப்பொருளை மட்டும் மொழிபெயர்க்க வேண்டும். கணிதம், புள்ளியியல், இயற்பியல், வேதியியல் ஆகிய பாடங்களில் பன்னாட்டுக் கலைச் சொற்களையும், குறியீடுகளையும் மொழிபெயர்க்காமல், சரியாகப் பாடப்பொருளைப் புரிந்து கொள்ளும் வகையில் அப்படியே வைத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டது.

## தமிழ்வழிக் கல்வி ஊக்குவிப்புத் திட்டம்

1971-இல் தமிழக அரசு தமிழை ஆட்சி மொழியாகப் பயன்படுத்தும் துறைகளுக்குத் தேவையான பணியாளர்களைத் தெரிவு செய்வதில் தமிழ்வழிப் பயின்றவர்களைத் தெரிவு செய்ய முடிவு செய்தது.

1971 சூனில், கல்லூரிகளில் தமிழ்வழிப் பயில மாணவர்களை ஈர்க்கும் வகையில், ஊக்குவிப்புத் திட்டம் (Incentive Scheme) ஒன்றைத் தமிழக அரசு அறிவித்தது. இத்திட்டத்தின் கீழ் இளங்கலை, இளமறிவியல் பட்டங்களைத் தமிழ் வழியில் பயிலும் மாணவர்கள் ஆண்டுதோறும் உரூபாய் 180/- பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்குச் சாதி, பொருளாதார வேறுபாடு இன்றி இது வழங்கப்பட்டது. 1971 - 72 ஆம் ஆண்டிலிருந்து அரசுக் கல்லூரிகளில் மட்டுமன்றித் தனியார் கல்லூரிகளில் தமிழ்வழிப் பயிலும் மாணவர்களுக்கும் இவ்வுதவித் தொகை வழங்கப்பட்டது.

அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் புகுமுக வகுப்புப் பயிலும் மாணவர்கள் தமிழைப் பயிற்று மொழியாகக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டோராக இருப்பின், தமிழில் பாடநூல்கள் வாங்குவதற்கு வாய்ப்பாக உருபாய் 50/- புத்தகப்படியாகத் தரப்பட்டது. 1977-78ஆம் ஆண்டுகளில் புகுமுக வகுப்பு ஒழிக்கப்பட்டபோது பட்டப்படிப்பில் உள்ளவர் மட்டும் உருபாய் 180/- ஐப் பெற்று வருகின்றனர்.

## எழுபது எண்பதுகளில் தமிழ்வழிக் கல்வி

1970-இல் தமிழகத்துக் கல்லூரிகள், தமிழ்ப்பயிற்று மொழிக் கல்லூரிகள், ஆங்கிலப் பயிற்றுமொழிக் கல்லூரிகள், இருமொழி வழிக் கல்லூரிகள் என்று முத்திறத்தனவாக இருந்தன. அப்போதைய நிலவரப்படி 43 அரசினர் கல்லூரிகளும் 117 தனியார் கல்லூரிகளும் இருந்தன. 43 அரசினர் கல்லூரிகளில் 41 கல்லூரிகள் புகுமுக வகுப்பைப் பெற்றிருந்தன. (P.U.C.) இரண்டு கல்லூரிகள் பட்ட வகுப்புகளை மட்டும் கொண்டிருந்தன. 41 கல்லூரிகளில் புகுமுக வகுப்பு அளவில், தமிழ்வழியில் 13 கல்லூரிகளும், தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழி வழியில் 28 கல்லூரிகளும் கற்பித்து வந்தன. தனியார் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், 117 கல்லூரிகளில் 82 கல்லூரிகள் தமிழ்வழியில் புகுமுக வகுப்புக் கல்வியை அளித்தன.

1970 - 71ஆம் ஆண்டுகளில் புகுமுக வகுப்புப் பயின்ற மொத்த மாணவர்கள் 70,058. இவர்களில் 20,638 மாணவர்கள் தமிழ்வழியில் பயின்றனர் (அரசுக் கல்லூரிகளில் 12,756, தனியார் கல்லூரிகளில் 78,882). பெரும்பான்மையானோர் அதாவது 49,515, தனியார் கல்லூரிகளில் 44,905).

பல்கலைக் கழக இசைவு பெற்ற 35 அரசு கல்லூரிகளில் இளங்களைப் பட்ட வகுப்பை, 22 கல்லூரிகளில் தமிழ் வழியிலும் 12 கல்லூரிகள் இரு மொழியிலும் 1 கல்லூரி ஆங்கில வழியிலும் கற்பித்தன.

இளங்கலை வகுப்பைக் கொண்டிருந்த 26 தனியார் கல்லூரி களில் கலைப்பாடப் பிரிவுகளாக ஒன்றிரண்டு பாடங்களுக்குத் தமிழ் பயிற்று மொழியாக இருந்தது.

www.tamilarangam.net



இளங்கலை பயின்ற மொத்த 18,608 மாணவர்களில் (அரசுக் கல்லூரிகளில் 2,713, தனியார் கல்லூரிகளில் 1,314) 4,027 மாணவர்கள் தமிழ் வழியில் பயின்றனர். மீதியிருந்த 14,581 மாணவர்கள் (அரசுக் கல்லூரிகளில் 1,532, தனியார் கல்லூரிகளில் 13,049) ஆங்கில வழியில் பயின்றனர்.

பல்கலைக் கழக இசைவு இளமறிவியல் பட்ட வகுப்பைக் கொண்ட அரசுக் கல்லூரிகள் 30இல் 22 கல்லூரிகள் தமிழிலும், 8 கல்லூரிகள் இரு மொழியிலும் கற்பித்தன.

எல்லாத் தனியார் கல்லூரிகளிலும் இளமறிவியல் பட்ட வகுப்புகள் அனைத்தும் ஆங்கில வழியிலேயே நடைபெற்றன.

இளமறிவியல் பட்டப் படிப்புப் படித்த 14,737 மாணவர்களில் 2,282 மாணவர்கள் தமிழில் பயின்றனர். இவர்கள் அனைவரும் அரசுக் கல்லூரிகளில் பயின்றவராவர். 12,453 மாணவர்கள் ஆங்கில வழிப் பயின்றனர். இவர்களில் 747 பேர் அரசுக் கல்லூரிகளிலும், 11,708 பேர் தனியார் கல்லூரிகளிலும் பயின்றனர்.

1970-71-களில் தமிழக அரசு, புகுமுக வகுப்புப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை (அரசுக் கல்லூரிகளில்) 4700 ஆக இருந்ததை 1971-72இல் 9,235 ஆக உயர்த்தியது. இவ்வாண்டு ஆங்கிலவழிப் புகுமுக வகுப்பில் பயிலப் புதியதாக 40 பிரிவுகளை ஏற்படுத்தியது. இளங்கலை, இளமறிவியல் பட்ட முதலாண்டு வகுப்பில் ஆங்கில வழிப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை 2301-இலிருந்து 5309க்கு உயர்த்தியது.

1969-70 முதல் 1976-77 வரையுள்ள புள்ளிவிவரப்படி, சிறப்பாக வளர்ந்திருக்க வேண்டிய தமிழ்வழிக் கல்வி குறிப்பிட்ட அளவு வளரவில்லை எனச் சட்டப் பேரவையில் 6.8.77 அன்று வெளியான சுற்றறிக்கை குறிப்பிட்டது.

1983-இல் தமிழக அரசு வெளியிட்ட புள்ளி விவரப்படி 188 கலைக் கல்லூரிகளில் மொத்தம் 1,82 இலட்சம் மாணவர்கள் பயின்றனர். இவர்களில் தமிழ் வழியில் 22,480 அதாவது 12

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விழுக்காடு மாணவர்களே பயின்றனர். 188 கல்லூரிகளில் 135 கல்லூரிகள் தனியார் கல்லூரிகள். 53 கல்லூரிகள் அரசினர் கல்லூரிகள் அரசு நிதி உதவிபெறும் 78 கல்லூரிகளில் 34 கல்லூரிகளிலும், 53 அரசுக் கல்லூரிகளிலும், இரண்டு தனியார் கல்லூரிகளிலும் தமிழ் வழியில் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. வரலாறு, பொருளியல், வேதியியல், விலங்கியல் ஆகிய பாடங்கள் தமிழ் வழியில் கற்பிக்கப்பட்டன. அரசுக் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கை பின்வருமாறு உயர்ந்தது.

| ஆண்டுகள் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1978-79 | 12,699 |
| 1979-80 | 16,130 |
| 1980-81 | 18,424 |
| 1981-82 | 20695 |

## இளங்கலை வணிகவியலில் தமிழ்வழிக் கல்வி

கல்லூரிக் கல்வி இயக்கத்தின் பரிந்துரைப்படி, 1980-81களில் அண்ணாமலைப்பல்கலைக் கழகம் 121 மாணவர்களைக் கொண்டு இளங்கலை வணிகவியல் வகுப்பைத் தமிழ்வழியில் கற்பிக்கத் தொடங்கியது. ஆனால், 1982-83களில் பல்வேறு காரணங்களால் இவ்வகுப்பு நிறுத்தப்பட்டது. 1989இல் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவைக் கூட்டத்தில் இப்பட்டப் படிப்பில் பகுதி ஒன்றில் தமிழைப் பாடமாக வைக்குமாறு உறுப்பினர் ஒருவர் கேட்டுக் கொண்டார். இக்கருத்து உறுப்பினர் பலராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

## ஆசிரியர் பயிற்சிக் க்ல்லூரியில் தமிழ்ப் பயிற்றுமொழி

1957-இல் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழைப் பயிற்று மொழியாக்கும் நோக்கத்துடன் நெ.து. சுந்தரவடிவேலுவின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தலைமையில் சென்னை மாகாண தமிழ்ச் சங்கத்தினர் குழுவொன்றை நிறுவினர். 21.03.57 முதல் 31.03.57 வரை சென்னை சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இக்குழுக்கூட்டம் நடைபெற்றது. இதன் விளைவாக 1959-ஆம் ஆண்டில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்குத் தமிழ்க் கலைச்சொற்கள் வெளிவந்தன.

## தொழில் நுட்பப் பயிலகங்களில் தமிழ்ப் பயிற்றுமொழி

பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்களில் தமிழ் வழிப் பாடம் நடத்தவும், மாணவர்கள் தமிழிலேயே தேர்வுகள் எழுதவும் அனுமதிக்கும் வகையில் அரசாணை ஒன்று பிறப்பிக்கப்பட்டது. இப்பாடத் திட்டத்தையொட்டித் தமிழில் நூல்களை உருவாக்கவும், தமிழ்வழிப் பாடம் கற்பிப்பதில் உள்ள சிக்கல்களைப் பற்றி விவாதிக்கவும் தமிழ்ப் பல்கலைக் கழகம் 16,02,85 அன்று கருத்தறி கூட்டம் ஒன்றை நடத்தியது. தலைமையுரையில் **வ.அய். சுப்பிரமணியம்.**

"தொழில் நுட்ப பயிலகங்களில் தமிழ்வழித் தேர்வு எழுதவும், பாடம் நடத்தவும் அரசு விரும்புகிறது. அதற்கான நடவடிக்கை களையும் அது மேற்கொண்டுள்ளது. பொருளாதாரச் செழிப்புமிக்க வளர்ந்த நாடுகளான அமெரிக்கா, மேற்கு செருமனி, இங்கிலாந்து, சப்பான், உருசியா, முதலிய நாடுகளில் மக்கள் தொழிற் கல்வியையும் தங்கள் தாய்மொழிவழிக் கற்கிறார்கள். தாய்மொழி வழிக் கற்பதால், ,தொழில் நுணுக்கங்களையும் புரிந்து கொள்ளவும், ஆழமாகச் சிந்திக்கவும், புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபடவும் அவர்களால் முடிகிறது. தாமே தொழில் செய்து செல்வ வளம் பெருக்கவும் இயலுகிறது" என்று குறிப்பிட்டு, பல்துறைத் தொழில் நுட்பக் கல்லூரிகளில் தமிழ்வழிக் கல்விக்கான இன்றியமை யாமையை வலியுறுத்தினார்.

## பட்ட மேற்படிப்பில் தமிழ்வழிக் கல்வி

1970 சனவரியில் தமிழகக் கல்வி அமைச்சர், பட்ட மேற்படிப்பைத் தமிழ் வழியில் கற்பிக்கக் கருத்துத் தெரிவித்தார்.

www.tamilarangam.net



இக்கருத்தைக் கல்லூரி, பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் மறுத்தனர். தமிழில் போதுமான பாடப் புத்தகங்களும், ஆராய்ச்சி இதழ்களும் இல்லையெனக் குறை கூறப்பட்டது. பட்ட மேற்படிப்பு அளவில், பயிற்று மொழியைப் பொறுத்த வரையில் எந்த மாற்றமும் செய்யக் கூடாதென்று தமிழகப் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

## தொழில் நுட்பக் கல்வியில் தமிழ்ப்பயிற்றுமொழி

1974-75ஆம் ஆண்டுகளில் இரண்டு தொழில் நுட்பப் பயிலகங்களில் (Poly - technics) இரண்டு பாடங்களில் தமிழ் பயிற்று மொழியாக்கப்பட்டது. பொள்ளாச்சி நாச்சிமுத்துத் தொழில் நுட்பப் பயிலகத்திலும், திருச்சி அரசினர் தொழில் நுட்பப் பயிலகத்திலும், தமிழ்வழிக் கல்வியை முதல் முதலாகத் துவக்கினர்.

## மருத்துவக் கல்லூரிகளில் பயிற்றுமொழி

1970-இல் கூடிய மருத்துவக் கல்வி மாநாடு,. மருத்துவக் கல்லூரியில் ஆங்கிலமே பயிற்று மொழியாகத் தொடர வேண்டும் எனக் குறிப்பிட்டது. இந்திய மருத்துவக்குழு (Medical Council of India) கூறிய கருத்துகளை ஏற்று, நடுவணரசு 1970 செப்டம்பரில் மாநில மொழிகள் வளர்ச்சி பெறும் வரை ஆங்கிலமே மருத்துவத் துறையில் பயிற்று மொழியாக இருக்க முடிவெடுத்தது. 1979இல் பிரதமர் **மொரார்சிதேசாய்,** மருத்துவக் கல்வி, வட்டார மொழி களிலேயே வழங்கப்பட வேண்டும் என்றார். ஆனால், இந்திய மருத்துவக்குழு, மாநில மொழிகளில் போதிய பாடப்புத்தகங்கள் இல்லையெனவும், ஆங்கிலத்தின் வழியாக மட்டுமே அத்துறையின் வளர்ச்சி பற்றிய செய்திகளை உடனுக்குடன் பெறவியலும் என்றும் கருத்துத் தெரிவித்து, ஆங்கிலப் பயிற்று மொழி தொடர்வதற்கு வாய்ப்பளித்தது. 1982-83களில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்களிடம் தமிழ்ப் பயிற்று மொழி குறித்துக் கருத்துக் கணிப்பொன்றை நடத்தியது. இதில் கலந்து கொண்ட

www.tamilarangam.net



பெரும்பான்மையான பேராசிரியர்கள் தமிழ்வழிக் கல்வியினை (மருத்துவம்) ஏற்றதுடன், தேவையான பாடநூல்கள் எழுதவும் முன் வந்தனர்.

## நீதி மன்றங்களில் தமிழ்

தமிழக முதல்வராக **மு. கருணாநிதி** இருந்தபோது 14.04.1976இல் தமிழ்நாட்டு நீதி மன்றங்களில் தமிழிலேயே தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்ற அரசாணையைப் பிறப்பித்தார். இந்நிலையில் 1976இல் தமிழக அரசு கலைக்கப்பட்டதாக குடியரசுத் தலைவர் அறிவித்தார். குடியரசுத் தலைவர் ஆட்சி தமிழ் நாட்டில் அமல்படுத்தப்பட்ட போது, குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீழ் செயல்பட்ட ஆளுநர் தமிழ்நாட்டு நீதிமன்றங்களில் தமிழில் தீர்ப்பு வழங்கும் ஆணையினைக் காலவரையறையின்றி ஒத்தி வைத்தார்.

அதன் பின்னர் 14.11.1976இல் தமிழக ஆளுநர் தமிழ் நாட்டிலுள்ள குற்றவியல் நீதி மன்றங்களில் தமிழிலேயே தீர்ப்பு வழங்கும் அரசாணையினைப் பிறப்பித்தார். இன்றைய நிலையில் தமிழுணர்வுள்ள குற்றவியல் நீதிமன்ற நடுவர்கள் ஒரு சிலரின் முயற்சியால் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில தீர்ப்புகள் தமிழில் வழங்கப்படுகின்றன.

## தமிழகத்தில் தமிழ் வழிக் கல்வியின் பொதுவான நிலை

தமிழகச் சூழலில் மழலையர் பள்ளி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை பெரும்பாலும் ஆங்கிலம் வழியே கற்பிக்கப்படுகிறது.

முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள தொடக்கக் கல்வியில், ஐந்தாயிரம் மழலையர் பள்ளிகளும், முப்பத்தைந்தாயிரம் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளும் உள்ளன. மழலையர் பள்ளிகள் ஆங்கிலக் கல்வியையும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் தமிழ்வழிக் கல்வியையும் கற்றுத் தருகின்றன.

www.tamilarangam.net



ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை உள்ள இடைநிலைக் கல்வியில் ஆங்கில வழிக் கல்வியைக் கற்றுத்தரும் ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள், மைய அரசுப் பள்ளிகள், மெட்ரிக்குலேசன் பள்ளிகள் ஆகியவை பெருத்துக் கொண்டு வருகின்றன. 1980-81-ஆம் ஆண்டுகளில் நூற்றுப்பதினொரு பள்ளிகளாக இருந்த இவற்றின் எண்ணிக்கை 1989-90-இல் தொள்ளாயிரத்து இருபத்தொன்றாக உயர்ந்துள்ளது. இப்பள்ளிகளில் தமிழின் நுழைவு தீண்டத்தகாததாகக் கருதப்படும் நிலை உள்ளது.

கல்விக்காக ஒதுக்கப்படும் தொகையில் உயர்கல்வி, மருத்துவம், பொறியியல், தொழில் நுட்பம் ஆகியனவற்றிற்கு மிகுதியான தொகை செலவிடப்படுகிறது. தொடக்கப்பள்ளி மாணவனுக்கு செலவிடப்படும் தொகையைக் காட்டிலும் நாற்பது மடங்கு தொகையை ஒரு கல்லூரி மாணவனுக்கு அரசு செலவிடுகிறது. இவ்வாறு செலவிடப்படும் நூற்றுக்கு மேற்பட்ட பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் (Polytechnic Schools) ஓராண்டிற்கு உருவாகும் இருபத்தி மூவாயிரம் பட்டதாரிகள் எவருக்கும் தமிழ் வழியில் பயிலும் வாய்ப்பு இல்லை. முப்பத்தைந்து பொறியியல் கல்லூரிகளில் பயின்று ஓர் ஆண்டில் வெளிவரும் ஏழாயிரம் பொறியாளர்களில் எவருக்கும் தமிழ் வழியில் பயிலும் வாய்ப்பு இல்லை. மருத்துவக் கல்லூரி மற்றும் விவசாயக் கல்லூரிகளிலும் இதே நிலைதான் நிலவுகிறது.

சென்னையில் உள்ள இந்திய தொழில் கல்லூரிகளில் (ஐ.ஐ.டி) 1989ஆம் ஆண்டு கணிப்பொறியியலில் பட்டம் பெற்ற இருபத்தெட்டுப் பேரில் பதினாறு பேர் அமெரிக்கா சென்றுவிட்டனர். இதே போன்று வேதிப் பொறியியலில் பட்டம் பெற்ற பதினாறு பேர் அமெரிக்க சென்று விட்டனர். தமிழகத்திலிருந்து அமெரிக்கா செல்லும் பொறியியல் பட்டதாரிகளின் எண்ணிக்கை கூடிக் கொண்டே வருவதாகத் தொழில் நுட்பம் மற்றும் தேசிய வளர்ச்சி அமைப்பு (STAND) வெளியிடும் காலாண்டிதழ்க் குறிப்புத் தெரிவிக்கிறது.

www.tamilarangam.net



சென்னை ஐ.ஐ.டி-இல் பட்டம் பெற்ற மாணவர்கள் அமெரிக்கா செல்வது 1978-82ஆம் ஆண்டுகளில் இருபது விழுக்காடாக இருந்தது. ஆனால் 1983-87ஆம் ஆண்டுகளில் முப்பத்தைந்து விழுக்காடாக உயர்ந்துள்ளது..

அமெரிக்கா சென்றுவிடும் இந்த மாணவர்களின் எண்ணிக்கை கூடி வருவதற்குச் சான்றாக வட அமெரிக்காவில் **"சென்னை ஐ.ஐ.டி. பழைய மாணவர்கள் சங்கம்"** ஏற்படுத்தப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம். இந்தச் சங்கத்தில் ஆயிரத்து நாற்பத்தியேழு பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

ஐ.ஐ.டி. செயல் குறிப்பின்படி ஒரு பொறியியல் மாணவரை உருவாக்க இரண்டரை இலட்ச ரூபாயை அரசு செலவிடுகிறது. ஆனால், தமிழ் நாட்டிற்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் பயன்படாத வகையில், வெளிநாடுகளுக்குப் பயன்படுகிறார்கள். இதற்குரிய பல்வேறு காரணங்களில், இந்நிறுவனங்களில் தமிழ்மொழி புறக்கணிக்கப்படுவதும், தமிழில் கல்வி பெறாததும் ஒரு முக்கியக் காரணமாகும்.

தொழில் கல்வியை விடுத்து, பல்கலைக்கழகக் கல்வி அளவிலும் ஆங்கிலமே மேலாதிக்கம் செலுத்துகிறது. சான்றாகப் பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளில் முதலாண்டு பட்ட வகுப்பில் அனுமதிக்கப்படும் மாணவர் தொகையான பதினையாயிரத்து அறுநூற்றிப் பத்தொன்பது பேரில், ஆங்கில வழிக் கல்வி பெறுவோரின் தொகை பதிமூன்றாயிரத் தொன்றாக உள்ளது. தமிழ் வழிக் கல்வி பெறுவோர் தொகை இரண்டாயிரத்து ஐநூற்றி இருபத்து மூன்றாக உள்ளது. அதாவது, மொத்த இடங்களில் எண்பத்து நான்கு விழுக்காடு ஆங்கிலவழிக் கல்விக்கும், பதினாறு விழுக்காடு தமிழ்வழிக் கல்விக்கும் உள்ளது. பெற்றோரும் மாணவரும் விரும்பினால் கூடப் பதினாறு விழுக் காட்டிற்கு மேல் தமிழுக்கு இடமில்லை எனும் நிலை உள்ளது.

பொதுவாக உயர்நிலைப் பள்ளி, மேனிலைப்பள்ளிகளில் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டவர்களின் விழுக்காடு

www.tamilarangam.net



தமிழ் பயிற்று மொழியாகிவிட்ட இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகும் கூடுதல் அளவாக உள்ளது. கல்லூரிகளுக்கு வரும் பொழுது, கலைக் கல்லூரிகளை எடுத்துக் கொண்டால், ஆங்கில வழிப் பயில்வோரின் எண்ணிக்கை தமிழ்வழிப் பயில்வோரின் எண்ணிக்கையை விட ஏழு மடங்கு கூடுதலாக உள்ளது.

★ மேல்நிலைப் பள்ளி மட்டத்தில் தமிழில் பயின்ற பலர் கல்லூரிகளில் ஆங்கிலம் வழிக் கற்க விழைந்து ஆங்கில வழி வகுப்புகளில் சேர்ந்துள்ளனர்.

★ மேல்நிலைப் பள்ளிகளில் தமிழில் பயின்ற பலர், பொறியியல், வேளாண்மை, மருத்துவக் கல்லூரிகளில் தவிர்க்கவியலாதவாறு ஆங்கில வழிப் பயிலச் செல்கின்றனர்.

★ உயர்நிலைப் பள்ளிகளில் தமிழில் பயின்ற பலர் தொழில் நுட்பப் பயிலகங்களில் (Polytechnic) தவிர்க்க வியலாதவாறு ஆங்கில வழிப் பயிலச் செல்கின்றனர்.

தமிழகம் முழுவதிலுள்ள கல்வி நிறுவனங்களில் எல்லா மட்டத்திலும் ஆங்கில வழிப் பயிற்றுவிக்கும் கல்லூரிகள், பள்ளிகளுக்கு நெருக்கடி அதிகம் இருப்பது நடப்பியல் உண்மை. பல கல்லூரிகளில் ஆங்கிலம் பயிற்று மொழியாக உள்ள வகுப்புகளில் இடம் கிடைக்காதோர் தமிழ்ப் பயிற்று மொழி வகுப்பில் சேருவதையும்; சேர்ந்தபின் ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்பிற்கு மாற்றம் வேண்டி நிற்பதையும் இன்றும் காணலாம்.

## கல்வியகப் புத்தக வெளியீடு

பள்ளிக்கூடம், கல்லூரி, பல்கலைக்கழகம் ஆகிய மூன்றும் "கல்வியகம்" (Academy) என்று வழங்கப்பெறும். பள்ளிக்கூடம் என்பதைத் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி என இரண்டாகப் பிரிக்கலாம். இந்த மூன்று கல்வியகங்களுக்காகப் பயன்படும் படியாக வெளியிடப்படும் புத்தகங்களே தமிழில் கல்வியகப் புத்தக வெளியீடு (Academic Publishing in Tamil) என்று கூறப்படுகிறது.

www.tamilarangam.net



## கல்வியகப் புத்தகங்கள்

பாடநூல் (Text Book)

பொது ஆய்வு நூல் (Book for General Criticism)

மேற்கோள் நூல் (Reference Book)

என மூன்று வகைப்படும். இந்த மூன்று வகைப் புத்தகங்களையும் கல்வியகங்கள் வெளியிட்டாலும் சரி, கல்வியகங்களுக்காக, கல்வியக நோக்கில் வேறு பதிப்பகங்கள் வெளியிட்டாலும் சரி, இப்படி வெளிவரும் புத்தகங்களைக் கல்வியுகப் புத்தகங்கள் எனலாம்.

## தமிழில் கல்வியகப் புத்தக அமைப்புகள்

சென்னைக் கல்விச் சங்கமே கல்வியகப் புத்தக வெளியீட்டை முதன் முதலில் கொண்டு வந்த (1812) நிறுவனமாகும். அரசு ஊழியம் செய்ய வந்த ஆங்கிலேயரின் தமிழ்மொழிப் பயிற்சிக்காகத் தேவையான புத்தகங்கள் அதிலிருந்து அச்சாகிப் பதிக்கப் பெற்றன.

அதன் பிறகு கல்வித்துறை இலாகா (1854) பாடப்புத்தக வெளியீட்டை மேற்கொண்டது. இதற்கடுத்த நிலையில் பாடப் புத்தக கமிட்டி (1889) தோற்றுவிக்கப்பட்டது.

தொடர்ந்து பல பதிப்பகங்களும் சென்னையில் பல்கலைக் கழகத்தின் புத்தக வெளியீடும் தோன்றலாயின.

தமிழக அரசின் முயற்சியால் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் (Tamilnadu Text Book Society) நிறுவப்பட்டது. உயர் கல்வியைத் தமிழில் கற்பிப்பதற்கு வாய்ப்பாகப் பல துறைகளிலும் பாடப் புத்தகங்கள் எழுதும் முயற்சி ஊக்குவிக்கப்பட்டது.

இயற்பியல், வேதியியல், விலங்கியல், பொருளியல், வணிகவியல் ஆகிய பாடங்களுக்காகத் தமிழில் பாடப் புத்தகங்களைத் தயார் செய்யும் பணியைப் பாரதிதாசன் பல்கலைக் கழகம் மேற்கொண்டுள்ளது.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் பொறியியல், மருத்துவம் ஆகிய தொழில்துறைப் பாடங்களைத் தமிழ்வழி நடத்துவதற்குத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேவையான தொடக்க நிலைக்கருவி நூல்களை அவ்வத் துறையினரைக் கொண்டு உருவாக்கியுள்ளது. மேலும், இத்துறைகளில் பல நுல்களை வெளிக்கொணரும் முயற்சியில் இப்பல்கலைக்கழகம் ஈடுபட்டுள்ளது.

தமிழில் பொறியியல், மருத்துவவியல், பொது அறிவியல், தொடர்பான நூல்களைத் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், முதலிய நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன. கலைக்கதிர், விஞ்ஞானச்சுடர், நல்வழி, மஞ்சரி முதலிய இதழ்கள் அறிவியல் கட்டுரைகளை வெளியிட்டுள்ளன. இலங்கையிலிருந்தும் பல அறிவியல் நூல்கள், கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இவற்றிற்கு ஒரு நூலடைவு தயாரிக்கும் பணித்திட்டம், தமிழ் வளர்ச்சி இயக்குநரால் 1982-சூனில் மேற்கொள்ளப்பட்டது. பொறியியல், தொழில் நுட்பவியல் (50 நூல்கள்; 540 கட்டுரைகள்) மருத்துவவியல் (67 நூல்கள்; 357 கட்டுரைகள்) கலைச்சொற்கள் (38 அகராதிகள் 40 கட்டுரைகள் ஆகியவற்றிற்கான நூலடைவுகள் தயாரிக்கப் பட்டுள்ளன. பொது அறிவியலுக்கான நூலடைவும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

## தமிழில் பாடப்புத்தக வெளியீடு

1920-க்கு முன்பே தமிழில் அறிவியல் நூல்கள் எழுதும் முயற்சி சிலரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சான்றாக, தந்தை இரேணியசு எழுதிய ''மண் அறிவியல்'' **(Earth Science)** வட்டுக்கோட்டை விசுவநாதன் எழுதிய வீசகணிதம் (அல்ஜிப்ரா), ஜே.ஆர். ஆர்னால்டு எழுதிய "வான சாஸ்திரம்" ஆகிய நூல் களைக் குறிப்பிடலாம்.

1928-இல் இரண்டாம் படிவத்திற்கு (7-ஆம் வகுப்பு) உரிய பாட நூலாக ''இயற்கைத் தோற்றங்களும் சாதாரண வழி வகைகளும்" எனும் நூல் எழுதப்பட்டது. 1917-இல் எழுதப்பட்டு, 1930-இல் வெளிவந்த "சரீர சாஸ்திரம்" எனும் நூல் தொடக்கப்பள்ளி, இடைநிலைப் பள்ளிகளுக்குரிய பாட நூலாகவும், ஆசிரியப் பயிற்சிப் பள்ளிக்குரியதாகவும் இருந்தது.

www.tamilarangam.net



புத்தகங்களேயன்றி இதழ்கள் வழியாகவும் அறிவியல் கருத்துகள் தமிழில் தரப்பட்டன. 1912-ஆம் ஆண்டு முதல் "நல்வழி" இதழ் அறிவியல் கட்டுரைகளைத் தமிழில் தாங்கி வருகிறது.

1949 முதல் வெளிவரும் "கலைக்கதிர்" இதழ் நூற்றுக் கணக்கான அறிவியல் கட்டுரைகளைத் தமிழில் வெளியிட்டு வருகிறது.

## தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன வெளியீடுகள்

தமிழ்ப் பாடநூல்களை நாட்டுடைமையாக்கம் பொருட்டு 1962-இல் தமிழ்நூல் வெளியீட்டுக் கழகம் (The Bereau of Tamil Publications) நிறுவப்பட்டது. தமிழில் சில பாடநூல்களை இக்கழகம் வெளியிட்டது. தமிழில் பாடநூல்களை உருவாக்கவும், வெளியிடவும் 1970-மார்ச்சில் "தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்" நிறுவப்பட்டது. கல்லூரிகளுக்கு உரிய பாடநூல்களை மட்டும் வெளியிட்டு வந்த தமிழ் நூல் வெளியீட்டுக் கழகம் பின்னர் இந்நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது. படிப்படியாகத் திட்டமிட்டு முதல் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை தேவையான தமிழ்ப் பாடநூல்களை இந்நிறுவனம் வெளியிட்டது. தமிழ், ஆங்கிலம் வழிப் பாடநூல்களைத் தவிர, மலையாளம், கன்னடம், தெலுங்கு, உருது ஆகிய சிறுபான்மையினர் மொழிகளிலும் பாடநூல்கள் வெளியிடப்பெற்றன.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன விலைப்பட்டியலின்படி, 864 நூல்கள் கல்லூரி வகுப்புகளுக்காகத் தமிழில் வெளியிடப் பட்டுள்ளன. இவற்றுள் 416 நூல்கள் கலைப் பாடத்திற்கும் 448 நூல்கள் அறிவியல் பாடத்திற்கும் உரியவை. இவையாவும் ஆங்கில மூலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்களாகும் 1978 திசம்பர் வரை கலையியல் அறிவியல் துறைகளுக்காக வெளியிடப்பட்ட பாடநூல்கள் பின் வருமாறு:

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| கலையியல் பாடங்கள் | | |
|---|---|---|
| அரசியல் | – | 59 |
| தருக்கவியல் | – | 4 |
| அறவியல் | – | 1 |
| உளவியல் | – | 22 |
| கல்வியியல் | – | 17 |
| சட்டவியல் | – | 13 |
| பொருளியல் | – | 112 |
| மானுடவியல் | – | 3 |
| மெய்ப்பொருளியல் | – | 16 |
| வணிகவியல் | – | 47 |
| வரலாறு | – | 116 |
| கூட்டுறவியல் | – | 6 |
| | | 416 |

| அறிவியல் பாடங்கள் | | |
|---|---|---|
| இயற்பியல் | – | 58 |
| உயிரியல் | – | 1 |
| கணக்கியல் | – | 65 |
| சமூகவியல் | – | 2 |
| தாவரவியல் | – | 48 |
| மண்ணியல் | – | 9 |
| நிலவியல் | – | 37 |
| பொறியியல் | – | 42 |
| புள்ளியல் | – | 27 |
| மருத்துவவியல் | – | 14 |
| மனையியல் | – | 3 |
| வானியல் | – | 11 |
| விலங்கியல் | – | 65 |
| வேதியியல் | – | 64 |
| வேளாணியல் | – | 2 |
| | | 448 |

www.tamilarangam.net


கல்வியின் எல்லா மட்டத்திலும் இந்திய மொழிகளே பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்பதைக் கொள்கை அளவில் நடுவணரசு ஏற்றுக் கொண்டதால், 1968-69 முதல் பல்கலைக் கழகங்களைக் கொண்ட மாநில அரசு ஒவ்வொன்றிற்கும், உயர் கல்விக்குப் பயன்படும் வகையில் பாடப்புத்தகங்கள், மொழி பெயர்ப்பு நூல்கள் ஆகியவற்றை வெளியிட உருபாய் ஒரு கோடியை நிதியாக அளித்தது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கென உருபாய் 50 கோடியை ஒதுக்கியது.

1970-இல் ஏ.எல். முதலியார் தலைமையில் அமைக்கப்பட்ட "பயிற்று மொழி வல்லுநர் குழு" (Expert Committee on Medium of instruction) தமிழ்ப் பாடநூல்கள், தமிழ் மொழிப் பயன்படுத்தலில் ஆளுமை உடையவர்களாகவும், எழுதப்படும் பாடப் பொருளில் ஆழமான அறிவுடையவர்களாலும், கற்பித்தல் அனுபவமுடையவர் களாலும் எழுதப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. அவ்வப்போது ஏற்படும் அறிவியல் முன்னேற்றங்களை உள்ளடக்கிப் புத்தகங்கள் அவ்வப்போது புதுப்பிக்கப்பட வேண்டும்; வெளியிடப்படும் நூல்கள் பெரும்பாலும் சொந்தப் படைப்புகளாக இருக்க வேண்டும் எனவும் அக்குழு பரிந்துரைத்தது.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

1970 சூலைத் திங்களில் நிறுவப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் கீழ்க்கண்ட பொருள்களில் நூல்களை வெளியிட்டது.

| | |
|---|---|
| பொது/மேற்பார்வை நூல்கள் | 9 |
| மொழியும் இலக்கியமும் | 12 |
| மொழி பயிற்றுவித்தல் | 1 |
| தொல்காப்பியம் | 10 |
| ஆராய்ச்சி நெறிமுறைகள் | 2 |
| தமிழக நாட்டுப்புறக்கலைகள் | 8 |
| தமிழர்தம் பண்பாடு | 3 |
| மதமும் மெய்ப்பொருளியலும் | 3 |
| தமிழர்தம் கலைகள் | 4 |
| சித்த மருத்துவம் | 2 |
| ஓலைச்சுவடிப் பதிப்புகள் | 8 |
| | 62 |

www.tamilarangam.net


1981 செப்டெம்பரில் நிறுவப்பட்ட தமிழ்ப்பல்கலைக் கழகம், மருத்துவம் பொருளியல் துறைகளுக்கான பாடநூல்களைக் கொண்டு வரும் முயற்சியில் முழுமுனைப்புடன் செயல்பட்டது. 1983-க்குள் மருத்துவத்தில் 15 நூல்களும் பொறியியலில் 15 நூல்களும் வெளியிடுவதாக இருந்தது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் அறிவியல் தொடர்பான கலைக் களஞ்சியம் உருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தொடர்பாகச் சில தொகுதிகளும் வெளி வந்துள்ளன. இப்பல்கலைக் கழகத்தால் பாடவாரியான கலைச்சொல் தொகுதியும் உருவாக்கப் பட்டு வருகிறது.

## தமிழ்ப் பல்கலைக் கழகம் உருவாக்கியுள்ள பொறியியல் பாட நூல்கள்

1. அடிப்படை இயந்திரவியல் (Basic Engineering; Mechanic)
2. உலோகப் பொறியியல் (Mettalurgical Engineering)
3. செயலாக்க மின்னணுவியல் (Applied Electronics)
4. பொருள் வலிமையியல் (Strength of Materials)
5. அடிப்படைப் பொறியியல்; மின்னியல் (Basic Engineering ; elements)
6. கோளொலிப் பொறியியல் (Acoustic engineering)
7. அடிப்படைக் கட்டுமான வடிவமைப்பு (Basic Structural designs)
8. கட்டடத் தொழில் நுட்பம் (Construction Technology)
9. பொருட்களின் இயற்பியல் (Physics of Materials)
10. மின் சுற்றுக் கோட்பாடு (Circute Theory)
11. பொறியியல் வரைபடம் (Engineering Drawing)

12. மண் விசையியல் (Soil Mechanics)
13. செயலாக்க நிலையியக்கவியல் (Applied Mechanics)

## தமிழ்ப் பல்கலைக் கழகம் உருவாக்கியுள்ள மருத்துவப் பாடநூல்கள்

1. காசநோய் (Tuberculosis)
2. உடலியங்கியல் (Physiology)
3. உடற்கூறு - கையும் நெஞ்சுப் பகுதியும் (Anatomy - Thorax and upper limbs)
4. உடலமைப்பியல் - தலையும் கழுத்தும் மூளையும் (Anatomy - Head, Neck and Brain)
5. பொது அறுவை மருத்துவம் (General Surgery)
6. நுண்ணுயிரியல் (Microbiology)
7. குழந்தை அறுவை மருத்துவம் (Paediatric Surgery)
8. குழந்தை நல மருத்துவம் (Paediatrics)
9. உயிர் வேதியியல் (Bio - Chemistry)
10. அறுவைச் சிகிச்சை நோய்நாடல் (Clinical surgery)
11. மருந்தியல் (Pharmology)
12. நோய்க் குறியியல் (Pahtology)
13. உடலமைப்பியல் (Anatomy - Abdomen and lower limbs)

## தமிழ் வளர்ச்சிக் கழகக் கலைக் களஞ்சியப்பணி

சென்னை மாநிலக் கல்வியமைச்சரான **தி.சு. அவினாசி லிங்கம்,** 1946 திசம்பரில் "தமிழ் வளர்ச்சிக் கழகம்" (Tamil Academy) என்ற நிறுவனத்தை நிறுவினார். இந்நிறுவனத்தின் முக்கியப்

www.tamilarangam.net


பணிகளில் ஒன்று கலைக்களஞ்சியம் தயாரித்த பணியாகும். இப்பணி குறித்து தி.சு. அவினாசிலிங்கம் பின்வருமாறு 1956-இல் எழுதினார். "தமிழ்நாட்டுக் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் தமிழ் போதனைக்குரிய மொழியாக அமைய வேண்டும். அப்பொழுதுதான் நம் மொழியில் அறிவுத் துறைகள் அனைத்திலும் புத்தகங்கள் தோன்றும். அதுதான் சாதாரண மக்களும் உயர்ந்த அறிவை எளிதில் பெற உதவியாக இருக்கும். போதனை மொழி தமிழாக மாறுவதற்கான மகத்தான முயற்சியில் கலைக் களஞ்சியம் அடிப்படையான சேவை செய்து வருகிறது. இதுவரை தமிழில் புத்தகங்களே இல்லாத துறைகளிலுள்ள விஷயங்களைத் தமிழில் எடுத்துச் சொல்ல முயற்சி செய்கிறது. இந்திய மொழிகளில் முதன் முதலாகத் தமிழில் தான் கலைக்களஞ்சியம் உருவாக்கப்பட்டது. கலைக்களஞ்சிய ஆசிரியராக ம.ப.பெரியசாமித்தூரன் செயல்பட்டு வந்தார்.

**கலைக் களஞ்சியத் தொகுதிகள்:-**

| தொகுதி | ஆண்டு | பக்கங்கள் |
|---|---|---|
| 1 | 1954 | 742 |
| 2 | 1955 | 760 |
| 3 | 1956 | 756 |
| 4 | 1957 | 778 |
| 5 | 1958 | 750 |
| 6 | 1959 | 770 |
| 7 | 1960 | 754 |
| 8 | 1961 | 758 |
| 9 | 1963 | 751 |
| 10 | 1968 | 560 |

1960-இல் இந்நிறுவனம் குழந்தைகள் கலைக்களஞ்சியம் கொணரும் முயற்சியில் ஈடுபட்டுப் பத்துத் தொகுதிகளை இப்பொருளில் வெளியிட்டுள்ளது.

## தமிழில் கலைச் சொல்லாக்க முயற்சிகள்

1923-இல் சென்னை மாகாண கல்வி இயக்கம் வட்டார மொழிகளில் அறிவியல் கலைச்சொற்களை உருவாக்கக் குழுவொன்றை (Vernacular Scientific Term Committee) அமைத்தது. இக்குழுவில் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு உள்ளிட்ட வட்டார மொழி வல்லுநர்கள் இருபதின்மர் உறுப்பினர்களாக இடம் பெற்றனர். ஏ.சி.பிரணகார்த்திகரன் தலைமையில் ஏ. கிருஷ்ணராவ் போன்சுலேயைச் செயலாராகக் கொண்டு இக்குழு செயல்பட்டது. இக்குழு உறுப்பினர்களுள் ஒருவராக பா.வே. மாணிக்க நாயக்கர் செயலாற்றினார். இக்குழு, தொடக்கப்பள்ளி இடைநிலைப் பள்ளி அளவில் பயன்படும் அறிவியல் கலைச் சொற்களுக்கு இணையான சொற்களைத் தாய் மொழிகளில் உருவாக்கித் தந்தது.

1926-இல் திரு.வி. சிதம்பரநாத முதலியார், தயாரித்த செவிலியருக்கான பாடநூலில் தமிழ்க் கலைச் சொற்களுக்கு இணையான ஆங்கிலச் சொற்களும் கொடுக்கப்பட்டிருந்தன. இதே ஆண்டில் வெளியான பல பாடப் புத்தகங்களில் ஆங்கிலம், தமிழ்க் கலைச்சொற்கள் இடம் பெற்றிருந்தன.

1930-இல் சென்னை மாகாண அரசு, சட்டத்துறை சொல்லகராதி (Dictionary of Legal Terms) ஒன்றை வெளியிட்டது. இதில் ஆங்கிலச் சொற்கள் அனைத்திற்கும் அவற்றிற்கு இணையான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிச்சொற்கள் தரப்பட்டிருந்தன. இதே ஆண்டில் கே.சுப்பிரமணிய பிள்ளை எழுதிய "தமிழும் அறிவியல் நூல்களும்" (Tamil and Science Books) எனும் கட்டுரையில் தமிழ்வழியில் பயிற்றுவிக்கத் தேவையான கலைச்சொற்களைத் தமிழில் எவ்வாறு உருவாக்குவது என்பது பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

www.tamilarangam.net

1931-இல் சாம்பசிவம் என்பவர் மருத்துவம், வேதியியல், தாவரவியல் ஆகிய துறைகளுக்கான தமிழ்க் கலைச்சொற்களைத் தொகுத்து மூன்று பகுதிகளாக வெளியிட்டார். இத்தொகுதியின் நான்காம் பகுதி 1977லும், ஐந்தாம் பகுதி 1978லும் வெளியிடப் பட்டது.

1932-இல் சென்னை மாகாண அரசு கலைச் சொல்லாக்க குழு (Committee of Technical Terms) ஒன்றை அமைத்தது. அக்குழு வெளியிட்ட கலைச்சொல் பட்டியல் தமிழ்க் கலைச் சொல்லாக்க வரலாற்றில் குறிப்பிடத்தகுந்ததாகும். உடலமைப்பியல், உடல்நலவியல், வேதியியல், வணிகவியல், வரலாறு, பொருளியல், அரசியல், கணக்கியல், ஆட்சியியல் ஆகிய துறைக்கான 7400 கலைச் சொற்கள் இப்பட்டியலில் இடம் பெற்றன. இக்கலைச் சொல் பட்டியல்களில், இயல்களின் தலைப்புகள் கூட ஆங்கிலத்தி லேயே தரப்பட்டதிலிருந்து இக்கலைச் சொற்களின் தன்மையை அறியலாம். இக்கலைச் சொற்கள் மிக நீளமானவைகளாகவும், தமிழும் சமசுகிருதமும் கலந்து உருவாக்கப்பட்டவை சொற்களை உருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணி பற்றிய விபரங்கள் எதுவும் தெரியவில்லை.

1947-இல் பல்வேறு துறைப் பாடங்களுக்கு ஏற்ற வகையில் கலைச் சொற்களைச் சென்னை மாகாண அரசு வெளியிட்டது. இதே ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ் கலைக் களஞ்சியப்பணி (Tamil Encylopaedia) 1954-இல் முதல் தொகுதியை வெளியிட்டது. இக்கலைக் களஞ்சியத்தில் பல்வேறு துறைக் கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன.

1949-இலிருந்து வெளிவரும் "கலைக்கதிர்" நூற்றுக்கணக்கான அறிவியல் கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது. இவற்றில் ஆயிரக்கணக்கில் தமிழ்க் கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 1982-இல் இக்கலைச்சொற்களைத் தொகுக்கும் பணி நிறைவெய்தியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


1950-இல் நடுவணரசின் கல்வி அமைச்சகம், ஆங்கிலத்தி லுள்ள முன்னேற்றமான அறிவைப் பெற 3,50,000 கலைச்சொற்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று கணக்கிட்டு இந்தியிலும் மற்ற இந்திய மொழிகளிலும் அவற்றை உருவாக்க "அறிவியல் கலைச் சொல் வாரியம்" ஒன்றை அமைத்தது. இவ்வமைப்பு 1961-இல் 2,90,000 அறிவியல் கலைச் சொற்களை இந்தியிலும் மற்ற இந்திய மொழிகளிலும் உருவாக்கியது.

1959-இல் கல்லூரித் தமிழ்க் குழு (College Tamil Committee) தமிழக அரசால் அமைக்கப்பட்டது. ஜி.ஆர். தாமோதரனைத் தலைவராகக் கொண்டு செயல்பட்ட இக்குழு, மாணவர்களுக்கு ஏற்ற வகையில் தேவைப்படும் கலைச் சொற்களை உருவாக்கியது. பன்னாட்டளவில் பயன்படுத்தப்படும் கலைச்சொற்களாகவும் இருந்தமையால் மிகுதியாகப் பயன்படுத்தப்படவில்லை.

அறிவியல், தொழில் நுட்பக் கலைச் சொற்களில் இக் குறைப்பாட்டை நீக்கி, எளிமையாகவும், புரிந்து கொள்ளக்கூடிய வகையில் இருக்குமாறும் கலைச் சொற்களை உருவாக்க 1934-இல் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் (Tamil Association of Madras Presidency) ஒரு குழுவை அமைத்தது. இக்குழுவின் முயற்சியினால் சென்னையில் 1936-இல் "கலைச் சொல்லாக்க மாநாடு" நடத்தப்பெற்றது. அம்மாநாட்டில் தமிழ்க் கலைச் சொற்களின் பட்டியல் ஒன்றும் வெளியிடப் பெற்றது.

1940-இல் சீனிவாச சாத்திரி தலைமையில், கலைச் சொற்களைத் தொகுக்கும் குழு (Committee for evolving Technical Terms) ஒன்று அமைக்கப்பட்டது. உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு ஏற்றவையாகக் கலைச்சொற்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் பணியாற்றிய இக் குழுவினர் வேதியியல், வணிகவியல், இயற்பியல், உடலியல், கணிதவியல், வரலாறு, பொருளியல், நிருவாகவியல், அரசியல், நகராட்சியியல், இயற்கை அறிவியல் முதலிய பாடங்களுக்குரிய கலைச்சொல் தொகுதிகளை 1947-ஆம் ஆண்டில் வெளியிட்டார். இவற்றில் கிரந்த

www.tamilarangam.net

எழுத்துக்களும் ஆங்கில உச்சரிப்பிற்கேற்ப எழுதப்பெற்ற தமிழ்ச் சொற்களும் இடம்பெற்றன. அப்போது கல்வியமைச்சராக இருந்த தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள் இக்கலைச் சொற்களைப் பள்ளிப் பாடப் புத்தகங்களில் பயன்படுத்துமாறு பரிந்துரை செய்தார். இக்குழுவில் தமிழ் அறிஞர்கள் யாரும் இடம் பெறவில்லை யென்றும், இக்குழு உருவாக்கிய கலைச் சொற்களில் பல சொற்கள் தமிழ் அல்ல என்றும் கூறப்பட்டது.

1941-இல் இந்தியா முழுமைக்கும் ஒரே வகையான கலைச் சொற்களை உருவாக்கும் நோக்கத்துடன், வடமொழியை அடிப்படையாகக் கொண்டு கலைச் சொற்களை அப்படியே பயன்படுத்துதல், தமிழ்க் கலைச் சொற்களுக்கு இணையான ஆங்கில சொல்லை அடைப்புக் குறிக்குள் தருதல் ஆகிய விதி முறைகளை இக்குழு பின்பற்றியது. இக்குழு உருவாக்கிய பெரும்பாலான கலைச் சொற்கள் ஆங்கிலச் சொற்களின் தமிழ் ஒலிபெயர்ப்பாக (Transliteration) இருந்தன.

1962-இல் தமிழில் பாடநூல்களை வெளியிடும் நோக்கில் "தமிழ் நூல் வெளியீட்டு நிறுவனம்" (Tamil Bureau of Publications for Text Books) நிறுவப்பட்டது. இந்நிறுவனம் வெளியிட்ட புத்தகங்களின் இறுதிப் பகுதிகளில் கலைச் சொற்களின் பட்டியல் தரப்பட்டது. இவை பாட வாரியாகத் தொகுக்கப்பட்டு 1971-லும் 1973-லும் வெளியிடப்பட்டன.

1968-இல் பி.எஸ்.கே. அறக்கட்டளை (P.S,K. Trust) புகுமுக வகுப்பிற்கும், இளங்கலைப் பட்ட வகுப்பிற்கும் பயன்படும் தமிழ்க் கலைச் சொற்களைத் தொகுத்து வெளியிட்டது.

1981-இல் தஞ்சையில் நிறுவப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகம், இதுவரை வெளியாகியுள்ள அனைத்துத் தமிழ்க் கலைச் சொற்களைத் தொகுக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. ஏறத்தாழ 150 அடிப்படை மூலங்களிலிருந்து (Basic Sources) பொறியியல், மருத்துவயியல், பொது அறிவியல் ஆகிய துறைகளுக்கான

www.tamilarangam.net


சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பல்கலைக் கழகத்தில் "கலைச்சொல் வைப்பகம்" (Teminology Bank) ஒன்றும் இயங்கி வருகிறது. பொது மக்களிடமிருந்தும், துறை வல்லுநர்களிடமிருந்தும் விடை அஞ்சலட்டை (Reply Post Card) மூலமாகப் பொருத்தமான கலைச் சொற்கள் திரட்டப்பட்டு வருகின்றன. இம் முயற்சியில் அப்பல்கலைக் கழகத்தின் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை இயக்குநர் இராம. சுந்தரம் தீவிர முனைப்புக் காட்டி வருகிறார்.

1955-ஆம் ஆண்டில் இலங்கை அரசு, அரசுப் பகுதிகள், பதவிப் பெயர்கள், நாமாவளிகள் சொற்தொகுதியை வெளியிட்டது. இதில் பிறமொழிச் சொற்களும் தமிழோசைப் படுத்தாத சொற்களும் கிரந்த எழுத்துகள் கலந்த சொற்களும் உள்ளன. அதன் பின்னர் க.பொ.இரத்தினம் தலைமையில் செயல்பட்ட அரசகரும மொழித் திணைக்களம், அரசகருமச் சொற்களை வெளியிட்டது. 1960ஆம் ஆண்டில் இரு தொகுதிகளும் வெளிவந்தன. இத் தொகுதிகளில் சுமார் இருபதினாயிரம் (20,000) கலைச்சொற்கள் உள்ளன. இலங்கையில் 1956-ஆம் ஆண்டு முதல் தமிழர்கள் அரிச்சுவடி முதல் பட்டப்படிப்பு வரையிலும் தமிழ் மொழியிலேயே கற்று வருகின்றனர்.

1967-ஆம் ஆண்டில் தனிமொழித் திணைக்களமும், அரசகரும மொழித் திணைக்களமும்ஒன்றாக இணைந்து கல்வி வெளியீட்டுத் திணைக்களம் என்ற பெயரில் செயல்பட்டன. இவ்வமைப்புப் பல்கலைக் கழக அளவில் பல நூல்களை மொழி பெயர்த்து வெளியிட்டது. சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட கலைச்சொற் தொகுதிகள் வெளிவந்துள்ளன. இவற்றில் சுமார் இரண்டு இலக்கம் (2,00,000) கலைச்சொற்கள் உள்ளன.

NORWAY SEELAN BOOKS SIGNATURE

www.tamilarangam.net


# 4. தாய்மொழி வழிக்கல்விச் சிக்கல்களும் தீர்வுகளும்

எந்த ஒரு மனிதனும் தாய்மொழி வழியாகவே சிறப்பான முறையில் கல்வியறிவு, பெறமுடியும். படைப்பாக்கத் திறன் கொண்ட செயல்களை வெளிப்படுத்த முடியும் என்பது, இன்று உலகம் முழுவதிலுமுள்ள மொழியியல், மானுடவியல், உளவியல், அறிஞர்கள் அனைவரது ஒருமித்த கருத்து, முரண்பாடு எதுவுமின்றி அனைத்துத் துறை அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தும் இதுவே.

உலகின் பல்வேறு நாட்டினர் ஒரு காலத்தில் தங்கள் மொழிகளோடு ஒப்பிடுமிடத்து உயர் வளப்பம் கொண்ட மொழியாக ஆங்கிலம் இருக்கிறது என்பதற்காக யாரும் இன்னமும் ஆங்கிலத்திற்கு அடிமைப்பட்டு இருக்கவில்லை. பிற மொழிச் செல்வங்கள் அனைத்தையும் தம் தாய்மொழிக்குக் கொண்டு வந்து, அதன் வாயிலாகத் தம் சமூக வளர்ச்சியை உருவாக்குகின்றனர்.

இனப் போராட்டமும் போர்க் கொந்தளிப்பும் கொண்டு இந்தியாவிற்கு அண்மையில் விளங்கும் நாடான இலங்கையில் கூடப் பொறியியல், மருத்துவத் துறைகள் தமிழிலும், சிங்களத்திலும் பயிற்றுவிக்கப்படுகின்றன. உலகம் முழுவதும் இப்படியிருக்க உலகத்தின் தொன்மையான மொழிகளில் ஒன்றான தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகளைப் பயிற்று மொழிகளாக்குவதற்குப் பல்வேறு தடைகள் கூறப்படுகின்றன. தாய்மொழி வழிக் கல்வித்தடைகளும், தடைகளுக்கான விடைகளும் இவ்வியலின் கண் விளக்கப் படுகின்றன.

4

## தாய்மொழி வழிக் கல்விக்கான சிக்கல்கள் :

1. தாய்மொழிகள் நவீன கல்வியறிவுத் துறைகளில் பயிற்று மொழிகளாகப் பயன்படத்தக்க அளவு வளமுடையனவாக இல்லை.
2. அறிவியல், தொழில்நுட்பம் படைத்துத்தரும் எண்ணற்ற கருவிகளைப் பயன்படுத்தும் நெளிவு சுளிவுகளைத் தாய் மொழிகள் தம்வயமாக்கிக் கொள்ளவில்லை.
3. தாய்மொழியில் பயில்வோருக்கு உயர்கல்வியைத் தொடருவதற்கு வாய்ப்புகள் குறைவு.
4. தாய்மொழியில் கற்பிக்கும் கல்விக் கூடங்கள் ஒப்பிட்டளவில் ஆங்கிலம் வழிப் பயிற்றுவிக்கும் கல்விக் கூடங்களின் தரத்தைவிடக் குறைந்தவை.
5. தாய்மொழியில் பயில்பவர்களுக்கு வேலை வாய்ப்புகள் மைய அரசுத் துறைகளிலும், தனியார் துறைகளிலும், தேசிய, உலக அளவிலும் குறைவு. தாய்மொழி வழிப் பயிலுவது பல வாய்ப்புக் கதவுகளை மூடிவிடுகிறது.
6. அறிவியல், நாட்டு எல்லைகளைக் கடந்தது: வளர்ந்து வரும் அறிவியலை உடனுக்குடன் கற்க ஆங்கிலம் மிக மிகத் தேவையாகிறது. அதுவே உலகப் பொதுமொழியாக இருப்பதனால் தாய்மொழி வழிக் கல்வி அறிவியலில் நம்மைப் பின் நிறுத்திவிடும்.
7. தாய்மொழிகளில் அறிவியல் கருத்துகளை முழு அளவில் விளக்கப் போதுமான சொற்கள் இல்லை. சொற்கள் உருவாக்கப்பட்டாலும் அறிவியலுக்கு ஏற்பத் துல்லியமாகவும், திட்டவட்டமாகவும் விளக்கத் தாய்மொழிகளால் இயலுவதில்லை.
8. தாய்மொழிகளில் போதுமான பாட நூல்கள் இல்லை, இருக்கின்ற நூல்கள் கரடுமுரடான மொழி நடை உடையனவாகவும், தரமற்றவையாகவும் இருக்கின்றன.

www.tamilarangam.net


9. தாய்மொழி வழிக்கல்வி வட்டார உணர்வைத் தூண்டி பிளவுபட்டுப் போகிற சிந்தனையை மேலோங்கச் செய்கிறது. மொழிவெறியை ஏற்படுத்தித் தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவிக்கிறது.

10. தாய்மொழி என்ற கூட்டிற்குள் மாணவர்களை அடைத்துவிட்டால் குறுகிய கல்வி அறிவு காரணமாகப் பிற போட்டித் தேர்வுகளில் அவர்கள் முழுமையாகப் பங்காற்ற முடியாமல் போய்விடும்.

11. ஆங்கிலம், அறிவியல், தொழில் நுட்பம் இவற்றைக் கற்கும் சாதனம் மட்டுமன்று, அதுவே பன்னாட்டு வர்த்தகக் கருவி, ஆங்கிலம் உலக இணைப்பு மொழி. மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கிறது. உலகில் எங்குச் சென்றாலும் எளிதாகத் தொடர்பு கொள்ள முடியும், பன்மொழிச் சூழல் உள்ள இந்தியா போன்ற நாடுகளில் குறுகிய மொழிவெறியை உண்டாக்காமல் இருக்க ஆங்கிலம் வேண்டும்.

12. தாய்மொழி வழிக் கல்விக்கு வாய்ப்பாகத் தேவையான நூல்களை ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்ப்புச் செய்து கொள்ளலாம் என்றாலும், அவை மொழிபெயர்ப்பாக வந்து, படித்துப் புரிந்து கொள்வதற்குள் புதிது புதிதாக எத்தனையோ கண்டுபிடிக்கப்பட்டு விடுகின்றன மொழிபெயர்ப்புச் செய்வதற்குள் அவை காலங்கடந்தவைகளாகி விடுகின்றன.

13. பன்மொழிச் சூழல் நிலவும் இந்தியாவில் ஒவ்வொரு மொழியிலும் தேவையானவற்றை உருவாக்குவதனால் பெருமளவில் பணம் செலவாகிறது. ஆங்கிலம் ஒன்றையே பயிற்றுமொழியாகக் கொள்ளுவதனால் இத்தகைய வீண் செலவுகளைத் தவிர்க்கலாம்.

### சிக்கல்-1 : தாய்மொழிகளின் வளமின்மை

தாய்மொழிகள் உயர்கல்வி பயிற்றுமொழியாகக் கொள்ளப் படுவதற்குத் தடைகளாகக் கூறப்படும் மொழிவளம், சொல்வளம் பற்றிய தடைகள் ஒரு சிக்கலே அன்று.

www.tamilarangam.net

"இசுரேல்" என்ற ஒரு நாடே 1948-க்கு முன்பு வரை கிடையாது. பலநாடுகளிலும் பரவி வாழ்ந்த யூதர்கள் அந்தந்த நாட்டு மொழிகளைத்தான் கற்று வந்தனர். அவர்களுக்குத் தங்களின் தாய்மொழியான "ஈப்ரு" மொழி தெரியாது. பாலசுதீனத்திலும் "ஈப்ரு" ஒரு பேச்சுமொழி போலவே இருந்து வந்தது. இசுரேல் அமைவதற்கு முன் ஈராயிரம் ஆண்டு காலப் பகுதியில் அம்மொழியில் பெரிய வளர்ச்சி எதுவும் ஏற்படவில்லை. ஆனால், இன்று அரிச்சுவடியிலிருந்து முனைவர் பட்டம் வரை ஈப்ரு மொழியில்தான் பயிற்றுவிக்கப்படுகிறது. "மலாய்" மொழி அவ்வளவாக வளர்ச்சி பெற்ற மொழியன்று; ஆனால் இன்று மலேசியக் கல்வித்துறையின் அனைத்து மட்டங்களிலும் "மலாய்" மொழியே பயிற்றுமொழியாக இருந்து வருகிறது. இருபதாம் நூற்றாண்டில்தான் உருவாக்கப்பட்ட "பாசா இந்தோனேசியா" என்ற புதுமொழி இந்தோனேசியக் கல்வித் துறையின் அனைத்து நிலைகளிலும் பயிற்றுமொழியாக இடம் பெற்று வருகிறது.

"துருக்கி" வளமுள்ள இலக்கிய மொழியாக இருந்த போதிலும் நாட்டின் ஆட்சிமொழியாகவும், பயிற்றுமொழியாகவும் அது இடம் பெறவில்லை. கல்வி, ஆட்சித் துறைகளில் பாரசீகமும், அரபுமே செல்வாக்குச் செலுத்தின. "முசுதபா கமால் பாசா" ஆட்சிக்கு வந்த பின்னர்த் துருக்கி மொழி பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை, ஏவலர் முதல் நாட்டுத் தலைவர் வரை பயிற்று மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் முழு அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டளவில் இங்கிலாந்தில் குடியேறிய ஒரு கூட்டத்தினரால் பேசப்பட்ட மொழிதான் இன்று உலக மொழியாக உயர்ந்துள்ளது. ஆங்கிலம் ஏறத்தாழ நாற்பது கோடி மக்களோடு உறவாடும் மொழியாகவும் புத்தம் புதிய அறிவுத் துறைகள் அனைத்திற்கும் உரிய பெரும்பான்மைக் கலைச் சொற்களைக் கொண்ட வளம் செறிந்த மொழியாகவும் விளங்குகிறது. ஐம்பதிற்கும் மேற்பட்ட பல்வேறு மொழிகளிலி

www.tamilarangam.net

ருந்து ஏராளமான சொற்களை ஏற்றுக் கொண்டு இன்றைய உலகத் தேவைக்கு ஏற்றபடித் தன்னைத் தகுதிப்படுத்தி கொண்டுள்ளது.

கி.பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து வரலாற்றைத் துவங்கும் உருசிய மொழி இன்று உலக மக்களின் கவனத்தை ஈர்க்கும் மொழியாக வளர்ந்துள்ளது.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் உரோமானியப் பேரரசு வீழ்ச்சியுற்ற பின்னர்தான் பிரஞ்சு மொழி வளரத் தொடங்கியது. இன்று பிரஞ்சால் எல்லாம் முடிகிறது.

இவ்வாறே கொரிய மொழி, சப்பானிய மொழி, தாய்மொழி (தாய்லாந்து) போன்றவை அவ்வளவாக வளமில்லாத மொழிகளாக இருந்தும் இன்று கல்வித்துறையின் பயிற்றுமொழிகளாக உள்ளன.

எவ்வளவு கடுமையான அளவுகோலை வைத்துப் பார்த்தாலும், இவை அனைத்திலும் சொல்வளத்திலும், தமிழ்மொழி இன்னபிற மொழிவளத்திலும் குறைந்தது அன்று. எனவே, பயிற்றுமொழியாகத் தாய்மொழிகள் அமைவதற்கு அம்மொழிகளின் வளம் பற்றிய சிக்கல் ஒரு தடையன்று, மொழிகளின் பயன்பாட்டு எல்லைகள் கூடும்போது தானே வளம் செறிந்தவையாக வளர்ந்துவிடும்.

## சிக்கல்-2 : கருவிகளைப் பயன்படுத்தும் திறன் பெறாமை

மனித சமுதாயத்தின் ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் கருவி வளர்ச்சி இருக்கிறது. அவ்வப்பொழுது புதிய கருவிகளைப் படைத்துப் பயன்படுத்திய சமுதாயம்தான் முன்னேற முடிந்தது. வளர்ச்சி என்பது மாற்றம், மாறாத பொருளெதுவும் வளர்வதில்லை. மொழி வளர்ச்சியும் மாற்றத்தின் பாற்பட்டதே.

தட்டச்சு, மின்தட்டச்சு, கணிப்பொறி, தொலைஎழுதி போன்ற கருவிகளை ஒரு மொழி முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமென்றால், அதற்கேற்பச் சில மாற்றங்களைச் செய்வது

www.tamilarangam.net


அடிப்படையானது. செங்குத்து வரிசையில் மேலிருந்து கீழாக எழுதப்பட்ட "சப்பானிய" மொழி இன்று அறிவியல் தொழில் நுட்பத் துறைகளில் படுக்கையாக எழுதப்படுகிறது. இது எளிய மாற்றமன்று; மகத்தான மாற்றமாகும். இதேபோல் இந்தியில் எகரத்திற்கும் ஒகரத்திற்கும் தனிக்குறில் கிடையாது. இன்றைய அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப இந்த இரு ஒலிகளையும் இந்திமொழி ஏற்றுக் கொண்டுள்ளது.

தமிழ் வரி வடிவம் எளிமைப்படுத்தக் கூடியது. இந்தியில் ஏற்பட்டுள்ள மொழி மாற்றங்களோடு தமிழ்மொழி மாற்றத்தை ஒப்பிடும் பொழுது தமிழில் தனித் தூய்மை தலைதூக்குவதைக் காண முடிகிறது. தொழில் புரட்சியோடு தொடர்பில்லாது ஒதுங்கிவிட்ட தாய்மொழிகளைக் கருவிகளைப் பயன்படுத்தும் கல்வி மொழிகளாக்குவது அவ்வளவு எளிதன்று. ஆயினும் இயலாததன்று. காலத்திற்குத் தக்கக் கருவிகளைப் பயன்படுத்தும் திறன் கொண்டவையாகத் தாய்மொழிகள் மாறத் தேவையான மாற்றங்களைச் செய்வது இன்றியமையாததாகிறது. குறிப்பாக் தமிழ் வரிவடிவ மாற்றங்களின் தனித் தூய்மையைப் பின்னுக்குத் தள்ளிவிட வேண்டும்.

தமிழானது அச்செழுத்துகளில் வெளிவரத் தொடங்கிய காலம் தொட்டுத் தமிழ் எழுத்துக்களில் மேற்கொள்ள வேண்டிய சீராக்கம் குறித்துப் பலரும் பல்வேறு கருத்துக்களை வலியுறுத்தியுள்ளனர்.

"வீரமாமுனிவர்" எ,ஏ,ஒ,ஓ என்ற ஒலிகளுக்கு இன்றுள்ள வடிவங்களைத் தந்தார். உயிர்க் குறிலுக்கும், மெய் எழுத்திற்கும் தலையில் புள்ளி இடுவதால் இருந்த குழப்ப நிலையை நீக்கி, மெய்க்குப் புள்ளி வைத்தார். நெடிலுக்குக் காலைச் சேர்த்தார். உகரத்திற்கு விலங்கு பூட்டினார்.

1930 இல் "குமரன்" என்னும் வார இதழின் ஆசிரியர் ணா, நா, னா, ணை, லை, னை, ணொ, றொ, னொ, ணோ, நோ, னோ ஆகிய எழுத்து வடிவங்களை ஏற்றுக் கொள்வது பயில்வோருக்கு எளிதாய் இருக்கும் என்ற கருத்தை வெளியிட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


1934-இல் "பெரியார் ஈ.வே.ரா." தமிழ் எழுத்துக்களில் செய்யப்பட வேண்டிய எழுத்துச்சீர்திருத்தம் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டார். ஊ, ரு, ஞ-ணா, றா, னா, ணை, லை, ளை, னை-ணை, லை, ளை, னை என மாற்றப்பட்டு "விடுதலை" இதழில் வெளிவந்தன. இதனால் இவை "விடுதலை எழுத்துக்கள்" எனப்பட்டன.

1950-இல் தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதை ஆய்வதற்காக அமைக்கப் பெற்ற குழு எழுத்துச் சீரமைப்புத் தொடர்பான மாற்றங்களை உடனடியாகச் செய்யப் பரிந்துரை செய்தது.

தமிழ் எழுத்துச் சீராக்கம் தொடர்பாக, தெ.பொ.மீ, பொறகோ, கொண்டல், சு. மகாதேவன், தில்லைநாயகம், செ.வை, சண்முகம், கொடுமுடி சண்முகம், குழந்தைசாமி, ஆ. கந்தையா, இராம. சுந்தரம் ஆகியோர் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளனர்.

தமிழ் நெடுங் கணக்கில் 247 ஒலி எழுத்துக்கள் உள்ளன. இவற்றிற்கு 131 குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. தமிழக அரசு செய்த மாற்றத்தின் பின் 124 குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. இக்குறியீடுகளை 39-ஆகக் குறைப்பது பற்றி வா.செ. குழந்தைசாமி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> **"உயிர்மெய், இகரம், ஈகாரம், உகரம், ஊகாரம் இவற்றிற்கு வலது பக்கத்தில் குறியிடுவதன் மூலம் 68 குறிகளைத் தவிர்க்கலாம். மெய்யெழுத்துகளுக்குத் தலைமேல் புள்ளியிடுவதற்குப் பதிலாக வலது பக்கத்தில சுழியிடுவதை ஏற்றால் அச்சில் 17 குறியீடுகள் குறையும்."**

இம்மாற்றங்கள் செய்யப்பட்டால் தட்டச்சு, தொலை எழுதி, கணிப்பொறி, போன்றவற்றில் தமிழுக்கு மேல்வரிசை, கீழ்வரிசை தேவைப்படா. அறிவியல் உலகில் நவீன கருவிகள் அனைத்தையும் தமிழில் பயன்படுத்துவது எளிதாகிவிடும். இத்தகைய மாற்றங்கள் செய்யப்படும் பொழுது கருவிகளைப் பயன்படுத்தும் திறன் பெறவில்லை என்ற குற்றச்சாட்டிற்கு இடமில்லை.

www.tamilarangam.net


## சிக்கல்-3 : கல்வியில் தொடர்ச்சியின்மை

தாய்மொழி வழிப் பயில்வோருக்கு உயர்கல்வியைத் தொடர்வதற்கு வாய்ப்புகள் குறைவு என்பது ஏற்கப்பட வேண்டிய குறையாகும். தாய்மொழிகள் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை பயிற்றுமொழிகளாக இடம் பெறும் நிலை இல்லாது, இடையில் நின்று விடுபவையாக இருப்பதனால் கல்வியைத் தொடர எண்ணுபவர்களுக்குத் தாய்மொழிகள் குறித்த ஐயம் எழுவது இயல்பே. இந்தியில் முதுநிலை நிலையில் சில பாடங்களைக் கற்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு உள்ளன என்றாலும், கல்வியின் கடைசி நிலை வரை இந்தி பயிற்று மொழியாக இடம் பெறவில்லை. அதே போல், தமிழகத்தில் இளங்கலை மட்டத்தில் சில பாடங்கள் மட்டுமே தமிழில் கற்பிக்கப்படும் நிலை உள்ளது.

இந்தியா முழுவதும் உயர்மட்டக் கல்வியில் ஆங்கிலமே ஆதிக்கம் செலுத்துகிறது. மழலையர் பள்ளி முதல் பல்கலைக் கழகக் கல்வி வரை ஆங்கிலம் தொடர்ச்சியான பாதையைக் கொண்டிருப்பதனால் கல்வித் தொடர்ச்சிக்கு அது வாய்ப்பளிப்ப தாகக் கருதப்படுகிறது.

இந்தியா முழுவதிலுமுள்ள மருத்துவம், பொறியியல், வேளாண்மைக் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் ஆங்கிலமே பயிற்று மொழியாக இடம் பெறுகிறது. ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம். போன்ற தலைசிறந்த கல்வி நிறுவனங்கள் ஆங்கிலத்தையே பயிற்று மொழியாகக் கொண்டுள்ளன.

இவ்வாறு, கல்வித் தொடர்ச்சிக்காகத் தாய்மொழிகளில் பயின்ற பல மாணவர்கள் கல்லூரிகளில் ஆங்கிலத்தில் படிக்க விழைந்து, ஆங்கில வழிப் பயிற்றுவிக்கும் வகுப்புகளில் சேர்ந்துள்ளனர்.

மேனிலைப் பள்ளிகளில் தாய்மொழியில் பயின்ற பலர் பொறியியல், வேளாண்மை, மருத்துவக் கல்லூரிகளில் தவிர்க்க முடியாது ஆங்கிலத்தில் பயில்கின்றனர்.

www.tamilarangam.net



உயர்நிலைப் பள்ளிகளில் தாய்மொழி வழிப்பயின்ற பலர் தொழில்நுட்பப் பள்ளிகள் (பாலிடெக்னிக்) போன்ற நிறுவனங்களுக்குத் தவிர்க்க இயலாது ஆங்கிலம் வழிப் பயிலச் செல்கின்றனர்.

இவ்வாறு தொழில், மற்றும் உயர் கல்வியைத் தொடர்வதற்கு ஆங்கிலம் கட்டாயம் இருக்க வேண்டும் என்னும் நிலை இருப்பதினாலும், தாய்மொழிகளால் குறிப்பிட்ட அளவிற்கு மேல் பயிற்றுமொழியாகும் திறம் இல்லை என்ற நிலை இருப்பதாலும் தொடக்க முதலாகவே ஆங்கிலம் வழிப் பயில்வதே கல்விக்கு உகந்தது என்ற எண்ணத்தில் அரிச்சுவடி முதல் ஆங்கிலம் வழிப் பயில விழைகின்றனர்.

இச்சிக்கலுக்கான தீர்வு என்பது, ஒருவன் கற்கும் அவனது சொந்த மொழியில் கடைசிவரை கல்வி வாய்ப்பைப் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருவது என்பதாகத்தான் அமையும். இந்தியச் சூழலில் தாய்மொழிகள் கல்வி மொழி நிலையிலிருந்து புறக்கணிக்கப்படுவதற்கு, அம்மொழிகள் கல்வித் துறையின் எல்லா நிலைகளிலும் பயிற்றுமொழிகளாக இடம் பெறாமையே தலையாய காரணமாகும்.

கற்கும் அனைவரும் உயர்கல்வியைத் தொடருவதில்லை என்றாலும், ஒவ்வொருவரும், தமக்கு அதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். அவ்வாய்ப்பைப் பெற ஆங்கிலத்தை நாடுகின்றனர். தாய்மொழிகள் அனைத்தையும் உயர் கல்விக்குரிய மொழிகளாக்கி விட்டால் ஆங்கிலம், தானே அகன்றுவிடும்.

உயர் கல்விக்குரிய மொழிகளாகத் தாய்மொழிகளை உருவாக்கும் வரை, உயர் கல்வி நுழைவுத் தேர்வுகளில் தாய் மொழிகளில் பயின்றோருக்குச் சிறப்புச் சலுகை, முன்னுரிமை போன்றவற்றை வழங்க வேண்டும். இதனால் கல்வித்

www.tamilarangam.net



தொடர்ச்சியின்மை என்ற அச்சம் மாணவர்களிடையே அகன்று, விருப்பத்துடன் தாய்மொழி வழிக் கல்வியைத் தொடருவர்.

## சிக்கல்-4 : தேசிய ஒருமைப்பாடு பற்றிய அச்சம்

தாய்மொழிகள் பயிற்றுமொழியாவதனால் குறுகிய மொழி வெறியைத் தூண்டி வட்டார உணர்வை மேலோங்கச் செய்து, 'நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவித்து விடும் என்ற கருத்து ஆங்கிலத்தைத் தொடர வேண்டுமென்பவர்களால் கூறப்படுகின்றது.

இந்தியாவில் மொழிவழி மாநிலங்கள் அமைந்த பின்னர், ஒவ்வொரு மாநிலமும் அந்தந்த மாநில மொழிகளையே ஆட்சி மொழியாகவும், சட்ட மொழியாகவும், பயிற்று மொழியாகவும் பயன்படுத்திக் கொள்ள அரசியல்சட்டம் வழி வகுக்கிறது. இதனடிப்படையில் ஒவ்வொரு மொழியும் அதனதன் வழியில் வளர்ந்து கொண்டுள்ளன. மொழி வழித் தேசிய உணர்வு இயற்கையானது. அந்தந்த மொழியினர் தமது மொழி, கலாசாரம், வரலாறு, கலை, இசை போன்றவற்றை அவரவர்கள் வழியில் வளர்த்து அதில் பெருமிதம் அடைவது இயல்பானது. இத்தகு முயற்சிகளில் ஒன்றுதான் தங்களின் தாய்மொழிகளைக் கல்வி மொழிகளாக்கும் முயற்சியுமாகும்.

வி.இ. லெனின் தேசிய இன எழுச்சியின் வடிவமாக மொழியைப் பின்வருமாறு விளக்குகிறார்.

> **"மனித சமுதாயம் கூடி வாழ மொழி மிகவும் இன்றியமையாததாகும். பல்வேறு வகுப்புகளாகப் பிரிந்து உரிமையுடன் வாழ மொழி வளர்ச்சி தவிர்க்க இயலாதது. தேசிய மாநிலங்கள் அமைவதற்குப் பாடுபடும் ஒவ்வொரு தேசிய இயக்கமும் இந்த அடிப்படை மூலமே இன்றைய முதலாளித்துவச் சூழலில் பாடுபட**

www.tamilarangam.net



**வேண்டியுள்ளது. மொழி வளர்ச்சி பெறாத நிலையில் இந்த இலக்குகளைத் தேசிய இயக்கங்கள் அடைந்திட இயலாது."**

லெனின் குறிப்பிடும் மொழி வளர்ச்சி சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும், அச்சமூகத்தின் மொழி இடம் பெறுதலைக் குறிப்பதாகும். ஒவ்வோர் இனமும், தனது மொழி வழியாகத்தான் தம் பரம்பரைக்கு வழி வழியாகப் பண்பாட்டு எண்ணத் தொடர்பை வழங்குகிறது. வேற்று மொழி கல்விமொழியாக அமைவது. கருத்துப் புலப்படுத்தக் கருவி என்ற அளவில் மட்டுமன்று; அது அம்மொழி பேசும் இனத்தினரின் பண்பாட்டுச் சாயலையும் அது வழங்குகிறது. இதனால் வேற்று மொழியோடு வேற்று இனப் பண்பாட்டுக் கலப்பும் மேல் ஓங்குகிறது. எதிர் நிலையில் தாய்மொழியும், அம்மொழி பேசும் இனத்தின் பண்பாடும் பின்னுக்குத் தள்ளப்பட்டுக் காலப்போக்கில் அழிந்து மறைகின்றன. இப்படி மறைந்த மொழிகளும், இனங்களும், உலகில் பல உண்டு. எனவே, தாய்மொழி வழிக் கல்வி என்பது ஓர் இனத்தின் சமூகப் பண்பாட்டை நிலை நிறுத்தும் கருவியாகச் செயல்படுவதால், அது அம்மொழி பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும்.

தாய் மொழிகளுக்கு மாற்றாக வேற்று மொழிகளைத் தொடர எண்ணுவது தான் தேசிய ஒருமைப்பாட்டைச் சீர் குலைக்கும் போக்காகும்.

"அபுல்கலாம் ஆசாத்" கூட ஒரு முறை "இந்தியாவின் வடக்கும் தெற்கும் ஆங்கில மொழியால் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளன. ஆங்கிலத்தை நாம் இப்போது நீக்கினால் இந்த உறவும் இத்தோடு அற்றுப் போகும்" என்று குறிப்பிட்டார். தேசிய ஒருமைப்பாடு பற்றிக் கூறப்படும் கருத்துகள் யாவும் தாய் மொழிகள் பயிற்று மொழியாகி விட்டால் ஆங்கிலமே இருக்காது என்ற தவறான அடிப்படையில் கூறப்படுபவையாகும். ஆங்கிலம்

www.tamilarangam.net



கட்டாயம் இரண்டாம் மொழியாகத் தொடரப்படும் பொழுது எப்படி ஒருமைப்பாடு கெட்டு விடும் என்பது விளங்கவில்லை. உண்மையில் இது ஒரு போலித் தடையாகும்.

## சிக்கல்-5 : வேலை வாய்ப்பின்மை

தமிழ் வழிக் கல்வியை மறுப்பவர்கள் வேலை வாய்ப்பைப் பற்றிக் கூறுகின்றனர். கொள்கை அளவில் அயல்மொழி வழிக் கற்பதில் சில குறைபாடுகள் இருப்பினும், நடைமுறையில் இன்றைய கல்வி பொருளாதார சமுதாயச் சூழ்நிலையில் ஆங்கிலம் வழிப் பயில்வதில் ஏற்படும் நன்மைகள் அல்லது அனுகூலங்கள், தமிழ் வழிக் கற்பதிலும் அதிகம் என்றெண்ணிச் செயல்படுகின்றனர். சான்றாக, ஆங்கிலம் வழிப் பயில்பவர்களுக்கு வேலை வாய்ப்புகள் மைய அரசுத் துறைகளிலும், தனியார் துறைகளிலும், தேசிய உலக அளவிலும் மிகுதி, தமிழ்வழிப் பயிலுவது பல வேலை வாய்ப்புக் கதவுகளை மூடி விடுகிறது. எனவே, தமது மக்களின் கல்வி பற்றிச் சிந்திக்கும் பெற்றோர்கள் பரந்த அளவில், நீண்டகால அனுகுமுறையில் சிந்தனையை வளர்ப்பது பற்றியும், தமது மக்களின் படைப்பாற்றலை வளர்ப்பது பற்றியும் எண்ணாமல், நாளைய கல்வி வாய்ப்பையும், வேலை வாய்ப்பையும் பற்றி எண்ணி ஆங்கில வழிக் கல்வியை நாடுகின்றனர்.

> **''மாணவர்களும், கல்லூரிகளில் ஆங்கிலம் பயிற்றுமொழியாக இருப்பதால் மைய மாநில ஆட்சிப் பணிகளில் தமக்குரிய பங்கைப் பெற முடிகிறது என்பதை உணர்ந்துள்ளனர். மைய அரசுத் தேர்வுகள் எழுதித் தேர்ச்சி பெறுவதில் தமிழக மாணவ, மாணவியர் முன்னணியில் உள்ளனர். ஆங்கிலப் பயிற்றுமொழி வசதியில்லையென்றால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சம் இருப்பதைக் காண்கிறோம். இதை மாணவர்களும் நன்றாக**

www.tamilarangam.net



உணருவதால்தான் கல்லூரிகளில் தமிழ் மூலம் பாடம் கற்றுக் கொள்வதில் அதிக ஈடுபாடு காட்டவில்லை. இதுதான் உள்ள நிலை"

என்று தமிழ் வழிக் கல்வியை வேலை வாய்ப்போடு தொடர்புபடுத்தித் தடைகள் பல எழுப்பப்படுகின்றன."

தமிழ் வழியில் பயின்றால் வேலை கிடைக்காது என்ற கருத்துக்கு மறுப்பாகப் பின்வரும் கருத்துகள் கூறப்படுகின்றன.

"ஆங்கிலத்தையே தாய்மொழியாகக் கொண்டு ஆங்கிலத்திலேயே கல்வி கற்பிக்கப்படும் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் கூட வேலையில்லாத் திண்டாட்டம் உள்ளது. ஆங்கிலம் வழிப் பயிலுவோருக்கு வேலை கிடைத்து விடும் என்றால் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் வேலையில்லாத சூழலே இருக்கக் கூடாது. ஆனால், நடைமுறையில் அங்கும் வேலையில்லாதவர்கள், வேலை தேடுபவர்கள் இருக்கத்தான் செய்கின்றனர். நம் தமிழ் நாட்டில் கூட வேலையின்றித் திரியும், மருத்துவம், பொறியியல், வணிகவியல் மற்றும் கலைப் பாடங்களில் படித்த பட்டதாரிகளில் பலர் ஆங்கிலம் வழிப் பயின்றவர்கள் தாம்"

என்று ஆங்கிலம் வழிப் பயின்றோரின் வேலையின்மை சுட்டிக் காட்டப்படுகிறது.

தமிழ் வழிக் கல்விக்கு வாய்ப்பாக வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் கருத்துக் கூறப்படுகிறது.

"எது சோறுபோடும்; எது வேலை தரும் எது மேற்படிப்பிற்கு வாய்ப்புத் தரும், எது உடனடியாகப் பொருளாதாரம் தரும், எது உலக வாழ்வு தரும்

என்பதே இயல்பான மக்களின் பொது நோக்கம் ஆகும். தமிழ் வழிப் பயில்வோருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை என்ற நிலை இருந்திருக்குமே யானால் தமிழ் வழிக் கல்வியை எல்லாத் தமிழர்களும் ஆவலோடு தழுவியிருப்பர். எனவே, தமிழ்வழிக் கல்வியை வெற்றி பெறச் செய்ய வேண்டுமானால் தமிழகத்தில் தமிழ் வழிப் பயின்றோருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும்."

இன்றைய சூழ்நிலையில், ஆங்கிலம் வழிப் பயிலுவதில் ஓர் ஈர்ப்பு உள்ளது. தாய்மொழி வழிப்பயிலுவது நாளைய உயர்கல்வி வாய்ப்பிற்கும், மாநில அளவில் தேசிய அளவில் வேலை வாய்ப்பிற்கும், ஆங்கிலம் வழிப் பயிலுவதற்கு ஈடானது என்ற நிலையை ஒரு வழியில் இல்லாவிட்டால் இன்னொரு வழியில் தோற்றுவிக்கும் வரை தாய்மொழி வழிக் கல்வி கொள்கை அளவிலேயே இருக்கும். தனியார் துறைகளில் பெரிய நிறுவனங்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் தான் அலுவல்களை நடத்துகின்றன. மைய அரசின் அலுவலகங்கள் ஆங்கிலம் அல்லது இந்தியில் தமது அலுவல்களை நடத்துகின்றன. சிலர் இக்கருத்திற்கு மாற்றாக, நுழைவுத் தேர்வு எழுதி வெற்றி பெறுபவர்கள் எத்தனை பேர்? மைய அரசின் போட்டித் தேர்வு எழுதுவோர் எத்தனை பேர்? மாநில வரம்பு தாண்டி வேலை செல்வோர் எத்தனை பேர்? மேலை நாடுகளுக்குக் கல்வி கற்று வேலை பார்க்கச் செல்வோர் எத்தனை பேர்? அவர்கள் சிலரே! அந்தச் சிலருக்காகப் பெருந்தொகையினர் ஏன் ஆங்கிலம் வழிப் பயில வேண்டும்? என்ற கருத்தை முன் வைக்கின்றனர்.

இக்கேள்விக்கு விடையாக, வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும், மைய அரசு நிறுவனங்களுக்கும், பெரிய தனியார் நிறுவனங்களுக்கும் படித்த அனைவரும் வேலைக்குச் செல்வதில்லை என்றாலும், ஒவ்வொரு பெற்றோரும் தன் மகளும்,

www.tamilarangam.net



மகனும் அந்தச் சிறு தொகையினரில் ஒருவராக இருக்கவேண்டும் என்று விரும்புகின்றனர். தொடக்கத்திலேயே சில வாய்ப்புக் கதவுகளை மூடிவிட யாரும் தயாராக இல்லை. ஆங்கிலத்தில் படிப்பதால் அதிக வாய்ப்புகள் தென்படுகின்றன. தாய்மொழி வழிப் பயில்வதன் மூலம் சில வாய்ப்புகள் குறைவதும் தெரிகிறது. தாய்மொழியில் படிப்பதன் மூலம் நடைமுறையில் குறிப்பிடத்தக்க நன்மை, சலுகை எதுவும் இல்லாத சூழ்நிலையில் கொள்கை வழி தாய்மொழியில் படிப்பது தான் சிறந்தது என்ற அறிவுரை, அடுத்த வீட்டுக்காரருக்குத் தானே தவிரத் தனக்கன்று என்ற நிலையில் தான் இருந்து வருகிறது. இவ்வாறு கூறப்படும் பல்வேறு கருத்துக்களின் உண்மை நிலையினைக் காணுதல் தேவையானதாகும். உண்மையில் பயிற்றுமொழிச் சிக்கலை வேலையில்லாத் திண்டாட்டத்துடன் இணைத்துக் கூறுவது பொருத்தமற்றதாகும். ஒருவேளை தமிழ் வழிப்பயின்றோருக்குத் தான் தமிழகத்தில் "அரசுப்பணி" என்ற நிலை வந்தாலும் தமிழ்வழிக் கற்ற அனைவருக்கும் வேலை வாய்ப்பைத் தர இயலுமா என்பது குறித்தும் எண்ணிப் பார்க்க வேண்டும். இச்சிக்கலைக் கூர்ந்து கவனிக்கும் போது மொழிப் பாடம் (Language subject) பற்றிய சிக்கல், அதாவது இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பிக்கப்படுவதில் உள்ள சிக்கலாகவே தோன்றுகிறது.

மைய அரசுத்துறைப் பணித் தேர்வுகள், தனியார் துறை நடத்தும் தேர்வுகள் தேசிய, உலக அளவிலான தேர்வுகள் எல்லாம் ஆங்கிலம் வழியே நடைபெறுகின்றன என்பது உண்மை. ஆனால், வேலைவாய்ப்பிற்கான தேர்வுகள் ஆங்கிலத்தில் நடைபெறுகின்றன என்பதற்காக, ஆங்கில வழிக் கல்வியை தொடர வேண்டும் என்ற தேவையில்லை. இத்தகைய தேர்வுகளை எழுதும்போது ஆங்கிலம் துணையாக இருக்கிறது என்பது உண்மை. ஆனால், பாடத்தில் பெற்ற பாட அறிவு (Subject knowledge) ஆங்கிலத்தில் இருந்தே ஆக வேண்டும் என்ற தேவையில்லை. நம் சிந்தனையை

www.tamilarangam.net


ஆங்கிலத்தில் வெளிப்படுத்தினால் போதுமானது. தமிழ் வழியில் கற்றோர் தாங்கள் பெற்ற பாட அறிவை ஆங்கிலத்தில் வெளிப்படுத்துமளவிற்கு ஆங்கிலத்தில் புலமை பெறவில்லையாயின் அது இரண்டாம் மொழியாக ஆங்கிலம் அவர்களுக்குக் கற்பிக்கப்படுவதில் உள்ள குறைபாடாகும்.

ஆகவே, தமிழ் வழிக் கல்வியை வேலையில்லாத் திண்டாட்டத்தோடு இணைத்துக் கூறுவது, தமிழ்ப் பயிற்று மொழியாக இருப்பது பற்றிய சிக்கலன்று. ஆங்கிலம் இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதில் உள்ள சிக்கலாகும். ஆக, பயிற்று மொழிக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் யாதொரு தொடர்புமில்லை என்பதை உணர வேண்டும்.

## சிக்கல்-6 : கல்வியில் தரமின்மை

ஆங்கிலப் பயிற்று மொழியிலிருந்து தமிழ்ப் பயிற்று மொழிக்கு மாறும் பொழுது கல்வியின் தரம் குறைந்து விடும் என்று கருத்துக் கூறப்படுகிறது. தொழில்களும், ஆய்வுகளும் எங்கோ நடக்க, இங்கே அதை ஏட்டில் மட்டும் படித்துக் கொண்டிருந்த காலத்தில் பயிற்றுமொழி மாற்றம் கல்வியின் தரத்தைப் பாதிக்கும் எனும் கருத்து சரியானதே. ஆனால், தொழில் வளர்ச்சி தமிழ் நாட்டில் தற்போது காலூன்றி விட்டது. எனவே, மொழி மாற்றத்தால் முதலில் ஏற்படக்கூடிய தளர்ச்சியை இந்தப் புதிய தொழிலியல் சூழ்நிலை தாங்கிக் கொள்ளும்.

பயிற்றுமொழி மாற்றத்தால் தரம் குறையும், குறையாது எனும் கருத்துகள் ஒரு புறம் இருக்க, கல்வியின் தரத்தை மதிப்பிடுவதற்கு ஓர் அளவுகோல் இருப்பதாகத் தெரியவில்லை. தேர்வுக் கண்ணோட்டத்தில் ஒருவன் பெறும் மதிப்பெண்களை வைத்துக் கணக்கிட்டால் ஆங்கிலத்தில் எண்பது மதிப்பெண்கள் பெற்ற மாணவன் மற்றப் பாடங்களில் நாற்பது, ஐம்பது என மதிப்பெண்கள் பெற்றிருந்தால் அவனுடைய கல்வித் தரத்தை எவ்வாறு

www.tamilarangam.net



மதிப்பிடுவது? தமிழ்ப் புலமை பெற்றவருக்கு ஆங்கிலப் புலமை குறைவாக இருக்கலாம். அவற்றை வைத்துக் கல்வியின் தரத்தை மதிப்பிட இயலுமா? என்ற வினா எழுகிறது.

> "தரமான கல்வியென்பது ஆளுக்கொரு பொருளைக் குறிக்கிறது. அதற்குத் திட்டவட்டமான பதில் இல்லை. ஆகவே, கல்வியின் தரம் வேண்டுவோர் ஆளுக்கொன்றை நினைத்துக் கொண்டு கேட்கின்றனர். ஆங்கில அறிவு மிகுதியாக வேண்டும் என்று தர உயர்வு கோருவோர் சிலர், தமிழறிவு மிக வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு தர உயர்வு என்று பேசுவோர் வேறு சிலர். நாங்கள் எத்தனை நன்னூல் சூத்திரங்களைத் தலைகீழாக ஒப்புவிப்போம். இன்றைய மாணவர்களால் அது முடியுமா? பலவற்றையும் நெட்டுருச் செய்து கடகடவென்று ஒப்புவித்தலே கல்வியின் தரத்திற்கு அடையாளம் என்பது இவர்கள் கொள்கை. இதோ மற்றொரு கொள்கையினர், முந்திரி மாகாணிக் கணக்கெல்லாம் எங்களுக்குத் தண்ணீர் பட்டபாடு, இப்போது எங்கே இருக்கிறது இவையெல்லாம்? படிப்பே பாழாகிவிட்டது என்று குறைபடுவோருக்குக் குறை உண்டோ? தரம் குறைந்துவிட்டது என்று குறை கூறும் போது நாம் அறிந்து பேசுகிறோமா? அல்லது பழக்கத்தால் பேசுகிறோமா? முப்பதாண்டுகளுக்கு முன் நாங்கள் கல்லூரி மாணவர்களாக இருந்த போது கேட்டதென்ன? இதே குரல் இன்னும் கேட்கிறோம். இது ஒரு மரபாகி விட்டது"

எனும் கருத்து கல்வியின் தரத்தை எளிதில் மதிப்பிட முடியாது என்பதனைத் தெளிவுறுத்துகிறது.

www.tamilarangam.net



தரமான கல்வி என்பது மொழித் திறமையும் அல்ல, பாடத் திறமையும், அல்ல; இரண்டுமே ஆகும். தரமான கல்வியில் எவற்றைத் தேட வேண்டும்? வெறும் மொழித் திறமையை மட்டும் தேடக்கூடாது. பிற பாடத் தேர்ச்சியோடு அடங்கி விடுமா தரமான கல்வி அடங்காது. அடங்கவே அடங்காது. மொழித் திறமையோடும், பாடத் தேர்ச்சியோடும் கலந்திருக்க வேண்டிய சில. அவை கலந்திருந்தால் மட்டுமே கல்வி தரமானது. இல்லையேல் கல்வி தரம் குறைந்தது.

இவ்வாறு தான் கல்வியின் தரம் மதிப்பிடப்படுகின்றதென்றால் பயிற்று மொழிக்கும் தரத்திற்கும் என்ன தொடர்பு உள்ளது. இப்படித்தான் கல்வியின் தரத்தை மதிப்பிடலாம் என்று கூறினாலும் அதுவும் முழுத்தரத்தையும், மதிப்பிடுவதாகாது என்பதைச் சுந்தரவடிவேலு அவர்கள், குருடர்கள் யானையைத் தொட்டுப் பார்த்து, விவரித்தது போன்று நாம் தரமான கல்வியை விவரிக்கின்றோம் என்று சுட்டிக் காட்டுகிறார். முன்னாள் கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள், தமிழ் பயிற்று மொழியாவதால் கல்வியின் தரம் குறையாது என்பதைப் பின் வருமாறு சுட்டிக் காட்டுகிறார்.

> ''சர்வ கலாசாலையிலும் கூடப் பிராந்திய மொழியிலேயே எல்லாப் பாடங்களும் போதிக்கப்பட வேண்டும். அப்போது தான் மாணவர்களுடைய அறிவும் ஒழுக்கமும் வளரும். இப்படிச் செய்தால் கல்வியின் தரம் குறைந்து விடுமென்று கூறுவதை நான் ஒரு போதும் ஏற்க முடியாது. பள்ளிக்கூடப் படிப்பு வரை தாய்மொழியில் படித்துவிட்டுக் கல்லூரிக்குச் சென்றவுடன் திடீரென்று ஆங்கிலத்தில் படிக்க வேண்டும் என்று சொல்லும் போது அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பார்க்கிறோம். அதனால் தான் தரம் குறைந்துவிட்டது என்று சொல்கிறார்கள்.

www.tamilarangam.net



**அதற்கு முக்கியமான காரணம் மொழிப் பாரம் தான் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்."**

தாய்மொழி பயிற்று மொழியாவதால் கல்வியின் தரம் குறைந்து விடுமோ என்ற கேள்வி 1948-இல் பம்பாயில் கேட்கப்பட்டது. அதற்குப் பலர் பதில் கொடுத்தனர். இக்கேள்விக்குப் பதிலளித்த **சர்தார் படேல்** தாய்மொழி மூலம் கல்வி பயிற்றுவித்தால் கல்வியின் தரம் குறைந்து விடும் என்பதற்கு எவ்விதக் காரணமும் இல்லை. ஒருவன் தாய் மொழியின் மூலம் பயில்வதால் அந்நிய மொழியில் பயில்வதை விட அதிகமாகப் பாடத்தை அறிந்து கொள்வான் என்று விடையிறுத்தார். **கோகலே** அவர்கள், ஆங்கிலத்தைப் பயிற்று மொழியிலிருந்து நீக்குவதால் நாம் பாடத்தின் பொருளை அதிகமாக உணர முடியும் கல்வியின் தரம் குறைந்து விடும் என்று நான் நினைக்கவேயில்லை என்று பதில் அளித்தார். பதிலளித்த பதினொரு பேர்களில் யாருமே கல்வியின் தரம் குறைவதாகக் கருத்துக் கூறவில்லை. முன்னாள் முதலமைச்சர் **பக்தவச்சலம்** தாய் மொழியின் வாயிலாகக் கற்பதனால் மாணவர்களின் ஆங்கில அறிவு குறைந்திருக்கலாம். ஆனால், அவர்களின் தமிழறிவும், பொது அறிவும் வியக்க கூடிய அளவில் முன்னேறியுள்ளன என்றார். எனவே, தமிழ் வழிக் கல்வியினால் தரம் குறைந்து விடும் என்பது உண்மையன்று, இது தமிழ்வழிக் கல்விக்கு முன்னர் எழுப்பப்படும் போலித் தடையாகும்.

## சிக்கல்-7 : போட்டித் தேர்வுகளில் பங்கேற்க முடியாமை.

நாட்டின் ஆட்சி மொழியாக இந்தி, துணை ஆட்சி மொழியாக ஆங்கிலம் எனும் இரு மொழிகளில் அரசுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. மாநிலங்களில் அந்தந்த மாநில மொழிகள் ஆட்சி மொழிகளாக ஏற்கப்பட்டுள்ள நிலையிலும் ஆட்சிப் பணிகளில் ஆங்கிலமே செல்வாக்குச் செலுத்துகிறது. இதனால்,

www.tamilarangam.net



தாய்மொழி வழிப் பயின்றோர். பின்னுக்குத் தள்ளப்படுகின்றனர். எனவே, மாணவர்களிடையே தாய்மொழி வழிக் கல்வி வாழ்விற்குப் பயனற்றது என்ற எண்ணம் மேலோங்க அதனைப் புறக்கணிக்கின்றனர்.

நடப்புக் காலத்தில் கல்வி என்பது வேலை வாய்ப்பிற்கான சாதனமாகவும் ஒரு பொருளாதார முதலீடாகவும் கருதப் பெறுகிறது. கல்வியின் நோக்கம் மாறியுள்ள நிலையில் அக்கல்வியைப் பெறும் மொழி பற்றிய மக்களின் மனப்பாங்குகளும் மாற்றம் பெற்று உள்ளன. கல்வி, கல்வியின் வாயிலாகப் பெறும் பொருளாதார முன்னடைவு இவற்றைப் பெறுவதில் கல்வியை அளிக்கும் மொழியும் முதன்மை வாய்ந்ததாகத் திகழ்கிறது. தாய்மொழி வழிக் கல்வியின் வெற்றி அம்மொழியின் நடைமுறைப் பயன்பாட்டை பொறுத்தது. பயன்பாடு வாழ்வியல் துறைகள் பலவற்றிலும் இருத்தல் வேண்டும் என்றாலும், வேலை வாய்ப்பு விசயங்களில் அதன் செயற்பாடு மிகுதியாக இல்லாவிட்டாலும் தனக்குரிய அளவிலாவது இடம் பெற வேண்டும்.

ஏனெனில், கல்வி வேலை வாய்ப்பிற்குரிய கருவியாக ஆக்கப்பட்டு விட்டது. மைய அரசின் தேர்வு மொழியாக இந்தியும் ஆங்கிலமும் இடம் பெறுகின்றன. இந்தி தேர்வு மொழியாக இடம் பெறுவதென்பது, அம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு அமையும் முதல் கூடுதல் வாய்ப்பு, மற்றவர்கள் தேர்வைத். தாய்மொழியில் எழுத இயலாது, ஆங்கிலத்தை வலுக்கட்டாயமாக விரும்பியே ஆக வேண்டும். வேற்று மொழியில் என்னதான் புலமை வீறு பெற்றிருப்பினும் தாய்மொழிக்கு ஈடு இணை ஆகாது என்பது உலகறிந்த உண்மை, மைய அரசின் தேர்வு மொழிகளுக்கும் கல்வித்துறையின் பயிற்று மொழிகளுக்கும் தொடர்பு இருத்தல் வேண்டும். கல்வியைக் கற்றுத் தரும் மொழிகளாக இந்தியாவில் உள்ள பல்வேறு வட்டார மொழிகளும் ஆங்கிலமும் விளங்குகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கல்வித் துறையைப் பொறுத்தமட்டில் இந்தியும் ஆங்கிலமும் மட்டுமே பயிற்று மொழிகளாக இருந்தால் அவை இரண்டை மட்டுமே தேர்வு மொழிகளாகக் கொள்வதில் சிக்கல் ஒன்றுமில்லை. ஆனால், தமிழ் போன்ற பல்வேறு மொழிகள் கல்வித் துறையின் பயிற்று மொழிகளாக உள்ளன. தமிழ் போன்ற வட்டார மொழிகளின் வழிக் கற்றவர்கள் இந்தி, ஆங்கிலம் இவை வழிப் பயின்றோரிடையே போட்டியிடும் போது பின்னுக்குத் தள்ளப்படுகின்றனர். ஏனெனில், அவர்கள் பயின்ற மொழியில் தேர்வு நிகழ்வது இல்லை.

இரண்டாம் பாடமாகக் கற்ற ஆங்கிலமும் அவர்களோடு போட்டியிடும் அளவிற்குத் தகுதி வாய்ந்ததாகவும் இருப்பதில்லை. இவ்வாறு, நாடு முழுமைக்குமான அரசுத் தேர்வில் பயிற்றுமொழி வேறுபாட்டால் வேலை வாய்ப்புகள் இழக்கப்படுவது, ஏற்றுக் கொண்ட குடியாட்சி முறை உண்மைக்கு முரணான வழியில் செல்வதாகும்.

**இந்தியாவின் ஆட்சி மொழிக் கொள்கைக்கு ஏற்பக் கல்வித் துறை மொழிகள் அமைதல் வேண்டும் அல்லது பயிற்று மொழிக் கொள்கைக்கு ஏற்ப ஆட்சி மொழிக் கொள்கை அமைதல் வேண்டும்.**

தாய்மொழிகளைப் பயிற்று மொழிகளாகக் கொண்டவர்களின் நிலையில் நின்று பார்க்கும்போது (இந்தி தவிர) மைய அரசின் தேர்வு மொழிக்கும் கல்வித் துறையின் பயிற்று மொழிக்கும் தொடர்பு துண்டிக்கப்படுகிறது. எனவே, மைய அரசுப் பணி முறையில் மாற்றம் செய்ய வேண்டுவது கட்டாயமாகிறது. உண்மையில் இச்சிக்கலுக்கான தீர்வு என்பது அவரவர்கள் கற்ற மொழி வாயிலாகவே தேர்வு நடத்தப்பட வேண்டும் என்பதாகவே அமையும்.

www.tamilarangam.net



இந்தி, ஆங்கிலம் இவற்றோடு கல்வித்துறை பயிற்று மொழிகளாக உள்ள தமிழ் போன்ற வட்டார மொழிகளும் தேர்வு மொழிகளாக இணைக்கப்பட வேண்டும். மைய அரசுக்கு வட்டார மொழிகளில் தேர்வை நடத்துவதென்பது செயற்படுத்த முடியாது சிக்கல் எனக் கருதினால் பின்வரும் நெறிமுறைகளைப் பின்பற்றலாம்.

1. மைய அரசுத் தேர்வைப் பொறுத்த வரையில் இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு, இந்தியில் தேர்வு எழுதுவோரின் மதிப்பெண்களை அப்படியே வைத்துக் கொள்ள வேண்டும் ஏனெனில் இந்தி அவர்களுக்கு தாய்மொழி.

2. இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாமல், ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு, ஆங்கிலத்தில் தேர்வு எழுதுவோருக்கு அவர்கள் பெறும் மதிப்பெண்களோடு ஒவ்வொரு தாளிலும் ஐந்து மதிப்பெண்கள் கூடுதலாக வழங்கப் பெறுதல் வேண்டும். ஏனெனில் ஆங்கிலம் அவர்களுக்குத் தாய் மொழியன்று.

3. வட்டார மொழிகளைப் பயிற்று மொழிகளாகக் கொண்டு ஆங்கிலத்தில் தேர்வு எழுதுவோர்க்கு அவர்கள் பெறும் மதிப்பெண்களோடு ஒவ்வொரு தாளிலும் பத்து மதிப்பெண்கள் கூடுதலாக வழங்க வேண்டும். ஏனெனில், ஆங்கிலம் அவர்களுக்குப் பயிற்றுமொழியன்று.

இத்தகு நெறிமுறைகள் பின்பற்றப்பட முடியாது என்ற நிலை வருமானால் மைய அரசின் தேர்வு மொழியாக ஆங்கில மொழி ஒன்றை மட்டும் கடைப்பிடிப்பதைத் தவிர வேறு வழியில்லை. இதிலும் சிக்கல் உண்டு என்றாலும் குறைவு. நாகாலாந்தில் அலுவல் மொழியாக ஆங்கிலம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. அரசுப் பணிகளுக்கான தேர்வுகள் அனைத்தும் ஆங்கிலத்தில் மட்டுமே நடைபெறுகின்றன.

www.tamilarangam.net



ஆங்கிலம் அந்த மண்ணின் மொழியுமன்று; தேசிய மொழியுமன்று; ஆட்சி, அலுவல், தொடர்பு முதலிய எல்லா நிலைகளிலும் ஆங்கிலமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஒற்றை மொழிக் கொள்கை வேலை வாய்ப்புகள் தனிப்பட்ட ஒரு மொழிக் குழுவினரிடம் தங்கிவிடாமல் பரவலாக்கப்படுவதற்குப் பயன்படுகிறது இந்தியாவிலும் மைய அரசுத் தேர்வு மொழியாக ஆங்கிலத்தை மட்டுமே கொண்டால் கற்றோரிடையே வேலை வாய்ப்புப் பெறுவதில் கூடியவரை சம அளவிலான இடம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

அவ்வாறன்றி இந்தி அல்லது ஆங்கிலத்தைத் தேர்வு மொழியாகக் கொள்ளலாம் என்ற ஆணை குறிப்பிட்ட மொழிக்கு வழங்கும் சிறப்புச் சலுகையாகவும் அச்சலுகை காலப்போக்கில் மற்ற மொழியினருக்குப் பெருந்தீங்காகவும் அமையும், அமைந்தும் இருக்கிறது. அயலார் மொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்வது சுதந்திரம் பெற்றதற்கான அடையாளம் இல்லாமல் இருப்பதாகும் என்ற குற்றச்சாட்டு ஒரு புறம் இருந்தாலும், வேலை வாய்ப்பு முதலானவற்றில் பல்லாற்றானும் இது உதவியாக அமைவதைக் காண முடிகிறது. என்றாலும் இதை நல்லதொரு ஆட்சி மொழிக் கொள்கையாகக் கொள்ளவியலாது. தற்காலிக ஏற்பாட்டிற்குப் பொருத்தமானது என்பதற்காகவே ஆங்கிலம் இங்குச் சுட்டப்படுகிறது.

ஆங்கிலத்தை மட்டுமே தேர்வு மொழியாகக் கொண்டாலும் ஆங்கில வழிப் பயின்றோரின் தேர்ச்சி விழுக்காடும், வட்டார மொழிவழிப் பயின்றோரின் தேர்ச்சி விழுக்காடும் முறையே கூடவும் குறையவும் வாய்ப்புண்டு. இத்தகு சூழலில் இந்தி உள்பட மற்ற வட்டார மொழியினர்க்குக் கூடுதல் மதிப்பெண்களோ வேலை வாய்ப்பில் முன்னுரிமையோ வழங்கி ஏற்ற இறக்கங்களைச் சரி செய்து கொள்ள இயலும். ஆங்கிலத்தை மட்டுமே தேர்வு

www.tamilarangam.net



மொழியாகக் கொள்வதில் இந்தியச் சூழலில் உள்ள இன்னொரு சிக்கல் பற்றியும் சொல்லியாக வேண்டும். இந்தியாவில் ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் சிறுபான்மை நிலையில் உள்ளனர். ஆங்கிலத்திற்குக் கொடுக்கப்படும் இடத்தினால் இவர்களிடம் வேலை வாய்ப்புத் தங்குவதற்கு ஏதுவாகிறது எனலாம். இது தீர்க்கவியலாத சிக்கல் அன்று. ஏனெனில் ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் மிகச் சிறுபான்மையினரே, அவர்களுக்குக் கூடுதல் வாய்ப்புக் கிடைக்கப் பெறுமாயினும், மற்ற மொழியினருக்கு வழங்கப்படும் கூடுதல் மதிப்பெண் போன்றவற்றாலோ முன்னுரிமை போன்றவற்றாலோ வேலைவாய்ப்புப் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு வாய்ப்புண்டு.

## தமிழ்நாடு அரசுத் தேர்வு

தமிழக அரசின் அரசுப் பணிகளுக்கான தேர்வுகள் தமிழ்நாடு பப்ளிக் சர்வீசு கமிசன் எனும் பெயரில் அவ்வப்பொழுது நிகழ்ந்து வருகின்றன. தமிழகத்தில் உள்ள மொத்த அரசுப் பணியாளர்களில் மிகுதியான தொகையினர் இத்தேர்வுவழித் தெரிவு செய்யப்படுகின்றனர். தமிழகக் கல்வி முறையின்படித் தமிழ் வழிப் பயின்றோரும் ஆங்கிலம் வழிப் பயின்றோரும் இத்தேர்வுகளுக்குப் போட்டியிடுகின்றனர். இத்தேர்வு முறையில் உள்ள இரு தாள்களைத் தவிர எஞ்சிய எல்லாத் தாள்களுமே இரு பிரிவினருக்கும் பொதுவானவை. ஆங்கில மொழித் தாளும், ஆங்கில மொழி வழிப் பொது அறிவுத் தாளும் தான் தமிழ்வழிப் பயின்றோருக்குப் பெரும் சிக்கலாக உள்ளன. தமிழ் வழிப் பயின்றோரின் ஆங்கில அறிவு ஆங்கிலம் வழிப் பயின்றோரின் ஆங்கில அறிவை விடப் பன்மடங்கு குறைவுடையது என்பதற்குத் தனி ஆராய்ச்சி எதுவும் வேண்டாம். இந்நிலையில் தமிழில் எவ்வளவு வல்லமை பெற்றவராக இருந்த போதிலும் ஆங்கிலம் வழிப் பயின்றோரிடையே மோதும்போது இவ்விரு தாள்களிலும் தோல்வியைக் காண இயலுகிறது. ஆங்கில வழிப் பயின்றோருக்கு

www.tamilarangam.net


இவ்விரு தாள்களிலும் தேர்ச்சி என்பதும், கூடுதல் மதிப்பெண் பெறுவது என்பதும் எளிதாகிவிடுகிறது. தற்சிந்தனையும், படைப்பாற்றலும் மிகுந்திருக்கும் தமிழ் மாணவர் பயிற்றுமொழி வேறுபாட்டால் வேலை வாய்ப்பினின்றும் புறம் ஒதுக்கப்படுகிறார்.

தமிழகத்தின் எல்லைகளைத் தொட்டுக் கொண்டிருக்கும் ஆந்திர மாநில அரசு, அரசுப் பணிகளுக்கான தேர்வை "ஆந்திர பிரதேச பப்ளிக் சர்வீசு கமிசன்" எனும் பெயரில் நடத்துகிறது. ஆந்திரப் பிரதேசக் கல்வி முறையும் தமிழகக் கல்வி முறையை ஒட்டியதே. அங்கும் தெலுங்கும் ஆங்கிலமும் பயிற்று மொழிகளாக உள்ளன. தேர்வு முறை கூடத் தமிழகத் தேர்வு முறை போன்றது தான். ஆங்கிலத்தாள் ஒரு பகுதியும் ஆங்கிலம் வழிப் பொது அறிவுத் தாள் ஒரு பகுதியும் இடம் பெறுகின்றன. ஆனால், ஒரே ஒரு வேறுபாடு ஆந்திர மாநில அரசுத் தேர்வு எழுதுவோர், தெலுங்கு பயிற்று மொழியில் கல்வி பெற்றவராக இருப்பின் அவர்களுக்கு மேற்குறித்த இருதாள்களிலும் அவர்கள் பெற்ற மதிப்பெண்களோடு ஐந்து மதிப்பெண்களைக் கூடுதலாக வழங்க வேண்டும். அத்தோடு, ஆங்கிலம் வழிப் பயின்ற ஒருவரும் தெலுங்கு வழிப் பயின்ற ஒருவரும் சம அளவிலான மதிப்பெண்களைப் பெற்ற நிலையில் தெலுங்கு வழிப் பயின்றவருக்கு முன்னுரிமை அளிக்குமாறு ஆந்திர மாநில அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஆந்திர மாநில அரசைப் பொறுத்த வரையில் இவ்வாறு கூடுதல் மதிப்பெண் வழங்கப்படுவது ஆங்கிலப் பயிற்று மொழியைப் புறக்கணிப்பதாக ஆகாது. அதேபோல் தெலுங்குப் பயிற்று மொழியை ஊக்குவிப்பதாகவும் ஆகாது. பயிற்றுமொழி வேறுபாட்டால் வேலைவாய்ப்பு நழுவி விடாமல் இருப்பதற்காக மட்டுமே இவ்வாறு செய்யப்படுகிறது. தமிழக அரசு மாநில அரசுத் தேர்வைப் பொறுத்தமட்டில் தமிழ் வழிப் பயின்றோருக்கு முன்னுரிமை அளிப்பதில் என்ன சிக்கல் இருக்கிறது என்பது

தெரியவில்லை. ஒன்று, தேர்வு முறையில் இருக்கும் இரு தாள்களையும் நீக்கிட வேண்டும். அவ்வாறு நீக்க முடியாவிட்டால், ஆந்திர மாநில அரசு கடைப்பிடிப்பதைப் போல் தமிழில் பயின்றவருக்கு ஐந்து மதிப்பெண்கள் கூடுதலாக வழங்க முன் வரவேண்டும். வேலை என்ற இலக்கை நோக்கித்தான் தமிழ் வழியிலும் கல்வி பயிலுகின்றனர். இதற்கு வாய்ப்பாகப் பின்வரும் நெறி முறைகள் சுட்டப்படுகின்றன.

1. ஆங்கில மொழிக்குத் தனித்தாள் அமைவதைப் போலத் தமிழ் மொழிக்கென்று தனியாக ஒரு தாள் சேர்க்கப்பட வேண்டும்.
2. பொது அறிவுத் தாளுக்கான வினாக்கள் தமிழில் அமைதல் வேண்டும்.
3. மேற்குறித்த மாற்றங்களைச் செய்ய முடியாதென்றால் ஆங்கில மொழித்தாள், ஆங்கிலம் வழிப் பொது அறிவுத் தாள் ஆகிய இரு தாள்களும் நீக்கப்பட வேண்டும்.
4. அவ்வாறும் செய்யவில்லையாயின், ஆந்திர மாநில அரசைப் போலத் தமிழ் வழிப் பயின்றோருக்கு முன்னுரிமையும் கூடுதல் மதிப்பெண்ணும் வழங்க முன் வரவேண்டும்.

### சிக்கல்-8 : விருப்பத்திற்கு விடப்பட்டுள்ள நிலை

இந்தியக் கல்வித் துறையில் ஆங்கிலத்தை மிகப் பெரிய அளவில் பயிற்று மொழியாகப் பயன்படுத்தும் நிலை ஆங்கிலேயர் காலத்திலிருந்து இன்று வரை தொடரப்படுகிறது. விரும்பினர்ல் விரும்புவர்களுக்கு மட்டுமே தாய்மொழிக் கல்வி என்ற அளவில் தான் இந்திய மொழிகள் (இந்தி உள்பட) அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. எந்த ஒரு திட்டத்தையும் முதலில் தொடங்கும் போது விரும்புவர்கள் ஏற்றுக் கொள்ளலாம் என்ற நிலை இருக்குமானல் பொதுவாக அனைவருமே அதை ஏற்கத் தயக்கம் காட்டுவர். தய்க்கம் காட்டுபவர்களைப் பற்றி **கு. காமராசு** பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

www.tamilarangam.net


புதிய வழியிலே போகும் போது பழைய வழியில் பழக்கப்பட்டவர்கள் யாரும் புதிய வழிக்கு வரமாட்டார்கள். சாதாரண ஜனங்கள் இப்புதிய வழிக்கு ஒரு வேளை வந்தாலும் வந்து விடுவார்கள். ஆனால் படித்தவர்கள் வரவே மாட்டார்கள்.

இவ்வாறு விருப்பத்திற்கு விடப்பட்டுள்ளதால் தாய்மொழிகள் கல்வித்துறையில் உரிய இடத்தைப் பெற முடியவில்லை. தாய் மொழி வழிக் கல்விக்கு முதன்மை கொடுத்து மற்றவர்களின் தேவைக்கு ஏற்பத் தவிர்க்க இயலாத சூழலில் மட்டும் மற்றவர்களுக்கு ஆங்கிலம் வழிக் கல்வியை வழங்க முன் வரவேண்டும்.

மேலும், தாய்மொழி வழிக் கல்வியைக் கட்டாயப்படுத்த வேண்டும். எவ்வித விருப்பத்திற்கும் விட்டுவிடக் கூடாது. அவ்வாறு விருப்பத்திற்கு என்று விட்டு விட்டால் இன்னும் ஆங்கிலத்தைத் தான் மாணவர்கள் விரும்புவர். ஏனெனில், ஆங்கிலம் தான் ஆட்சிக்கும் வணிகத்திற்கும் உரிய மொழி என்று பலரால் விளக்கப்பட்டுள்ளது.

காந்தியடிகளும் பயிற்று மொழி விருப்பம் குறித்து.

"நான் தாய்மொழி பயிற்று மொழியாவதை விருப்பத்திற்கு விடுவதை எதிர்ப்பவன். விருப்பம் என்று விட்டுவிட்டால் அது கல்வித் திட்டத்தை. பாழ்படுத்தி விடும். தற்பொழுது இருக்கும் சூழலில் விருப்பத்திற்கு விட்டுவிட்டால் நம் இளைஞர்கள் ஆங்கில வழிப் பயில்வதே எளிது என்பர். ஏனெனில், நாம் பல தலைமுறைகளாக அவ்வாறே வளர்க்கப்பட்டு விட்டோம். நம் சிந்தனை, பேச்சு, எழுத்து எல்லாமே ஆங்கிலமாகி விட்டது. செயற்கையே நமக்கு இயற்கையாகக்

**காட்சியளிக்கிறது. எனக்கு அதிகாரம் இருந்தால் இன்றே நம் மாணவர்கள் அந்நிய மொழி மூலம் பயில்வதைத் தடுத்து நிறுத்தி விடுவேன்"**

என்று குறிப்பிட்டார்.

தாய்மொழிகள் விருப்பத்திற்கு விடப்பட்டுள்ளமையால் தமிழகத்தில் பெற்றோரும், மாணவரும் விரும்பினால் கூடப் பதினொரு `விழுக்காட்டிற்கு மேல் இடமில்லை. இந்தியைப் பொறுத்தவரை சற்றுக் கூடுதல் என்றாலும், தாய்மொழிகள் கட்டாயப் பயிற்று மொழிகளாக்கப்பட்டிருந்தால் நூறு விழுக்காட்டினரும் தாய் மொழியில் பயில வாய்ப்பு ஏற்படும்.

எனவே, தாய்மொழிகள் விருப்பத்திற்கு விடப்பட்டுள்ள நிலை முக்கியத் தடையாக உள்ளது. அவை கட்டாயமாக்கப்படும் பொழுது இத்தடைகள் தானே அகன்று விடும்.

## சிக்கல்-9 : போதுமான பாட நூல்களின்மை

உயர் கல்வியைத் தமிழில் புகட்டுவதற்குப் போதிய நூல்கள் இல்லை என்ற குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. ஆங்கிலத்தில் மட்டும் அந்நூல்கள் எப்படி வெளியாகின்றன என்ற உண்மையை விளங்கிக் கொண்டால், அதே அணுகுமுறையைப் பின்பற்றித் தமிழையும், தமிழ் போன்ற பிற இந்திய மொழிகளையும் வளப்படுத்த முடியும். கல்வித் துறைகள் எல்லாவற்றிலும் பயிற்று மொழியாக ஆங்கிலம் இருந்து வருவதால் பாடநூல்கள் அம்மொழியில் வெளியிடப் பெறுகின்றன. பயிற்று மொழிகளாக இந்திய மொழிகள் இடம் பெற்றிருந்தால் (ஆங்கிலத்தைப் போல எல்லா நிலைகளிலும்) இந்திய மொழிகளில் நூல்கள் பலவாகப் பெருகியிருக்கும். புத்தகமின்மை என்ற பேச்சுக்கே இடமில்லாமல் செய்திருக்கும். தமிழகத்தில் தமிழ் மட்டுமே பயிற்று மொழி என்ற நிலை வருமானால், தமிழில் பல்துறை நூல்கள் பெருகி விடும். தற்பொழுது சில அரசுக் கல்லூரிகளில் விரும்புவோருக்கு மட்டும்

www.tamilarangam.net


தமிழ் வழியில் பயில வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குறைந்த வாய்ப்பில் வரலாறு, பொருளாதாரம், புவியியல், சமூகவியல் போன்ற துறைகளுக்கான பாடநூல்கள் பல வெளி வந்துள்ளமை ஈண்டு நோக்கத் தக்கது.

ஒவ்வொரு துறைக்குமான எல்லா நூல்களும் அச்சாகி வந்த பின்பு தான் அம்மொழி பயிற்று மொழியாக்கப்பட வேண்டு மென்றால், அது இயலாத செயலாகும். உலகில் எந்த மொழியும் அப்படி ஒரு வரலாற்றைப் பெறவில்லை. பாடம் வைப்பதும், நூல்கள் எழுதுவதும், பதிப்பிப்பதும், இணைந்த செயல்கள் குறிப்பிட்ட ஆண்டு முதல் எல்லாத் துறைகளிலும் தமிழ் மட்டுமே பயிற்று மொழி என்று ஆணை பிறப்பித்து விட்டால் கற்றவர்களும், பதிப்பாளர்களும் வேண்டும் நூல்களை நம்பிக்கையோடும், துணிவோடும் வெளியிடுவர். இலங்கையில் மருத்துவம், பொறியியல் எல்லாம் தமிழ் வழிக் கற்பிக்கப்படுகின்றன. தேவையான நூல்கள் வெளியிடப் பெறுவதை இங்கு எண்ணிப் பார்க்க வேண்டும்.

முன்பு உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் வழிக் கல்வி அமலாக்கப்பட்ட பொழுது புத்தகங்களே இல்லை. ஆனால், திட்டம் நடைமுறைக்கு வந்தபின் வெளியீட்டாளர்கள் தேவையான நூல்களை வெளியிட்டுப் புத்தகமில்லாக் குறையை நீக்கிவிட்டனர். அவ்வப்பொழுது தலைகாட்டிய தேசிய மொழி உணர்ச்சியின் காரணமாக ஏற்கெனவே (தமிழ், இந்தி, குசராத்தி, மராத்தி, வங்காளி) போன்ற மொழிகளில் பல்துறை நூல்கள் வெளிவந்துள்ளன. தாய் மொழியே பயிற்று மொழி என்று வந்துவிட்டால், தேவையான புத்தகங்களை வெளியீட்டாளர்கள் வெளியிடுவர். அரசு ஒரு பாடத் திட்டக் குழுவை அமைத்து, மதிப்பீடு செய்து சான்று வழங்கினால், தனியார் துறை வெளியீட்டகங்கள் எல்லா நூல்களையும் தாய் மொழியில் தந்து விடும்.

எனவே, தமிழில் புத்தகமில்லாக் குறையைப் போக்குவதற்குத் தமிழைக் கட்டாயப் பயிற்று மொழியாக்குவதே சீரிய வழியாகும். இதே கருத்தைத் தாகூர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "வங்காளி மொழியில் உயர்தரக் கல்வி கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அந்த மொழியில் பாடப் புத்தகங்கள் இல்லையே என்று கேட்கிறார்கள். அந்த மொழியில் பாடப் புத்தகங்கள் இல்லையென்பதை நான் அறிவேன். ஆனால் அந்த மொழியில் உயர் கல்வி கற்பிக்கத் தொடங்காவிட்டால் பாடப் புத்தகங்கள் எங்கிருந்து வரும்? அவை ரசங்களைக் கருதி ரசிகர்களால் பயிர் செய்யப்படும் அலங்காரச் செடிகளல்லவே, கேவலம் பிராண பலத்தாலே பூமியை வந்து மேவுகின்ற களைப்பூண்டுகளுமல்லவே, உயர்தரக் கல்வி பாடப் புத்தகத்திற்காகக் காத்திருந்தால், தழைக்குப் பின் நான் தோன்றுவேன் என்று மரம் காத்திருக்கும். கரைக்குப் பின் நான் தோன்றுவேன் என்று நதி காத்திருக்கும். வங்காளி மொழியில் உயர்தரக் கல்விக்குப் பாடப் புத்தகங்களில்லை என்பது ஒரு குறையாயின் கல்விக்கு அம்மொழியை வாகனமாக்குதலே அக்குறையை நீக்கும் வழியாகும்."

## ஆங்கில நூல்களின் உதவியை நாடல்

கல்வித் துறையின் எல்லா மட்டங்களிலும் தமிழைப் பயிற்று மொழியாக்கும் போது சில தடைகள் எழுவது இயல்பு. அவற்றுள் போதுமான புத்தகமின்மையும் ஒரு தடைதான். தமிழ் வழியே எதனையும் கற்கப் புகும்போது அவர்களுக்கு என்றென்றும் எப்போதும் உதவ ஆங்கில நூல்களும், ஆராய்ச்சி நூல்களும்

www.tamilarangam.net


கோடிக்கணக்கில் காத்துக் கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் தமிழில் மொழி பெயர்த்தே தீர வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஒரு சில அடிப்படைத் தமிழ் நூல்கள் இருந்தால் போதுமானது. எனவே, தமிழ்வழிக் கல்விக்கான தேவையையும் ஏற்படுத்தித் திறமையையும் வளர்க்க வேண்டுமென்றால், ஆங்கிலப் பாடப் புத்தகங்களை வைத்துக் கொண்டே ஒரு தலைமுறையினர் தமிழில் கற்பிக்க வேண்டும். பொறியியல் முதலான எந்தக் கல்லூரியிலும் இந்த முறையைப் பின்பற்றினால் தான் தமிழை அறிவு மொழியாக்க முடியும்.

மேற்கு ஐரோப்பாவில் உள்ள பல நாடுகளில் மருத்துவக் கல்விக்கான பாடநூல்கள் தேவையான அளவு அவர்களின் தாய் மொழிகளில் இல்லை. இருப்பினும் ஆசிரியர்கள் செருமன், பிரஞ்சு, இத்தாலி, ஆங்கிலம் போன்ற பிறமொழி நூல்களைப் பயின்று அவரவர்களின் தாய்மொழியில் குறிப்புகள் எடுத்து மாணவர்களுக்கு அவரவர்களின் தாய்மொழியிலேயே கற்பிக்கின்றனர். மாணவர்களும், அப்பிறமொழி நூல்களைக் கற்றுக் கொள்வதற்கான மொழிப் பயிற்சி பெற்று அவற்றைப் படித்துக் கொள்கின்றனர். பயிற்று மொழி மட்டும் எப்பொழுதும் தாய் மொழியாகவே இருக்க வேண்டியதன் அவசியத்தை அவர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். இங்கும் கூடத் தமிழை எல்லா நிலைகளிலும் பயிற்று மொழியாக்கும் போது, ஆசிரியர்களும் மாணவர்களும் தேவையான ஆங்கில நூல்களின் உதவியை நாடிக் கொள்வதில் தவறொன்றுமில்லை.

## துறை மொழிகளைக் கற்றல்

உயர்கல்வி, ஆராய்ச்சிக் கல்வி போன்றவற்றிற்குத் தேவையான எல்லா நூல்களும் எந்த ஒரு மொழியிலும் இல்லை.

www.tamilarangam.net


இயற்பியல், வேதியியல், பொறியியல் முதலிய துறைகளுக்குரிய முன்னேற்றமான நிலைக்குத் தேவையான நூல்கள் மூன்று மொழிகளில் கிடைக்கும். ஆங்கிலம், செருமன், ருஷ்யன் ஆகிய மொழிகளில் புதுப்புது ஆய்வு நூல்களும், ஆய்விதழ்களும் கிடைக்கின்றன. புதிய மொழியில் முறைகளைப் பயன்படுத்தி இரண்டு ஆண்டுகளில் இரண்டு மொழிகளைக் கற்றுக்கொண்டு விட முடியும். முடியும் என்பதை விட முடிகிறது என்றே கூறுதல் வேண்டும். இதனை லுமும்பா பல்கலைக் கழகமும் (ருஷ்யா) மார்க்ஸ் பல்கலைக் கழகமும் (செருமன்) செயற்படுத்திக் காட்டியுள்ளன. ஓராண்டில், ருஷ்யா, செருமானிய மொழிகளில் பாடப்புத்தகம் படித்து, நூலின் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ளுமளவிற்கு மேற்குறித்த பல்கலைக் கழகங்கள் கற்பித்து வருகின்றன.

எனவே, உயர்கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு எந்த மொழியில் மிகுதியான நூற்கள் உள்ளனவோ, அவற்றைக் கற்பிக்க நமது நாட்டில் நான்கு அல்லது ஐந்து அயல் மொழிக் கல்வி நிறுவனங்களை அமைத்து ஆராய்ச்சி மாணவர்களை ஓராண்டு அங்குப் பயில அனுப்பலாம். ஆகவே, எல்லா அயல் மொழி நூல்களையும் தமிழில் மொழி பெயர்க்க வேண்டிய தேவையில்லை. மேலும், ஆராய்ச்சிக் கல்வியைத் தொடருபவர்கள் மிகக் குறைந்த தொகையினர். அவர்களே முயன்று பிற மொழிகளைக் கற்று, அம்மொழிகளில் உள்ள சான்றுகளைப் பயன்படுத்தலாம்.

## நூலக மொழியைப் பயன்படுத்துதல்

மேலை நாடுகளில் கல்வியில் உள்ள மொழிச் சிக்கலை நூலக மொழி மூலம் தீர்த்துக் கொள்கின்றனர். சான்றாகச்

www.tamilarangam.net


செருமானிய மொழியில் உள்ள இயற்பியல் நூல்களையெல்லாம் கற்க வேண்டுமாயின், இந்த நூல்களைக் கற்றுக் கொள்வதற்கான குறைந்த அளவு செருமானிய மொழியறிவே இயற்பியலுக்கான செருமானிய நூலக மொழியாகும். இவ்வாறே, பொறியியல் செருமானிய மொழி, வேதியியல் செருமானிய மொழி, எனச் செருமானிய மொழி பல நூலக மொழிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. எந்தப் பாடத்தில் அல்லது எந்தத் துறையில் மேற்படிப்பைத் தொடர வேண்டுமோ அதற்குரிய நூலக மொழியை மட்டும் பயின்றால் போதுமானது. இப்படி ஒரு துறைக்கான நூலக மொழிப் பயிற்சியை மேலை நாடுகளில் பத்துத் திங்களுக்குள்ளாகக் கொடுத்து விடுகின்றனர். இவ்வழியைப் பின்பற்றினால் உயர் கல்விக்குரிய பாட நூல்கள் தமிழில் இல்லையென்ற குற்றச் சாட்டிற்கே இடமில்லை. உலகில் உள்ள எந்தவொரு மொழியிலும் (ஆங்கிலம் உட்பட) எல்லா நூல்களும் இல்லையென்பதை உணர வேண்டும்.

## நிலையான பாட புத்தகக் குழுக்கள்

தமிழைப் பொறுத்தவரையில் கல்வியகப் புத்தகங்களான, பாடநூல் (Text book) பார்வை நூல் (Reference Book) ஆய்வு நூல் இதனை இலங்கை அரசாங்கத்தின் வெற்றியோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அங்கு உயர்கல்வி முழுவதும் தேசிய மொழிகளான சிங்களத்திலும், தமிழிலும் வழங்கப் பெறுகிறது. அதற்குத் தேவையான நூல்கள் தமிழிலும், சிங்களத்திலும் தயாரிக்கப்படுகின்றன. நிலையான எழுத்தாளர் குழுக்கள் பல பாடப் புத்தகத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளன. இது போன்ற நிலையான பாட புத்தகத் தயாரிப்புக் குழுக்கள் பலவற்றை நிலையாக இடம் பெறச் செய்து தமிழில் பாட புத்தக வெளியீட்டைப் பெருக்கலாம்.

## பாடநூல், பார்வை நூல் இயக்ககம்

தமிழிலுள்ள பார்வை நூல் சிக்கலைத் தீர்ப்பதற்குப் பின்வரும் நெறிமுறையைப் பின்பற்றலாம். ஒவ்வொரு துறையிலும் தமிழில் ஆர்வமுடைய துறை வல்லுநர்கள் கொண்ட ஒரு சிறுகுழு அவ்வத் துறைகளில் வளர்ந்துள்ள மொழிகளிலிருந்து தேவையான நூல்களைத் தெரிவு செய்து தமிழில் மொழி பெயர்க்கப் பரிந்துரை செய்ய வேண்டும். இதற்கு ஒவ்வொரு குழு உறுப்பினருக்கும் அவருடைய துறையிலும், வேற்று மொழியொன்றிலும் உயர்ந்த பயிற்சி இருக்க வேண்டும். இவர்கள் பரிந்துரை செய்த நூல்கள் அவ்வத் துறைகளில் வல்லுநர்களாகவும், தமிழில் பயிற்சி யுடையவர்களாகவுமுள்ள மொழி பெயர்ப்பாளர்களால் தமிழில் மொழி பெயர்க்கச் செய்ய வேண்டும். இவ்வாறு பல்துறை மொழி பெயர்ப்புக்களைச் செய்யும் பாட நூல், பார்வை நூல் இயக்ககம் அமைக்கப்பட வேண்டும். இது போன்ற இயக்ககம் கருநாடகப் பல்கலைக் கழகத்தில் உள்ளது. இவ்வழியினைப் பின்பற்றிக் கல்வி பயிலும் மாணவர்களுக்குத் தேவையான எல்லா வகை நூல்களையும் துறையிலும், வேற்று மொழியிலும், தமிழிலும் வல்லவர் துணை கொண்டு வெளியிட இயலும்.

உணர்ச்சி வெளியீட்டுக்குத் தேவையான மொழி வளம் வேறு; அறிவு விளக்கத்திற்குத் தேவையான மொழி வளம் வேறு; இலக்கியப் படைப்பில் நாடகத் துறை தவிர மற்ற துறைகளில் தமிழ் உலக மொழிகளில் எதற்கும் குன்றாத அளவு சொல்வளம் பெற்று உயர்ந்து உள்ளது. அறிவு விளக்கத்தில் தத்துவத் துறையில் தமிழ் சிறந்த கருவியாக விளங்கி வந்த போதிலும் தற்கால அறிவியல்களின் வெளியீட்டில் மிகவும் பின் தங்கி உள்ளது என்பது உண்மையாகும். இத்தேவையை நிறைவு செய்யப் பின்வரும் நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

www.tamilarangam.net



1. தமிழில் போதுமான புத்தகமின்மைக்கு அது முழு அளவில் பயிற்று மொழியாக இடம் பெறாததே காரணம் ஆகும். எனவே, தமிழில் பாட நூல்களைப் பெருக்க வேண்டுமாயின், அது கல்வித் துறையின் எல்லா மட்டங்களிலும் பயிற்று மொழியாக இடம் பெற வேண்டும். தமிழில் தேவையான பாடநூல்கள் உருவாகும் வரை தமிழ் மட்டுமே தமிழகக் கல்வி நிறுவனங்களில் பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று தமிழக அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும்.

2. தொடக்கத்தில் ஒரு தலைமுறையினர் ஆங்கிலப் பாட புத்தகங்களை வைத்துக் கொண்டு மாணவர்களுக்குத் தமிழில் பாடம் கற்பிக்க வேண்டும். இவ்வாறு கற்று வெளி வரும் மாணவர்கள் பின்னர்த் தமிழில் பாட நூல்களை வெளியிடுவதற்கான தகுதியும், பயிற்சியும் பெற்றுத் தமிழில் பாட நூல்களை வெளியிடுவர்.

3. மாணவர்களுக்குத் துறை மொழிகளைக் கற்பிக்க ஏற்பாடு செய்வதன் மூலம் புத்தகமில்லாக் குறையைப் போக்க முடியும். மைய மாநில அரசுகளின் உதவியுடன் ஒவ்வொரு மாநிலத்திலும் நான்கு ஐந்து அயல்மொழிக் கல்வி நிறுவனங்கள் அமைக்கப்பட வேண்டும். குறைந்த காலங்களில் அயல் மொழியொன்றைக் கற்று, அதன் வழித் துறையறிவை வளர்க்க முடியுமென்பதால் புத்தகமின்மை என்ற சிக்கலுக்கு இடமில்லை.

4. அவரவர்கள் விரும்பும் மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சிக் கல்விக்கு ஏற்ப அவ்வத்துறை சார்ந்த நூலக மொழிகளைக் கற்றுக் கொள்வதன் மூலம் புத்தகமின்மைக்குத் தீர்வு காணலாம். எனவே, தமிழகத்தில் பல்வேறு நூலக

www.tamilarangam.net


மொழிகளைக் குறைந்த காலத்தில் கற்கும்படியாகச் செய்ய வேண்டும்.

5. பாட நூல், பார்வை நூல் இயக்ககம் அமைக்கப்பட்டு, நிலையான பாட புத்தகத் தயாரிப்புக் குழுக்களை இடம் பெறச் செய்து, மிக மிகத் தேவையான நூல்களை மொழி பெயர்க்கச் செய்வதன் மூலம், புத்தகமின்மை என்ற சிக்கலுக்குத் தீர்வு காணலாம்.

## சிக்கல்-10 : போதுமான கலைச் சொற்களின்மை

தாய்மொழிகளைக் கல்வித் துறைகளின் எல்லா நிலைகளிலும் பயிற்று மொழிகளாக்கும் திட்டத்தில் ஏற்படும் சிக்கல்களில் போதுமான கலைச்சொற்கள் இல்லாமையும் ஒரு சிக்கலாகும்.

ஐரோப்பிய மொழிகள் இலத்தீன் மொழியையும் கிரேக்க மொழியையும் பயன்படுத்துவது போல இன்று இந்தியும், தமிழ் தவிர்த்த மற்றைய இந்திய மொழிகளும் வடமொழி வேர்ச் சொற்களைப் பயன்படுத்திப் பொதுவான கலைச் சொற்களை (Technical Terms) உருவாக்கி வருகின்றன. இம்மொழிகள் பன்னாட்டுக் கலைச் சொற்களை ஏற்கவும் தயங்குவதில்லை. இந்தியில் நாளொரு துறையும் பொழுதொரு நூலுமாக வளர்ச்சி இடம் பெற்று வருகிறது. இந்தியில் ஏற்படும் வளர்ச்சியை அப்படியே பயன்படுத்தும் இயற்கை கொண்டதாக மற்ற இந்திய மொழிகளும், பயன்படுத்தும் அணுகுமுறை கொண்டவர்களாக மற்ற மொழிக் குடும்பத்தினரும் இருக்கின்றனர்.

தமிழிலும் பலரால், பல கால கட்டங்களில், பல சூழ்நிலை களில் கலைச் சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அறிவியல் துறைகள், மற்ற நவீன கல்வியறிவுத் துறைகள் அனைத்தும் தமிழில்

www.tamilarangam.net



இடம் பெற வேண்டும் என்ற முயற்சிக்கு நீண்ட வரலாறு உண்டு. எனினும் கடந்த ஐம்பது ஆண்டுகளில் இம்முயற்சி தீவிரம் பெற்றுள்ளது. தமிழில் இதுவரை 200 கலைச் சொற் தொகுப்புகள் வெளி வந்திருப்பதாகவும், 2,00,000 கலைச் சொற்கள் உருவாக்கப் பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

கலைச் சொல் சிக்கல் கால வளர்ச்சியில் சரிப்படுத்தக் கூடியதே! தாய்மொழிகள் முழு அளவில் கல்வித் துறையில் பயன்படுத்தப்படும் பொழுது இச்சிக்கல் தானாகவே நீங்கி விடும்.

துருக்கியில் அராபிய, பாரசீக மொழிகளை நீக்கித் துருக்கி மொழியைப் பயிற்று மொழியாகக் கொள்ளுவதற்குக் கலைச் சொற்கள் பெரும் சிக்கலாக இருந்தன. துருக்கியால் எல்லாம் முடியும் என்பதற்கான ஏற்பாடுகள் முன் கூட்டியே திட்டமிடப் பட்டுச் செயற்படுத்தப்பட்டன. துருக்கி நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் வழக்கிலுள்ள சொற்களைத் திரட்டிச் சேர்க்கும் நாடு தழுவிய பெரிய திட்டம் ஒன்று அரசால் உருவாக்கப்பட்டது. மாநிலந்தோறும், மாவட்டந்தோறும், சொற் சேகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன. மொழி ஆர்வலர்களும், பள்ளி ஆசிரியர்களும் இந்தப் பணிக்கு அமர்த்தப் பெற்றனர். ஒவ்வொரு சொல்லும் எந்த சூழ்நிலையில் எந்தப் பொருளில் வழங்கப்படுகிறது என்ற விபரங்களும் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட சொற்கள் அவற்றின் வரலாற்றுக் குறிப்புகளுடன் தலைமை நிலையத்திற்கு அனுப்பப்பட்டன. இங்கே அவை தரம் பிரிக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டன. இவ்வாறே, பழைய இலக்கியங்களிலிருந்தும் அகராதிகளிலிருந்தும் பல்வேறு துறைச் சொற்கள் திரட்டப் பெற்றன. பின்னர் இவையனைத்தையும் துறை வாரியாகப் பாகுபடுத்தி அன்றாடச் சொல் முதல் கலை நுட்பச் சொல் வரை வெவ்வேறு பிரிவுகளாக வெளியிட்டனர்.

www.tamilarangam.net



வெளியிடப் பெற்ற இக்கலைச் சொற்களுக்கு எதிர்ப்பும் ஆதரவும் சம அளவில் இருந்தன. "தனித் துருக்கி" என்பது குறுகிய போக்கு என்றனர் சிலர். இக்கலைச் சொற்களைத் தொகுத்தவர்கள், ஜெர்மானியரும், ஜப்பானியரும் தத்தம் மொழிகளிலேயே கலைச் சொற்களை உருவாக்கி உள்ளனர். அதனால் அவர்கள் வளர்ச்சி தடைப்படவில்லை என்ற பதிலுரை தந்தனர்.

இதற்குப் பின்னர் தோன்றிய புதியதோர் இயக்கம், தனித் துருக்கியை முழுவதும், ஏற்காமலும் பழைய துருக்கியை முழுவதும் ஏற்றுக் கொள்ளாமலும், நீண்ட கால்லப் பழக்கத்தில் மக்களிடையே துருக்கி மொழிச் சாயலுடன் நிலைபெற்றுச் சாதாரணமாக வழங்கி வரும் பிறமொழிச் சொற்களை ஏற்றுக் கொண்டு, மக்களுக்கு எளிதாக விளங்கக் கூடிய வகையில், அதிக கலப்பற்ற துருக்கியில் எல்லாம் நடைபெற வேண்டும் என்ற கொள்கையை முன் வைத்தது. இக்கொள்கையினைப் பெரும்பாலோர் ஏற்றுக் கொண்டு நடைமுறை வாழ்விலும் கடைப்பிடித்தனர். இதனால் துருக்கியில் கலைச் சொல் இல்லாத சிக்கல் தீர்க்கப்பட்டு, பயிற்று மொழியாக முழு அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இது போன்ற நடைமுறைகளை இந்திய மொழிகளில் பின்பற்றுவதன் மூலம் கலைச் சொல் சிக்கலை நீக்கலாம்.

## சிக்கல்-11 : ஆங்கிலம் மட்டுமே உலகப் பொதுமொழி

எல்லா வகையான நூல்களும் ஆங்கிலத்தில் உண்டு. ஆங்கிலமே உலக நாடுகள் அனைத்திலும் ஆட்சி மொழி, கல்வித் துறைப் பயிற்று மொழி, ஆங்கிலமே உலகமொழி. எனவே ஆங்கிலம் வழிப் பயின்றால் தான் உலக அரங்கில் மதிப்பு ஏற்பட முடியும் என்ற எண்ணங்கள் தமிழ் வழிக் கல்விக்குத் தடைகளாக இருக்கின்றன.

www.tamilarangam.net


உலக நாடுகளில் சுமார் நானூறு கோடி மக்கள் வாழ்கின்றனர். அவர்களுள் ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இங்கிலாந்து, அமெரிக்கா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா(வில் ஒரு பகுதி) ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். உலகின் மொத்த மக்கள் தொகையில் ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்டவர்கள் 10 விழுக்காட்டினர் ஆவார்.

ஆங்கிலம் வளமான மொழி என்பதால் உலக நாடுகள் பலவற்றிலும் செல்வாக்குப் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. உண்மையில் ஆங்கிலேயர் எந்தெந்த நாடுகளையெல்லாம் அடிமைப்படுத்தி ஆட்சி செலுத்தினார்களோ அந்தந்த நாடுகளில் தான் ஆங்கிலம் ஆட்சி மொழியாகவும் பயிற்றுமொழியாகவும் இடம் பெற்றது. தாங்கள் அடிமை கொண்ட நாடுகளில், அந்நாட்டு மொழிகளை அடிமைப்படுத்தி தங்கள் மொழிக்குச் செல்வாக்குத் தேடினர். இவ்வாறே, புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் பிரஞ்சு மொழியும், கோவா, டையூ-டமான் பகுதிகளில் போர்ச்சுக்கீசிய மொழியும், ஆட்சி மொழியாகவும் பயிற்று மொழியாகவும் ஆக்கப்பட்டன. எனவே, ஆங்கிலம் செல்வாக்குப் பெற்றதற்கு அம்மொழியின் வளம் காரணமில்லை. அவர்களின் கீழ் வாழ நேரிட்ட அடிமை வாழ்வே காரணமாகும்.

ஜெர்மனி, பிரான்சு, இத்தாலி, ருஷ்யா, ஜப்பான் முதலிய நாடுகள் அறிவுத் துறைகளில் இவ்வளவு முன்னேற்றம் கண்டிருக்கவும் முடியாது. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் புத்தகங்களின் மூலம் வகுப்பறையில் பயிற்றுவிக்கப்படும் கல்வி முறை தமிழகத்தில் தோன்றியது. ஒரு வேளை இக்காலத்தில் இந்தியா விடுதலை பெற்ற நாடாக இருந்திருக்குமாயின் இந்திய மொழிகளே கல்வித்துறையின் பயிற்று மொழிகளாக இருந்திருத்தல் கூடும். இந்த உண்மையை உணராத

www.tamilarangam.net



சிலர், ஆங்கிலமே அறிவு மொழி என்றும் ஆங்கிலம் வழித் தான் உயர் கல்வியைத் தர இயலும் என்றும் கருதுகின்றனர்.

ஆங்கிலம் என்பது ஒரு நாட்டு மொழி. அம்மொழிப் பயிற்சியாலேயே கல்வியறிவுண்டு என்று கருதுவது அறியாமை. கல்வியறிவுக்கு "இம்மொழி" "அம்மொழி" எனுங் கட்டுப்பாடில்லை. ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய நாட்டிலுள்ளோர் ஆங்கிலம் படித்தா கல்வியறிவு பெறுகிறார்கள். எனவே, ஆங்கிலம் மட்டுமே அறிவு மொழி என்ற கருத்து பிழையுடையதாகும்.

தமிழிலேயே அறிவியல் முதலிய பாடங்களைப் படிப்பதால் தமிழ்நாட்டு அறிஞர்க்கு உலக அரங்கிலே மதிப்பு ஏற்பட முடியாது என்ற ஒரு தடை எழுவதுண்டு. ஆங்கிலத்தில் படித்தால் தான் வெளிநாடுகளில் மதிப்பு ஏற்படும் என்பது வெறும் போலித் தடை. "உண்மையில் வெளிநாடுகளுக்கு நாம் செல்லும் பொழுது நமக்குத் துணை புரிவது ஆங்கில மொழியே தவிர ஆங்கிலத்தில் படித்த அறிவியல் அன்று. மொழி வேறு, மொழி வாயிலாகப் பெறும் அறிவு வேறு என்று பிரித்து அறியமாட்டாதவர்கள் தாம் ஆங்கிலத்தில் படிப்பதால் தான் உலக மதிப்பு ஏற்படுகிறது என்று தடை எழுப்புவார்கள். •அயல் நாடுகளுக்குச் செல்லும் பொழுது ஆங்கிலம் துணையாக இருக்கிறது என்பது உண்மை. ஆனால், பாடத்தில் பெற்ற அறிவு ஆங்கில வழி வந்ததா, அல்லது தமிழ் வழி வந்ததா, என்று யாரும் கேட்பதில்லை. பாடத்தில் நாம் பெற்ற அறிவை நாம் கற்ற ஆங்கில அறிவைக் கொண்டு விளக்கினால் போதுமானது. அவ்வாறு இருக்கும் போது உலக அரங்கில் மதிப்பு இல்லாது போய் விடும் என்பது உண்மையல்ல. இத்தடைக்குரிய சிக்கலாக இருப்பது பயிற்றுமொழி பற்றிய சிக்கலன்று. பயிற்று மொழிக்கும் மொழிப் பாடத்திற்குமுள்ள வேறுபாட்டை உணராததால் வரும் சிக்கலாகும். தமிழ் பயிற்று மொழியாக இருக்கும் போது,

www.tamilarangam.net



ஆங்கிலம் கட்டாய இரண்டாம் மொழியாக இருந்து வருகிறது. ஆங்கிலத்தில் நல்ல பயிற்சி வேண்டுமென்பதற்காகத் தான் தற்பொழுது தொடக்கக் கல்வியில், முதல் வகுப்பிலிருந்தே ஒரு பாடமாகப் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. தமிழில் கற்ற அறிவுத் துறைகளை, வெளிநாடுகளுக்குச் செல்லும்போது, இரண்டாம் மொழியாகக் கற்ற ஆங்கில மொழியறிவின் மூலம் வெளிப்படுத்த முடியும். அவ்வாறு வெளிப்படுத்த முடியவில்லையாயின் மாற்ற வேண்டியது பயிற்று மொழியை அன்று; வளப்படுத்த வேண்டியது இரண்டாம் மொழியாகிய ஆங்கிலத் திறனைத்தான் என்பதை இத்தடையெழுப்புவோர் அறிய வேண்டும்."

## சிக்கல்-12 : ஆங்கிலமே அறிவியல் கல்விக்கு உகந்தது

நடப்பியல் உலகம் அறிவியல் யுகம் என்று சொல்லப்படுகிறது. இந்த அறிவியலை ஆங்கிலம் மூலம் மட்டுமே பெற இயலும். அவ்வாறு பெறுவதே மதிப்பு என்னும் மனநிலை தாய்மொழி வழிக் கல்விக்குத் தடையாக இருக்கிறது. உண்மையில் நம் நாட்டு அறிவாளிகள் அறிவியல் அறிவிற்குத் தான் மதிப்பளிக்கின்றனர் என்றால் அதை எம்மொழி மூலம் பயின்றால் என்ன? தெரியாத அறிவியல் துறையைப் புரியாத ஆங்கில மொழியில் பயில்வதை விட நன்கு புரிந்துள்ள தாய்மொழி மூலம் கற்பதனால் அறிவியல் கல்வி வளமுடையதாக அமையுமன்றோ. ஏதாவது ஒரு மொழியைக் கருவியாக அல்லது மீடியமாகக் கொண்டு கலைகளைப் பயின்று பட்டம் பெறுவது தான் கல்வி முறையாகும். இதற்கு மாறாக இந்தியாவில் கலையை மீடியமாகக் கொண்டு ஆங்கிலம் பயிற்றுவிக்கப்படுகிறது. மருத்துவம் படிக்கும் மாணவர் தனக்குத் தெரியாத அந்தத் துறையைப் புரியாத ஆங்கிலமொழி மூலம் பயில்வதனால் அப்போது அவர் பயில்வது மருத்துவம் மட்டுமன்று

www.tamilarangam.net



ஆங்கிலமும்தான், அதாவது மொழியை மீடியமாகக் கொண்டு கலைகளைப் பயில்வதற்கு மாறாக, கலையை மீடியமாகக் கொண்டு மொழியைப் பயில்கின்றார். நம் நாட்டில் உயர் கல்வி கற்கும் அனைவரின் நிலையும் இது தான்.

ஆங்கிலத்தை ஒரு மொழியாகக் கற்பது என்பது வேறு; பயிற்று மொழியாகப் பயன்படுத்துவது என்பது வேறு. இயற்கை அறிவியல் மற்றும் சமூக அறிவியல் பாடங்களை ஆங்கிலம் வழியாகப் பயிலும் போது முதலில் அம்மொழியே ஒரு தடையாக அமைந்துவிடுகிறது. இது மாணவர்களின் அறிவு வளர்ச்சியைத் தடுக்கிறது. ஆங்கிலம் வழியாகப் பயிலும் மாணவர்கள் பாடங்களைப் புரிந்து கொள்வதைவிட மனப்பாடம் செய்வதிலேயே காலம் கடத்துகின்றனர். இதை இன்று இந்தியாவில் அறிவியல் அறிஞர்கள் பெரும்பான்மையினராக இருந்தும் அறிவியல்சார் நூல்களும், கட்டுரைகளும், இதழ்களும் பெருமளவில் வெளிவராதிருக்கும் செய்தி உறுதிப்படுத்தும்.

ஆங்கிலத்திலேயே அறிவியல் கல்வி கற்றதனால் அறிவு வளர முடியாத நிலைமையில் பெரும்பாலானோருக்கு அறிவியல் கட்டுரை எழுத இயலவில்லை. இவர்களின் கல்விக் காலத்தில் மிகுதியான நேரம் மொழிப் பயிற்சியில் செலவிடப்பட்டு அறிவு வளர்ச்சியில் நாட்டம் குறைந்திருப்பது தான். முழுமையாக ஆங்கிலம் கற்க முடியாமல் உண்மையில் அறிவியலில் தேர்ச்சி பெறாமல் போவதால் நம் நாட்டில் அறிவியல் நன்கு வளரவில்லை. பயிலும் பொருள் பற்றி நன்கு உணர முடியாமையால் கட்டுரை நூல்கள் வெளியிட இயலுவதில்லை. ஒரு வேளை அறிவியல் ஆய்வுக் கட்டுரைகள் சில வெளிவந்தாலும் இவற்றை மற்றவர்கள் மேற்கோளாகக் கூடக் காட்டுவதில்லை. அந்த அளவிற்கு அறிவியல் தரம் குறைந்ததாக உள்ளது என்று குறை கூறப்படுகிறது.

www.tamilarangam.net



அறிவியல் கல்வியின் தேக்க நிலைக்கு ஆங்கிலம் பயிற்று மொழியாகத் தொடரப்படுவதே காரணம் என்பதை அறிவியல் அறிஞர்களே உறுதி செய்துள்ளனர்.

> **"ஆங்கிலம் என்பது ஒரு நாட்டு மொழி. அம்மொழி பயிற்சியாலேயே கல்வியறிவு உண்டு என்று கருதுவது அறியாமை. கல்வியறிவை எம்மொழி வாயிலாகவும் அறியலாம். கல்வியறிவிற்கு இம்மொழி அம்மொழி என்னும் கட்டுப்பாடில்லை."**

தாய்மொழியில் அறிவியல் கற்க முடியாது என்று ஒரு மாணவனுக்குக் கூறி அதனால் ஆங்கிலம் கற்க வேண்டும் எனும் போது அவன் மனத்தில் தாய்மொழி பற்றிய இழிவான எண்ணமும், ஆங்கிலம் பற்றிய உயர்வான எண்ணமும் புகுத்தப்படுகின்றன. அதனால் அவன் தாய்மொழியும் அதைப் பேசுவோரும் தாழ்ந்தவர். ஆங்கிலமும் ஆங்கிலேயரும் உயர்ந்தவர் என்று மயங்குகின்றான். இது அவனுக்குத் தாழ்வு மனப்பான்மையை உருவாக்கிப் பின் அவனைத் தாழ்ந்தவனாகவே ஆக்கி விடுகிறது. தாய் மொழியால் அறிவியல் வளர்க்க முடியாது என்று கூறுவோர் நமது வளர்ச்சிக்குத் தடையாய் இருப்போரே ஆவர். எனவே, ஆங்கிலமே அறிவியல் துறைகளுக்கு உகந்தது என்ற தடை, தாய்மொழி வழிக் கல்விக்கு முன்னர் எழுப்பப்படும் போலித் தடையாகும்.

## சிக்கல்-13 : சொல்லுக்கும் செயலுக்குமான இடைவெளி

பயிற்று மொழிச் சிக்கலைப் பொறுத்தவரை இன்றைய சூழ்நிலையில் கல்வியாளர்கள் அணுகுமுறை வேறு; பெற்றோரின் அணுகுமுறை வேறு; கல்வியாளர்களே தங்கள் துறை வல்லுநர் என்ற நிலையில் கூறுவது ஒன்றாகவும், பெற்றோர் என்ற நிலையில்

www.tamilarangam.net



செய்வது ஒன்றாகவும் உள்ளது. இவ்வாறு கல்வியாளர்களின் சொல் வேறாகவும், செயல் வேறாகவும் இருப்பது ஏனையோரையும் ஆங்கில வழிக் கல்வியில் நாட்டம் கொள்ளச் செய்கிறது.

தமது மக்களின் கல்வி பற்றிச் சிந்திக்கும் பெற்றோரின் கவலை சமுதாயச் சிக்கல் பற்றியதன்று; பரந்த அளவில், நீண்ட கால அணுகுமுறையில் சிந்தனையை வளர்ப்பது பற்றியதன்று படைப்பாற்றலை வளர்ப்பது பற்றியதன்று; தமது மக்களின் நாளைய கல்வி வாய்ப்பைப் பற்றியது; வேலை வாய்ப்பைப் பற்றியது. தனி மனிதன் தியாகி அல்லன் அவன் சந்தர்ப்பவாதி. தாய்மொழி வழிப் பயிலுவது நாளைய உயர்கல்வி வாய்ப்பிற்கும், மாநில அளவில், தேசிய அளவில் வேலை வாய்ப்பிற்கும் ஆங்கிலம் வழிப் பயிலுவதற்கு ஈடானது என்ற நிலையை ஒரு வழியில் இல்லாவிட்டாலும் இன்னொரு வழியில் தோற்றுவிக்கும் வரை கொள்கை வேறு நடைமுறை வேறு என்ற நிலையை மாற்றுவது எளிதன்று.

மேனிலைப் பள்ளிகளில் படித்த மாணவர்கள் நுழைவுத் தேர்வின் அடிப்படையில்தான் மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளுக்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். இதில் வெற்றி பெறுபவர்களில் ஆங்கிலம் வழிப் பயிலும் மாணவர்களே மிகப் பெரும்பான்மையினராக இருக்கின்றனர்.

மைய அரசின் சிறப்பான பணிகள் அனைத்திற்கும் தனியாகத் தேர்வு வைத்தே விண்ணப்பதாரர்களைப் பெறுகின்றனர். அவர்களிலும் ஆங்கிலம் வழிப் பயின்றவர்களே மிகுதியும் வெற்றி பெறுகின்றனர். அரசுத் துறைகளை விடத் தனியார் நிறுவனங்கள் தாம் நல்ல ஊதியத்துடன் பதவி கொடுக்கின்றன. அங்கும் ஆங்கிலம் வழிப் பயின்றவர்களுக்குத்தான் முன்னிடம்

www.tamilarangam.net



கிடைக்கிறது. மேலை நாடுகளுக்குக் கல்வி கற்கப் போவது மிகச்சிறு தொகையினரே என்றாலும், மேலை நாடுகளில் வேலை தேடுவது மேற்குடியின மக்களின் இலக்குகளில் ஒன்றாகி விட்டது. உண்மையில் நடுவணரசிலிருந்து மாநில அரசு வரை அரசின் கல்வி பொருளாதாரக் கொள்கைகளை விடுக்கும் அதிகாரிகள் அனைவரும் தொடக்கத்தில் இருந்தே தம் மக்களை மேலை நாட்டுக் கல்விக்கும் மேலை நாட்டு வேலை வாய்ப்பிற்கும் தான் தயார் செய்கின்றனர். இங்கும் ஆங்கிலம் வழிப் பயின்றவருக்குத் தான் வாய்ப்பு அதிகம்.

இன்று நமது பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்கப்படுவதை எண்ணிப் பார்த்தால், ஆங்கிலத்தை வெறும் பாடமாக மட்டுமே பயின்றவர் எவரும், அதைப் பேசவோ, எழுதவோ முழுமையாகப் பயன்படுத்தும் நிலையில் ஆங்கில அறிவு பெறுவது இல்லை. ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகப் பயன்படுத்தியவர்களில் கூடப் பலர். தவறில்லாது சில வரிகள் கூட ஆங்கிலத்தில் எழுத இயலாத சூழ்நிலை உள்ளது. இவ்வாறு கொள்கை வேறு நடைமுறை வேறு என்று இருப்பதற்கான காரணங்கள் பலவாகக் கூறப்படுகின்றன. உண்மையில் இச்சிக்கல் பயிற்று மொழி பற்றிய சிக்கலே அன்று. மொழிப் பாடம் பற்றிய சிக்கலாகும். இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பதிலும், கற்பிப்பதிலும் உள்ள சிக்கலாகும். தாய்மொழியில் கற்றதை ஆங்கிலத்தில் வெளிப்படுத்த இயலுவதில்லை என்ற காரணத்திற்காக ஆங்கிலத்தைத் தொடர்வதும் நிலைபெறச் செய்வதும் ஏமாற்று வேலையாகும். மேலை நாடுகளில் இரண்டாம் மொழியாக மட்டுமே ஆங்கிலத்தைப் பயின்றவர்களால் நன்றாகத் தம் கருத்துக்களை வெளியிட இயலுகிறது. இச்சிக்கலுக்கு மொழிப் பாடமாக ஆங்கிலம் கற்பிக்கப்படுவதைத் தரப்படுத்தினால் தீர்வு காணலாம்.

www.tamilarangam.net



## சிக்கல்-14 : உயர்ந்தோர் மாட்டு ஒழுகும் உலகம்

நகர்ப்புறக் காட்சியாக இருந்த ஆங்கிலப் பயிற்று மொழிப் பள்ளிகள், இன்று நாட்டுப்புறக் காட்சியாகவும் பரவுகின்றன. மேட்டுக் குடியினர் பயிலுமிடம் என்ற நிலை மாறி எல்லாத் தரப்புப் பெற்றோர்களும் இப்படிப்பட்ட பள்ளிகளின் முன் அணிவகுத்து நிற்கும் காட்சி இந்தியா முழுவதும் காணக் கூடியதாக உள்ளது. பெரும்பாலும் உயர்ந்த பதவியில் இருப்பவர்கள், செல்வர்கள், செல்வாக்குள்ளவர்கள் ஆகியோரின் குழந்தைகள் ஆங்கிலம் வழிப் பயிலுவதால், மற்றவர்களும், தங்கள் குழந்தைகளும் எட்டிப் பிடிக்க வேண்டிய ஒரு குறிக்கோளாக அதை எண்ணி அதற்கேற்பச் செயல்படுகின்றனர்.

இன்று ஆங்கிலம் வழிப் பயிற்றுவிக்கும் பள்ளிகள், கல்வி நிலையங்கள் கிராமங்களில் அதிகமாக இல்லை. ஆங்கிலம் வழிப் பயில்பவர்கள் நகர்களில் தான் பெரும்பான்மையினர். ஆங்கிலம் வழியாகப் பயிலத் தங்கள் மக்களுக்கு இடம் தேடுபவர்கள் கிராமத்தினர் அல்லர்; உழவர்களும் அல்லர். தாய்மொழி வழிக் கற்பதே சாலச் சிறந்தது. எனும் தத்துவமறியாத, அறிந்து கொள்ளும் பின்னணியல்லாத தற்குறிகள் அல்லர். படித்தவர்கள், பதவியில் இருப்பவர்கள், அரசியல் தலைவர்கள், அதிகாரிகள், சமுதாய செல்வாக்குப் பெற்றவர்கள் தாய்மொழி வழிக் கல்வியின் இன்றியமையாமையைப் பற்றி எழுதியும், பேசியும் வரும் தலைவர்கள், கல்வியாளர்கள் ஆகியோர் மக்கள் தாம் ஆங்கிலம் வழிப் பயில்பவர்களில் மிகப் பெரும்பான்மையினர்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல், உயர்ந்த ஒழுக்கம் என்பதை இந்தச் சமூகம் ஏற்றுள்ளது. உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு. ஆகையால் இந்தச் சமுதாயத்தின் மேல் மட்டத்தினர் செய்வதைப் பார்த்துப் பிறரும் கடன்பட்டாவது ஆயிரக்கணக்கில் பள்ளிப்

www.tamilarangam.net



பணம் கட்டி, சீருடை உடுத்தித் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலம் வழிப் பயிற்றுவிக்கும் கல்வி நிறுவனங்களுக்கு அனுப்புகின்றனர். ஆங்கிலம் வழிப் பயிலும் எண்ணம் இன்றைய சமுதாயத்தில் தேய்பிறைப் பருவத்தில் இல்லை. அது வளர்பிறைப் பருவத்தில் உள்ளது. அதற்குக் காரணமானவர்கள் ஏழை எளியவர் அல்லர்; படிக்காத மக்கள் அல்லர், படித்தவர்கள், பதவியிலுள்ளோர், செல்வர்கள், செல்வாக்குள்ளோர் தாம் இதற்குத் துணை நிற்கின்றனர். இந்தச் சிக்கல் இந்திய மொழிகள் அனைத்திற்கும் பொது. இந்தியைப் பொறுத்தவரை சிறு சிறு வேறுபாடுகள் இருக்கலாம். அவ்வேறுபாடுகளுக்கும் காரணங்கள் உண்டு. பொது நிலையில் இது நாடு தழுவிய சிக்கலாகும். இந்த நிலைமை மாற வேண்டும். இதற்கு உயர்ந்தோர் உண்மையறிந்து ஏனையோருக்கு வழிகாட்டுபவர்களாய்த் தாய்மொழியில் தம் மக்களைக் கல்வி பயிலச் செய்ய வேண்டும்.

## சிக்கல்-15 : தனித் தூய்மைச்சிக்கல்

தாய்மொழிகளில் தோன்றிய தனித்தூய்மை இயக்கங்களும் அவை பயிற்று மொழிகளாகச் செயற்படுவதற்குப் பெரும் தடையாக இருக்கின்றன. இந்தியில் "இரகுவீரர்" தோற்றுவித்த தனி இந்தி இயக்கமும் தமிழில் "மறைமலையடிகள்" தோற்றுவித்த தனித் தமிழ் இயக்கமும் மொழியில் தனித் தூய்மைப் பேணலை வலியுறுத்தின. இந்திக்குத் தேவையான சொற்கள் சமசுகிருதத்திலிருந்தே பெறப்பட வேண்டும் எனும் கொள்கையினை இந்தியில் தனித் தூய்மைக் குழுவினர் வலியுறுத்தினர். தமிழிலும் தமிழ் என்னும் பெயரால் பிற மொழிச் சொற்களை ஆள்வது அறியாமையும் அடிமைத் தனமும் ஆகும். தமிழ் என்பது தனித் தமிழே என்பது போன்ற கருத்துகள் வலியுறுத்தப்பட்டன. இந்தியில் தனித் தூய்மை இயக்கம் காலப்போக்கில் செல்வாக்கு இழந்தது.

www.tamilarangam.net



வெவ்வேறு மொழிகளில் நுணுக்கங்களை ஆராய்ந்தறியும் போது அவற்றில் உயர்ந்தவை, தாழ்ந்தவை என்று திட்டவட்டமாகக் கூறுவது கடினம். ஆனால் வரலாற்றில் மொழிகள் உயர்ந்தும், தாழ்ந்தும், அழிந்தும் போயிருக்கின்றன. வாழ்க்கையோடு ஒட்டாது விலகிப் போய் ஒரு மொழி மொழிக்காகவே சிலரின் திளைப்பிற்கு ஆளாகும் போது அது அழிந்து விடுகிறது. தமிழைப் பொறுத்த வரையில் அந்தந்தக் காலத் தேவைக்கு ஏற்பவே தன் வளர்ச்சிப் போக்கை மாற்றிக் கொண்டுள்ளது. சங்க காலத்தில் சமூக மொழிகளாக இருந்த தமிழ் பின்னர், சமய தத்துவ உண்மைகளைக் கூறவல்ல சமய மொழியாக மாறத் தவறவில்லை. வைதீக சமயமாகட்டும், அதனை எதிர்க்க எழுந்த சமண, புத்த சமயங்களாகட்டும், நீண்ட தொலைவிற்கு அப்பாலிருந்து வந்த கிறித்துவ, இசுலாம் சமயங்களாகட்டும், அவற்றிற்குத் தகத் தமிழ் ஈடு கொடுத்துத் தன் தனித் தன்மையை இழக்காமலும், அதே வேளை அவ்வச் சமய மொழியாகவும் விளங்கி வந்திருக்கிறது.

கடந்த ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழ்மொழி எந்த மாற்றத்திற்கும் ஆட்படாமல் சங்ககால வடிவிலேயே இன்றும் இருந்து வருவது போலவும், அதனைப் போற்றிப் பாதுகாத்தலே தங்களது தலையாய பணி என்றும் கருதும் சிலர், தமிழை முற்றாக மாற்றியமைத்து நவீன மொழியாக்க வேண்டும் என்கின்றனர். இருசாரார் நோக்கும் போக்கும் பிழையுடையனவாகும்.

உயர்கல்வி அறிவியல் துறைகள் தமிழுக்கு முற்றிலும் புதியன அல்ல. அறிவியல் தமிழுக்கு அடிப்படையான மொழியியல்களாகக் கருதப்படும் மொழி பெயர்ப்பு, ஒலி பெயர்ப்பு, சொல்லாக்கம், எழுத்துச் சீர்மை போன்றவற்றுக்கான அடித்தளம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழில் இருந்து வந்திருக்கிறது. இவற்றுக்கான விதிமுறைகள் குறித்துத் தொல்காப்பியம் விரிவாகப்

www.tamilarangam.net



பேசுகிறது. எனவே, தமிழ் வளர்ச்சிக்கு மொழி மாற்றம் நடப்பியல் உலகில் மிக மிகத் தேவையாகிறது. மாற்றத்தை ஏற்க மறுக்கும் மொழிப் பற்றாளர்கள், தூய்மைவாதிகள், இலக்கணிகள் ஆகியோர் உலக மொழிகளின் நோக்கையும் போக்கையும் தெரிந்து தமிழுக்கு வழிவிட வேண்டும். மொழி நாள்தோறும் வளரும் ஒன்று. தொடர்ந்து புதிய சொற்கள் உருவாகின்றன. பழைய சொற்கள் சில புதிய பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றன. இலக்கண மரபுகள் மாறுகின்றன. ஒரு மொழி வளரும் போது தொடர்ந்து இலக்கணமும் வளர வேண்டும். அப்பொழுதுதான் பொதுமக்கள், மாணவர் ஆகியோர், நடைமுறையில் இருக்கும் வழக்கில் எதை ஏற்பது எதை ஒதுக்குவது என்பதில் ஒரு வழிகாட்டியைக் காண முடியும். இன்று வரை தமிழில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், வளர்ச்சிகள், இன்றைய தேவைகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு தமிழ் மொழி வழக்கை நெறிப்படுத்தும் வகையில் "புதிய இலக்கணம்" எழுதப்பட வேண்டும். காலத்துக்கேற்ற கல்வி மொழியாக இடம் பெறச் செய்யத் தேவையான நெகழ்ச்சிகளை ஏற்படுத்திக் கொள்ளுவதில் தவறொன்றும் இல்லை.

### சிக்கல்-16 : தாய்மொழிப் பற்றின்மை

தமிழர்களுக்கே உரிய தாய்மொழிப் பற்றின்மையும், ஆங்கில மோகமும், தமிழ் பயிற்று மொழியாக வளரத் தடையாக இருந்தன. நம்மவர்களுக்குத் தாய்மொழிப் பற்று குறைவு என்பது வெளிப்படை. தாய்மொழிப் பற்றில்லாத இடத்தில் முன்னேற்ற முயற்சி எங்ஙனம் உருக்கொள்ளும்? முன்னேற்றத்திற்கு உயிர் தாய்மொழியன்றோ? அதன் மீது கவலை செலுத்தாது இருப்பின் நாட்டின் கவலை எவ்வாறு நீங்கும்? ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டுத் தமிழ் இளைஞர் படும் தொல்லைகள் மிகுதி. இதற்குக் காரணம் ஆங்கிலேயர் அல்லர்! அறிவு மொழியாகிய ஆங்கிலமும் அன்று!

www.tamilarangam.net



தமிழ்ப் பற்று இல்லாத தமிழர்க்கு உள்ள ஆங்கில மோகமே ஆகும். காந்தியடிகளும் தமிழர்கள் ஆங்கில மோகம் கொண்டவர்கள். இதனால்தான் தமிழைப் பயிற்று மொழியாக்கத் தயங்குகின்றனர் என்பதை,

> "சென்னையில் தாய்மொழியை உபயோகிப்பதற்கான இயக்கம் சில வருடங்களுக்கு முன்புதான் தொடங்கியது. இந்த விசயத்தில் தமிழர்களை விடத் தெலுங்கர்கள் இன்னும் அதிக விழிப்புடன் இருக்கின்றனர். தமிழர்கள் ஆங்கிலத்தின் செல்வாக்கிற்குப் பெரிதும் ஆட்பட்டிருப்பதால் தமிழைப் பயிற்று மொழி ஆக்குவதற்கான முயற்சிகளைச் செய்ய அவர்களுக்கு ஊக்கம் இல்லாமற் போய்விட்டது"

என்று குறிப்பிட்டார்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் படித்த தமிழர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளுவது முதல் பெருங்கூட்டங்கள் அமைத்துச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவது வரையுள்ள அனைத்து நிகழ்வுகளும் ஆங்கிலத்திலேயே நடைபெற்றதை கில்பர்ட் சிலேட்டர் என்ற ஓர் ஆங்கிலேயரே பின் வருமாறு குறிப்பிடுகின்றனர். "சென்னையில் ஏற்பட்ட முதன்முதல் அனுபவங்களுள் ஒன்று, காசியில் ஏற்படுத்தப்பட்ட புதிய பல்கலைக் கழகத்தின் சார்பில் வடக்கேயிருந்து வந்த பேச்சாளர்களின் பேச்சைக் கேட்பதற்காகக் கூட்டப்பட்ட ஒரு பெருங்கூட்டமேயாகும். மிகப் பெரிய கூட்டம் அவர்களின் ஆங்கிலப் பேச்சைக் கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது. அந்நகரின் என் கடைசி அனுபவங்களுள் ஒன்று திருவல்லிக்கேணி கூட்டுறவுச் சங்கத்தின் அரையாண்டுக் கூட்டமே."

www.tamilarangam.net



நான் நேரம் சென்றே சென்றேன். அங்கிருந்தவர்களுள் நான் ஒருவன் மட்டுமே ஐரோப்பியன். ஆயினும் எல்லா நடவடிக்கைகளும் ஆங்கிலத்திலேயே இருந்தன. ஐரோப்பியக் குடிகளாக நான்கே நான்குபேர் மட்டுமே உள்ள கும்பகோண நகரில் ஒரு பொதுக் கூட்டத்தில் நடவடிக்கைகள் முழுவதும் ஆங்கிலத்தில் இல்லாமல் தமிழிலேயே இருந்தன. இந்நிகழ்ச்சி "நியூ இந்தியா" பத்திரிகையில் தனிப்பட்ட விறுவிறுப்புடைய ஒரு செய்தியாகக் குறிப்பிட்டிருந்தது. தமிழர்கள் தங்கள் மொழியில் பொதுக் கூட்டத்தை அமைத்தது நாளிதழில் விறுவிறுப்புடைய செய்தியாக வரும் அளவிற்கு அரிய நிகழ்வாக இருந்த இடம்தான் தமிழகம்.

ஆங்கிலத்தோடு ஆங்கிலப் பண்பாட்டைப் பின்பற்றுவதில் மற்ற மாநிலத் தலைவர்களைவிடத் தமிழர்கள் முன்னணியில் இருந்துள்ளதைப் பின்வரும் செய்தி உறுதி செய்யும். "கல்கத்தாவையும் பம்பாயையும் விடச் சென்னையிலேயே இந்தியர் பெரும்பாலோராக மரப்பந்து, வளைகோற் பந்து, வரிப்பந்து, உதை பந்து ஆகியவற்றில் ஈடுபடுகின்றனர். பிரிட்டிஷ் கேளிக்கைகளை மிகவும் உயர்வாகக் கருதித் தமிழர்கள் பின்பற்றுகின்றனர். தனித் தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்த மறைமலையடிகளின் ஆங்கிலம் மற்றும் ஆங்கிலேயர் பற்றிய எண்ணப் போக்குகள் (1917) பின்வருமாறு : காந்தியடிகள் கதர் உடுக்கச் சொல்கிறார். அது நம் நாட்டளவில் அன்பு காட்டுவதாகும். நாம் அப்படிச் செய்தால் பயிர்த் தொழில் புரியாது கைத்தொழிலையே நம்பி ஆடைகள் நெய்தனுப்பும் ஆங்கில நன்மக்கள் வாழ்வதெப்படி? ஆகவே ஆங்கிலேயர் அரசாங்கம் மட்டுமே மிகச் சிறந்த ஒரே ஒரு அரசாங்கம் என்பதனைத் தமிழ் மக்கள் குறித்துக் கொள்ள வேண்டும்." இவ்வாறு குறிப்பிடும் மறைமலையடிகள் தமது நாட்குறிப்பு முழுவதையும் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். அவர்

www.tamilarangam.net


தமது தனித் தமிழ் நூல்களுக்கு எழுதிய முன்னுரைகளில் பெரும்பாலானவற்றை ஆங்கிலத்தில் எழுதியுள்ளமையும் ஈண்டு குறிக்கத் தகுந்தது.

திராவிடத் தந்தை பெரியார் தாய்ப்பால் வைத்தியம் என்று தலைப்பிட்டுத் தம்து "விடுதலை" இதழில் தமிழ்ப் பயிற்று மொழித் திட்டத்தை எதிர்த்து நீண்ட கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். அந்தக் கட்டுரையில், தாய்மொழிப் பற்று என்பது அறிஞர்கள் வெறுக்கத் தக்க ஒருவகைப் பைத்தியம் என்றும், வீட்டுமொழியாகக் கூட ஆங்கிலத்தை ஏற்றால்தான் மக்கள் அறிவு வளர்ச்சி பெற முடியும் என்று விளக்கிச் சொல்கிறார்.

அண்ணா அவர்கள், "இன்றைய தினம் முதற்கொண்டு சர்க்கார் உத்தரவுகளிலும், மற்றவைகளிலும் கையெழுத்துப் போடும்பொழுது தமிழில்தான் போட வேண்டும் என்ற உறுதியோடு வந்தேன். மிக வேகமாக நான்கைந்து காகிதங்களில் தமிழில் கையெழுத்துப் போட்டேன். ஐந்தாவது காகிதம் வரும் பொழுது என்னையறியாமலேயே ஆங்கிலத்தில் கையெழுத்துப் போட்டேன். வெட்கமாகக் கூட இருந்தது. அதற்குப் பிறகு மறுபடியும் தமிழில் போட ஆரம்பித்தேன். ஒவ்வொரு நாளும் நான் எடுக்கிற அந்த உறுதியிலிருந்து அடிக்கடித் தவறிப் போகிற நிலை உருவாவதற்குக் காரணம் ஆங்கில மொழியோடு நமக்கு ஏற்பட்டுள்ள தொடர்பு அந்த அளவிற்கு இருப்பது தான். விரைவிலேயே அதிலிருந்து விடுபட முடியவில்லை என்பதை நான் வெட்கப்படாமல் ஒப்புக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டார். அண்ணாவின் கருத்து தமிழர்களின் உள்ளத்தில் ஊறிப் போன ஆங்கிலத்தின் தொடர்ச்சியான வாழ்வினைக் காட்டுகிறது.

www.tamilarangam.net



இராஜாஜி அவர்கள் "இப்போது நாம் சுதந்திரமும் பெருமையும் நீங்கி அடிமையும் சிறுமையும் அடைந்துள்ளோம். மொழிப் பிச்சையில்லாவிட்டால் வாழ்க்கையே சாத்தியமில்லை என்ற முடிவு கட்டி விட்டது போல் நடந்து கொள்கிறோம்" எனத் தமிழர்களின் தாழ்வு மனப்பான்மையைச் சுட்டிக் காட்டுகிறார்.

இவ்வாறான, தமிழர்களின் தமிழ்ப் பற்றின்மையும், ஆங்கில மோகமும், தாழ்வு மனப்பான்மையும் தமிழ் பயிற்று மொழியாக வளர்வதற்குத் தடைகளாக இருந்தன; இருந்தும் வருகின்றன.

www.tamilarangam.net


## 5. தமிழ் வழிக் கல்வி சிறக்க சில பரிந்துரைகள்

1. தமிழக அரசு மழலையர் பள்ளி முதல் பல்கலைக் கழகக் கல்வி வரை தமிழை மட்டுமே பயிற்று மொழியாக்க வேண்டும்.

2. குறிப்பிட்ட கால எல்லைக்குள் தமிழகக் கல்வித் துறையின் எல்லா நிலைகளிலும் தமிழ்ப் பயிற்று மொழித் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

3. புற்றீசல் போல் நாடெங்கும் பரவி வரும் ஆங்கில மழலையர் பள்ளிகளைத் தமிழ் மழலையர் பள்ளிகளாக்கி அரசின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வரவேண்டும்.

4. தனியார் நடத்தும் எவ்வகைக் கல்விப் பள்ளிகளாயினும் தமிழக அரசின் பாடத்திட்டத்தையே அப்பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்த உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டும்.

5. தன்னாட்சிக் கல்லூரிகளைப் போலவே, உதவி பெறாத் தனியார் ஆங்கிலப் பள்ளிகளையும் அரசின் மேலாண்மையின் கீழ் முழுவதுமாகக் கொண்டு வரவேண்டும்.

www.tamilarangam.net



6. தமிழகத் தொடக்கக் கல்வியில் தமிழ் மொழி தவிர வேறு மொழியைக் கற்பிக்கத் தேவையில்லை. ஆறாம் வகுப்பி லிருந்து ஆங்கிலத்தை ஒரு மொழிப்பாடமாக மட்டும் கற்பிக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

7. தமிழ் நாட்டிலுள்ள எந்தப் பள்ளியாய் இருந்தாலும் முதல் மொழியென்று தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், இந்தி, சமஸ்கிருதம், பிரெஞ்சு எனப் பல மொழிகளைக் குறிப்பிட்டு இவற்றுள் ஒன்றைக் கற்கலாம் என்ற நிலையை மாற்றி முதல் மொழியாகத் தமிழைத் தமிழ் நாட்டில் பயிலும் அனைத்து மாணவர்களும் கட்டாயம் கற்க வேண்டும் என்று அரசு அறிவிக்க வேண்டும்.

8. எட்டு, பத்து, பனிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் தமிழ்த் தேர்வு எழுதாத எந்த மாணவரையும் தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களில் உயர்கல்வி கற்க அனுமதியளிக்கக் கூடாது. வேலை வாய்ப்புப் பதிவு அலுவலகங்களிலும் இந்நடைமுறையே பின்பற்றப்பட வேண்டும்.

9. பள்ளிகளில் புதிய பாடத்திட்டத்தைக் கொண்டு வரும்போது கணிப்பொறியியல், புள்ளியியல் போன்ற பாடங்களைத் தமிழ் வழியாகக் கற்பிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். கல்லூரிகளிலும் புதிதாக வரும் புள்ளியியல், கணிப்பொறியியல், மேலாண்மையியல் போன்ற பாடங்களையும் தமிழில் கற்பிக்க வேண்டும்.

10. கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்குத் தமிழ்வழிப் பாட நூல்கள் தடையின்றிக் கிடைக்க அரசு ஆணை செய்ய வேண்டும்.

www.tamilarangam.net



11. தமிழ் வழிப் படித்துத் தேறும் மாணவர்களுக்குக் கல்லூரிகளில் முதுநிலைப் படிப்பில் கூடுதலான இடங்களை உடனடியாக ஒதுக்கித் தரவேண்டும்.

12. தனியார் கல்லூரிகளில் தமிழ் வாயில் இல்லாத அவல நிலையை மாற்றி அமைக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும். இக்கல்லூரிகளில் வணிக நோக்கில் நடத்தப் பெறும் பாடப்பிரிவு களைத் தமிழ் வழியிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

13. பல்கலைக் கழகத்தில் நேரடியாகச் சேர்ந்து பயிலும் மாணவர்களுக்குத் தமிழ் வாயில் இல்லாத அவல நிலையே தமிழ் நாட்டில் உள்ளது. இதை மாற்றி அனைத்துத் துறைப் பாடங்களையும் தமிழிலேயே நடத்த வேண்டும். பல்கலைக் கழகங்களிலுள்ள ஆய்வுத் துறைகளில் தமிழ்த்துறை தவிர பிற துறைகளில் தமிழே இல்லை. கலைப்பாடங்கள், அறிவியல் பாடங்கள் என வரும் அனைத்துப் பாடங்களிலும் ஆய்வுகள் தமிழிலேயே நடைபெற வேண்டும்.

14. தமிழ் வழியாகவோ, ஆங்கிலம் வழியாகவோ படித்துத் தமிழில் தேர்வு எழுதும் மாணவர்களின் விடைத்தாள்களைத் தமிழ்வழிப் பாடங்களை நடத்தும் பேராசிரியர்களே மதிப்பீடு செய்ய வேண்டும்.

15. தமிழ் ஆட்சி மொழியைத் தலைமைச் செயலகத்திலிருந்து தொடங்கித் தமிழ்நாட்டின் அனைத்து இடங்களிலும் உள்ள அரசு நிறுவனம், அரசுச் சார்பு நிறுவனம், தனியார்

www.tamilarangam.net



நிறுவனம் ஆகிய அனைத்திலும் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும்.

16. தமிழக அரசு தேர்வாணைக்குழு மூலம் நடத்தப்பெறும் அனைத்துத் தேர்வுகளையும் தமிழிலேயே நடத்தப் பெறுதல் வேண்டும்.

17. தமிழக அரசின் ஆணைகள் அனைத்தும் தமிழில் மட்டுமே வெளியிடப்படவேண்டும்.

18. தமிழ் ஆட்சி மொழி தொடர்பான ஆணைகளில் உள்ள விதி விலக்குகள் அனைத்தும் நீக்கப்பட்டு தமிழே ஆட்சி மொழி என்ற நிலையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டும்.

19. தமிழ் வளர்ச்சித் துறையிலும், அதனுள் அடங்கிய துறைகளிலும் பணியாற்ற வரும் எல்லா அலுவலர்களும் தமிழில் பட்டப்படிப்புப் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று அரசாணை பிறப்பிக்கப்படவேண்டும்.

20. நேர்முக உதவியாளர்களைக் கொண்ட அனைத்து உயர் பணிகளில் (ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்கள், துணைச் செயலர்கள், முதல் மாவட்ட, வட்ட ஆட்சியாளர்கள் ஈறாக) உள்ளவர்களுக்கு அமர்த்தப் பெறும் நேர்முக உதவியாளர்களுள் (P.A.) ஒருவராவது தமிழில் பட்டப்படிப்பு பெற்றவராக இருக்க வேண்டும் என்பதை அரசாணையால் நடைமுறைப்படுத்தித் தமிழ் வளர்க்க வேண்டும்.

21. அரசு உயர் பதவிகளில் நியமனம் செய்யப்படுபவர்கள் தமிழில் ஆட்சி நடத்துவதில் நம்பிக்கையுள்ளவர்களாக

இருக்க வேண்டும். ஒவ்வொரு துறையிலும் தமிழில் ஆட்சி நடைபெறத் துணையாக ஓர் உயர் அலுவலரை நியமனம் செய்தல் வேண்டும்.

22. மற்ற மொழிகளில் படித்தோர் தமிழில் அறிவு பெற வாய்ப்பளித்து, அதில் தேர்ச்சி பெற்றோரை அரசுப் பணிகளில் நிரந்தரமாக நியமனம் செய்ய வேண்டும்.

www.tamilarangam.net



# 6. துணை நூற் பட்டியல்


க.ப. அறவாணன் : மொழிப்பாடம் - தமிழ்க்கோட்டம் 1988-சென்னை.

ஆதவன் சுந்தரம் : வரும் பத்தாண்டுகளில் தமிழ்ப்புத்தக வெளியீடு - நேசனல் புக் டிரஸ்ட் - 1978 - சென்னை.

இராதா செல்லப்பன் : கலைச்சொல்லாக்கம் - மங்கை 1985 - திருச்சி.

இரா.இராமரத்தினம் : மகாத்மா காந்தி நூல்கள் - காந்தி நூல் வெளியீட்டுக் கழகம் - 1964 - சென்னை.

கீ. இராமலிங்கம் : ஆட்சித்துறைத் தமிழ் - கழக வெளியீடு - 1968 - நெல்லை.

ஆ. கந்தையா : சீராக்கம் வேண்டாமா? காந்தளகம் - 1988 - சென்னை.

பா. கல்யாணி : பள்ளிக்கூடங்களில் பயிற்றுமொழி தமிழா? ஆங்கிலமா? மக்கள் கல்வி இயக்கம் - 1990 - திண்டிவனம்.

கு. காமராஜ் : நமதுபணி - தமிழ்ப்பண்ணை - 1965 - சென்னை.

www.tamilarangam.net


பொன். கோதண்டராமன் : செந்தமிழ் - தமிழ் நூலகம் - 1983 - சென்னை.

மு. கோவிந்தராசன் : சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்க் கல்வி வளர்ச்சி - சரசுவதி பதிப்பகம் - 1985 - சென்னை.

த. கோவேந்தன் : மொழி குறித்து இலெனின் - அப்பல்லோ - 1989 - சென்னை.

சத்தியமூர்த்தி : சத்தியமூர்த்தி பேசுகிறார் -தமிழ்ப்பண்ணை - 1946 - சென்னை.

சாலய் இளந்திரையன் : புதிய கல்விக் கொள்கை ஒன்பது கோணங்கள் - பாரி நிலையம் - 1986 - சென்னை.

ம.பொ.சிவஞானம் : தமிழா? ஆங்கிலமா? இன்பநிலையம் - 1961 - சென்னை.

ம.பொ.சிவஞானம் : விடுதலைக்குப் பின் தமிழ் வளர்ந்த வரலாறு - பூங்கொடி - 1978 - சென்னை.

ம.பொ.சிவஞானம் : கல்வியில் மாறுதல் தேவை ஆனால் அணுகுமுறை சரியல்ல! - பூங்கொடி -1986 - சென்னை.

கா. சிவத்தம்பி : தனித்தமிழ் இயக்கத்தின் அரசியற் பின்னணி, சென்னை புக் ஹவுஸ் - 1977 - சென்னை.

அ. சீனிவாசன் : ஜீவாவின் தமிழ்ப் பணிகள் - என்.சி.பி.எச். 1988 - சென்னை.

www.tamilarangam.net




சுபேசன் சர்க்கார் : வங்காள மறுமலர்ச்சி - என்.சி.பி.எச். - 1988 - சென்னை.

த. சுந்தரராசன் : தமிழ் வழிக்கல்வி - வளனரசுப் பதிப்பகம் - 1988 - சென்னை.

சி. சுப்பிரமணியம் : தமிழால் முடியும் - வள்ளுவர் பண்ணை - 1962 - சென்னை.

பெ. தூரன் : பாரதி தமிழ் - இன்ப நிலையம். - 1963 - சென்னை.

ப. நெடுமாறன் : மத்திய மாநில உறவு - தமிழ்ப்புத்தகாலயம் - 1985 - சென்னை.

எம். பக்தவச்சலம் : தமிழை வளர்ப்போம் வாரீர் - இமயப் பதிப்பகம் - 1963 - சென்னை.

தெ.பொ.மீனாட்சி சுந்தரம் : தமிழ் மணம்; மீனாட்சி புத்தகநிலையம் 1962 - மதுரை.

ச. முத்துக்குமரன் : நெஞ்சில் நிறுத்துங்கள் - கழக வெளியீடு - 1990 - நெல்லை.

முத்துச்சண்முகன், வே.சிவனுப்பாண்டியன் : தமிழ்வழிக் கல்லூரிக் கல்வி முத்துப்பதிப்பகம் - 1987 - மதுரை.

மணவை முஸ்தபா : காலம் தேடும் தமிழ் - மீரா பப்ளிகேசன்ஸ் - 1987 - சென்னை.

எஸ். மோகன் குமார மங்கலம் : இந்தியாவின் மொழிச்சிக்கல் - என்.சி.பி.எச். - 1965 - சென்னை.

எஸ். வையாபுரிப்பிள்ளை : தமிழின் மறுமலர்ச்சி - பாரி நிலையம் - 1960 - சென்னை.

www.tamilarangam.net


## ஆங்கில நூல்கள்


| | | |
|---|---|---|
| E. Annamalai (Ed) | : | language Movements in India, C.I.I.L. - 1979 - Mysore. |
| T.S. Avinasilingam | : | Ghandhiji"s Expriments in Education, Govt. of. India Press, 1960 - New Delhi |
| M.G. Chaturvedi | : | Languages and Medium of Instructions in Indian School - NCERT - 1981 - New Delhi. |
| M.K. Ghandhi | : | Medium of Instruction. Navasivan Publishing House, 1954 - Ahmedabad. |
| S.K. Kochhar | : | Pivotal Issues in Indian Education, Sterling Publications - 1981 - New Delhi. |
| A.L. Mudaliyar | : | Education in India - Asia Publishing House, - 1960 - Bombay. |
| P.R. Panchamukhi | : | Studies in Educational Reform in India - Himalaya Publishing House - 1989 - Pune. |
| D.P. Pattanayak | : | Multi Lingualism and Mother Tongue Education - Oxford University Press - 1981 - New Delhi. |
| Santhosh Aggarval | : | Three Language Formula and Education Problem - Gain Publishing House, 1991 - New Delhi. |
| Takdir | : | The Modernization of languages in Asia, University of Malaysia - 1967 - Kualalumpur. |


* ◆ *

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிமுகம்



திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவரான இந்நூலாசிரியர் **டாக்டர் க. முத்தையா** பி.ஏ., எம்.ஏ., பட்டங்களை மதுரை அமெரிக்கன் கல்லூரியிலும் எம்.பில். பி.எச்.டி., பட்டங்களைப் பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்திலும் பெற்றவர். இளங்கலை, முதுகலைப் பட்டங்களில் முதல் மாணவராகத் தேறி, தங்கப்பதக்கம் பெற்ற இவர், எம்.பில்., பட்டத்தில் பல்கலைக்கழக முதல் மாணாக்கராகத் தேர்வு பெற்று பொன் முடிப்பும், தங்கப் பதக்கமும் பெற்றார்.

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகவும் மதுரை மாவட்ட அறிவொளி இயக்கத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றியுள்ள திரு. க. முத்தையா தற்பொழுது தருமபுரி மாவட்டத்தின் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநராகப் பணியாற்றி வருகிறார்.

**"தமிழர் சமுதாயம்"** எனுந்தலைப்பில் ஏற்கெனவே நூல் வெளியிட்டுள்ள இவர், பல்வேறு இலக்கிய ஏடுகளில் ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இவரது ஆய்வுத் திறனை அறிந்த நடுவணரசு கலாசாரத்துறை இவரை அத்துறையின் சிறப்புறு ஆராய்ச்சியாளராக்கிச் சிறப்பித்துள்ளது.

நூலின் சிறப்புக்களைத் தெளிவாகச் சொல்லக்கூடிய தமிழுணர்வும், ஆய்வுத்திறனும், துடிப்புணர்வும் மிக்க இளைஞரான **டாக்டர் க. முத்தையா** அவர்களையும், அவர் எழுதிய **"தாய் மொழியில் படிக்கவைப்போம்"** என்ற இந்த நூலையும் தங்களுக்கு அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

தருமபுரி
7.5.2000.

**கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித் தலைவர்
தருமபுரி மாவட்டம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்